# ஜீவசக்தி

# JEEVASAKTHY




சமூக அறிவியல் ஏடு



சீர்திருத்தம் வேண்டிநிற்கும் உயர்கல்வி

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
NO. 2029



அலைகளின் நடுவே வாழ்க்கை

இரட்டைச் சிறப்பிதழ்

With the Best Compliments From

**JANATHA STEELS**

20 QUARY ROAD,
COLOMBO - 12.

T. Phone: 25807.

With the Best Compliments From

**LANKA STEEL CENTRE**

GENERAL HARDWARE MERCHANTS
&
IMPORTERS

316 A, Old Moor Street,
Colombo - 12.

T'Phone: 20104

"MANI OSAI" JAFFNA.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 2029......

# ஜீவ சக்தி

காலாண்டு சஞ்சிகை

ஜீவன்: 1 தை - ஆவணி சக்தி: 3



உள்ளே...

எயிட்ஸ் — 7

சீர்திருத்தம் வேண்டி நிற்கும் பல்கலைக் கழகக் கல்வி — 9

பெரொஸ்ரோக் கொரியா — 25

உயிரினவியல் நிர்ணயமும் பெண்களின் நிலையும் — 27

இயற்கை உரிமைகள் — 34

குழந்தைகள் பாராமரிப்பு — 38

கடலோரக் கதை கேளீர் — 49

தொழிலாளர் தினம் — 65

இதழின் விலை:- 15/-
தொடர்புகட்கு:
'ஜீவசக்தி'
59, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஜீவநாதம்

### சமூகச் சீர்கேடுகள்

''யாழ் மாநகர சபை எல்லைக்குள் இறந்த ஆண்களில் ஒருவரைத் தவிர மற்றவர்கள் புகைப் பிடிக்கும் பழக்கமுடையவர்கள்'' இவ்வாறு யாழ் வைத்திய சங்க ஏழாவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை குறிப்பிடுகின்றது.

''எமது பிரதேசத்தில் மாணவர்கள் மத்தியில் புகைப் பிடித்தல், மதுபானம் அருந்துதல், போதைவஸ்து பாவனை என்பன பெருமளவில் அதிகரித்து விட்டது'' இப்படி ஒரு செய்தி கூறுகின்றது.

மேலே கூறப்பட்ட இரண்டு செய்திகளும் எமது சமூகத்தின் மீது பற்றுக் கொண்டுள்ள எவரையும் கவலையடையச் செய்யும் என்பதில் ஐயமில்லை. மேற்கூறியவை எமது சமூகச் சீர்கேட்டின் ஒரு பகுதியே பல ஆய்வுகளை மேற்கொண்டால் இதுபோல் மேலும் கவலையளிக்கும் தகவல்கள் வெளிவரலாம்.

பாடசாலை, கல்வி நிறுவனங்கள், மற்றும் பல்கலைக்கழகத்தில் பல மாணவர்கள் ஒன்று கூடுகின்றனர். இவர்கள் அறிவியலில், தமது கற்கைநெறியுடன் சம்பந்தமான பல விடயங்களைத் தங்களுக்கிடையில் ஆராய்ச்சிக்கு உட்படுத்த வேண்டும். இதன் வாயிலாகப் பல புதிய சமூக முன்னேற்றக் கருத்துக்களை முன்வைக்க வேண்டும் இதுதான் ஒரு ஆரோக்கியமான கல்வி முறையால் ஏற்படக்கூடிய விளைவு. ஆனால் இவற்றிற்கெல்லாம் எதிமாறாக மாணவர்கள் ஒன்றுகூடிப் பல தீயபழக்கவழக்கங்களைத் தமக்குள் பகிர்ந்து கொள்கிறார்கள். தமது உடல் நலத்திற்கு ஏற்படும் தீங்குகளைப்பற்றி தெரியாமலும், எவ்வித தீர்க்கதரிசனமும் இன்றி தீயபழக்கங்களை பழகிக்கொள்கிறார்கள் இதன் மூலம் எமது சமூகத்தின் எதிர்காலத்தையே பாழடையச் செய்கின்றனர்.

இவ்வாறான தீயபழக்கவழக்கங்களை உடையவர்கள் கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள் போன்ற தீங்கியற் குற்றங்களைச் செய்யமுற்படலாம். இத்தகைய பாதிப்புக்கள் இன்று பெருமளவில் இல்லாவிடத்தும் எதிர்காலத்தில் எமது சமூகத்தின் மீது பாரியதாக்கத்தினை ஏற்படுத்தலாம். எமது சமூகமும் இன்று பல மேற்கத்தைய நாடுகளில் நிலவிவரும் சமூக கலாச்சார சீரழிவுகளுக்கு ஆளாக நேரிடலாம்.

எமது சமூகத்தில் இன்று காணப்படும் சமூகச் சீர்கேடுகளை களைவதற்கு நன்நோக்கு கொண்ட யாவரும் முன்வர வேண்டும். இதன் மூலம் தீய பழக்கவழக்கமுடையவர்களை அதிலிருந்து விடுபடச் செய்து சமூகத்திற்கு உண்மையான சேவையை ஆற்றமுடியும்.

மாணவர்கள் மத்தியில் காணப்படும் சீர்கேடுகளைக் களைவதற்கு குறிப்பாக பெற்றோரும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும்.

சமூகத்தில் காணப்படும் ஒழுக்கக்கேடுகளை கட்டுப்படுத்துவதற்கு சமூக சேவை நிறுவனங்கள், மத நிறுவனங்கள், பல்கலைக்கழகம் என்பன முன்வரவேண்டும்.

பல ஆய்வுகள், கருத்தரங்குகளை மேற்கொள்வதன் மூலமும் தொடர்பு சாதனங்களின் மூலமும் இத்தகைய சீர்கேடுகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதன் மூலமும் ஓரளவு கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரமுடியும்.

இத்தகைய பழக்க முள்ளவர்களை வெறுத்தொதுக்காமல் அவர்களுக்குரிய சிகிச்சை முறையை அளித்து அவர்களையும் இந்த சமூகத்துடன் இணைத்துகொள்ள வேண்டும் அவர்களது கவனம் பிறதுறைகளினை நாடுவதற்குரியதாக மாற்றப்படவேண்டும். இதற்கு உளவியல் ரீதியான சிகிச்சை முறைகள் பெரிதும் உதவும்.

பிரச்சனைகள், கவலைகள் அல்லது மனச்சோர்வு ஆகியவற்றினை குறைக்க பலர் தீயபழக்க வழக்கங்களில் நாட்டம் கொள்ளுகின்றனர். ஆனால் இறுதியில் இப்பழக்கவழக்கங்களினாலேயே மிகப்பெரிய பிரச்சனைகள், கவலைகள் மனச்சோர்விற்கு உள்ளாகின்றனர். இவற்றை அவர்களுக்கு உரியமுறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் நல்ல மாற்றங்களை கொண்டுவர முடியும்.

சமூக சீர்கேடுகளை களைவதற்குரிய முயற்சியில் பலர் இதயசுத்தியுடன் ஈடுபட்டாலே நற்திருப்பம் ஏற்படவாய்ப்புண்டு. எமது சமூகம் இருளடைந்து விட்டது. எங்கும் ஒளியில்லை என்று எல்லோரும் முறையிட்டு கொண்டிருந்தால் ஒளியேற்பட முடியுமா? ஒரு சிலராவது சிறிய மெழுகுவர்த்தியையதானும் ஏற்றக்கூடாதா?

உலகமே எமது தேசம்
சேவையே எமது மதம்

— ஆசிரியர்

---

அன்பார்ந்த வாசகர்களே!

பல நெருக்கடிகளின் காரணமாக உங்கள் 'ஜீவசக்தி' வெளிவருவதற்கு தாமதமாகிவிட்டது. முக்கியமாக நிதிநெருக்கடியும் அதில் ஒன்று. அதனால் இந்த ஆண்டின் முதலிரண்டு காலாண்டுக்குரிய இதழ்கள் ஒன்றாக இரட்டைச் சிறப்பிதழாக உங்கள் கைகளில் தவழ்கின்றது. 'ஜீவசக்தி' புதிய பொலிவுடன் புதிய முகவரியுடன் தொடர்ந்து வெளிவரும். ஈழத்தில் வெளிவரும் அறிவியல் ஏடான ஜீவசக்தியிற்கு உங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் என்றுமே இருக்குமென நம்புகின்றோம்.

— ஆசிரியர் குழு

## அறிஞர்களின் அறிவு மொழிகள்

### 3. அறிவு

✳ உண்மையான அறிவு என்றால் என்ன? எது நேர்மையான பாதையைக் காட்டுகின்றதோ, அதுவே உண்மையான அறிவு.

— ஜேம்ஸ் அலன்.

✳ தெரிந்ததை தெரியுமென்றும், தெரியாததை தெரியாதென்றும் சொல்வதுதான் உண்மையான அறிவு.

— கன்பூஷியஸ்

✳ அறிவு பெற்றதின் முடிவான பலன், அது ஒழுக்கத்தை வளர்ப்பதுதான்.

— காந்தி

✳ அறிவு அவதானிப்பை தருகின்றது.

— கிருஷ்ணமூர்த்தி

✳ அறிவு இல்லாதவர்களின் கண்ணியம் பலவீனமானது, பயனற்றது என்றால் கண்ணியம் இல்லாதவர்களிடம் உள்ள அறிவு ஆபத்தானது, மிகவும் அஞ்சத்தக்கது.

— ஜே. ஜான்ஸன்

✳ அறிவை தேடுங்கள்! அது நம்மை ஆற்றலுடையவர்களாக ஆக்குகின்றது. அறிவு — தனிமையில் தோழன், இன்பத்திற்கு வழிகாட்டி, துன்பத்திலோ ஆதரவாளி, நண்பர்களுக்கிடையில் அது நமது நல்லாபரணம். பகைவர்களிட மிருந்துஅது நம்மைக் காக்கும் கேடயம்.

— வினோபா

✳ செல்வம் பெருகப் பெருக பணத்தாசை அதிகமாவது போலவே, அறிவு பெருகப் பெருக அதில் ஆர்வம் அதிகமாக வளரும்,

— ஸ்டெர்னி

✳ அறிவைப்போல் அடக்கத்தை சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர் உலகத்தில் வேறு எதுவும் இல்லை.

— புல்லர் விட்டன்

✳ அறியாமையைவிடக் கேவலமான அடிமைத்தனம் வேறு எதுவுமில்லை! அறிவுத் தாய் ஈன்றெடுத்த அருமைக் குழந்தைகளின் பெயர் சுதந்திரம், விடுதலை, உரிமை எனலாம்.

— இங்கசால்

✳ பிழையை எடுத்துக்காட்டாமல் விடுவதானது, அறிவுத் துறையிலே ஒழுக்கமின்மையை ஆதரிப்பதாகும்,

— கார்ல் மார்க்ஸ்

✳ மாறுதலைக் காண அறிவுமட்டும் போதாது; செயல்தான் முக்கியம்.

— எங்கல்ஸ்

✳ அறிவை எது கவர்கின்றதோ அதுதான் அழகு.

# ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் பார்வையில் - கல்வி

"கல்வி" என்றால் என்னவென்பதை நாம் எப்பொழுதாவது எம்மைக் கேட்டதுண்டா என யான் ஆச்சரியப்படுவதுண்டு. நாம் ஏன் பாடசாலைக்குச் செல்லுகிறோம். வெவ்வேறு பாடங்களை ஏன் கற்கின்றோம். பரீட்சைகளில் ஏன் சித்தியடைகிறோம். சிறந்த பெறுபேறுகளைப் பெற ஏன் ஒருவரோடொருவர் போட்டி போடுகின்றோம். கல்வியெனபதன் கருத்துத்தான் யாது? இவையெல்லாம் என்ன? இது முக்கியமானதோர் கேள்வி— மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும், பிதா, மாதாக்களுக்கும், இவ்வுலகத்தை நேசிப்பவர் ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்காக நாம் என் போராடுகிறோம்? சில பரீட்சைகளில் சித்தியடைந்து பதவி ஒன்றினை வகிப்பதற்கா? அல்லது கல்வியின் செயறபாடு, இளமையிலேயே வாழ்க்கையின் வழிமுறைகளைத் தெரிந்து கொள்வதற்கு எமமைத் தயார் செய்வதா? பதவியொன்றினை வகித்து வாழ்க்கையை நடத்துவதற்குக் கல்வி அவசியந்தான். ஆனால், அதுதான் முழுமையானதா? அதற்கு மட்டும்தான் நாம் கறபிக்கப்படுகிறோமா? உண்மையாக வாழ்க்கை என்பது ஒரு தொழில் அல்ல. வாழ்க்கை இதற்கும் மேலானது. மிகப்பாந்த அளவிலானது. மர்மமானது. இதில் மக்களாகிய நாம் செயற்படுகின்றோம். வாழ்வதற்கெனவே நாம் எம்மைத் தயார் செய்தோமானால் வாழ்வின் முழுக்கருத்தினையும் நோக்கத்தினையும் இழந்தவராவோம். வாழ்க்கை, பரீட்சைகளுக்குத தயார் செய்வதிலும், கணிதம், பௌதீகம் மற்றும் பிறவற்றில் பாண்டித்தியம் பெறுவதிலும் பார்க்க அதிமுக்கியமானது.

ஆகவே, ஆசிரியர்களாயினும் சரி, மாணவர்களாயினும் சரி நாம் என கல்வி கற்கின்றோம் / கற்பிக்கபபடுகிறோம் என்று எம்மை நாமே கேட்பது முக்கியமானதல்லவா? வாழ்க்கை என்பது என்ன? இது ஒரு பிரமாதமான பொருளல்லவா? பறவைகள், மலர்கள், செழுமையான மரங்கள, நடசத்திரங்கள், ஆறுகள், அவற்றிலுள்ள மீன்கள் யாவும் வாழ்வுதான். வறுமை, செழுமை, குழுக்களிடையே, சமூகங்களுக்கிடையே, நாடுகளுக்கிடையே சதா நடைபெறும் போர்கள், சமயம், தியானம், மன ஆழத்தில் பதிந்துள்ள உணர்ச்சிகளான பொறாமை, பேராசை, தீவிர உணர்ச்சிகள், பயங்கள், எதிர்ப்பார்ப்புகள, நிறைவேற்றங்கள் யாவும் வாழ்வுதான். இவற்றுடன் வேறுயாவும் வாழ்வுதான் ஆனால், நாம் அதனது ஒரு சிறு மூலைப்பகுதியைத்தான் புரிந்து கொள்ள எம்மைத் தயார் செய்கிறோம். நாம் சில பரீட்சைகளைச் சித்தியடைகிறோம், பதவியொன்றினை வகிக்கின்றோம், திருமணம் செய்கின்றோம, குழந்தைகளைப் பெறுகின்றோம் அதன்பின் மேன்மேலும் எந்திரமயமாகின்றோம். நரம் ஆவல், பயம், வாழ்க்கையின் மீது பயம் உள்ளவர்களாகவே இருக்கின்றோம்.

எனவே, கல்வியினது நோக்கம் முழு வாழ்க்கையின் முற்று முழுவதான செயற்பாடுகளைக் கண்டறிவதற்கு எமக்குதவுவதா அல்லது திறனான ஒரு பதவியினைப் பெறுவதற்த எம்மைத் தயார்படுத்த உதவுவதா?

நாம் ஆண்களாகவும் , பெண்களாகவும் வளர்ந்துவரும் பொழுது எமக்கு என்ன நடக்கப் போகிறது? நீர் வளர்ந்த பின்பு என்ன செய்யப் போகின்றீர் என எப்பொழுதாவது உங்களை நீங்களே கேட்டதுண்டா? எப்படியும் நீங்கள் திருமணம் செய்வீர்கள். நீங்கள் எங்கிருக்கிறீர்கள் என்று கேட்பதற்கு முன்னரே தந்தையர்களாகவும், தாயார்களாகவும் ஆகிவிடுவீர்கள். அதன்பின்னர் உத்தியோகத்துடன் ஒன்றிவிடுவீகள் அல்லது சமையலறையுடன் இணைந்துவிடுவீர்கள். இதிலிருந்து காலகெதியில் வாடிப்போய் விடுவீர்கள். இதுதான் வாழ்க்கையா? என நீங்கள் எப்பொழுதாவது உங்களைக் கேட்டதுண்டா? ஏன் நீஙகள் கேடகக் கூடாது. உங்களது குடும்பம் செல்வமுடையதாயிருப்பின் உமது தகப்பன் வசதியானதொரு பதவியைக் கொடுக்கலாம் அல்லது வசதியான

இடத்தில் நீர் திருமணம் செய்யலாம். ஆனால், இதிலிருந்து நீர் சீரழிந்து சிதைந்து போவீர்.

வாழ்க்கையினது பரந்துபட்ட மகிழ்ச்சிகளையும், துக்கங்களையும் அவற்றினுள் அமிழ்ந்திருக்கும் விசேட அழகுகளையும் அறிவதற்குக் கல்வி உதவவில்லையானால் நிச்சயமாகக் கல்வி அர்த்தமற்றதொன்றாகிவிடும். உங்கட்குப் பல பட்டங்கள் கிடைக்கலாம். பெயரின் பின்னர் பல எழுத்துக்கள் காணப்படலாம் நல்லதோர் பதவியும் கிடைக்கலாம் ஆனால், அதன்பின் என்ன? உங்களது மனம் புத்தியில்லாததாகவும், மந்தகதியுடையதாகவும், களைப்புடையதாகவும் இருந்தால் இவையெல்லாம் இருந்தும் என்ன? ஆகவே வாழ்க்கையென்பது என்னவென்பதை நீங்கள் இளைஞராக இருக்கும் பொழுது ஆராய வேண்டாமா? உண்மையான கல்வியின் செயற்பாடு மேற்குறிப்பிடப்பட்ட பிரச்சனைகளுக்கு விடைகாண வேண்டிய புத்திசாலித்தனத்தை உங்களிடம் வளர்க்க உதவ வேண்டாமா? புத்திக்கூர்மை என்றால் என்னவென்பது உங்களுக்குத் தெரியுமா? உண்மையாக அது எதுவித பயமுமில்லாது, வரையறையில்லாது சுயமாகச் சிந்தித்து எது நிஜம், எது உண்மை என்பதைக் கண்டறியும் ஒரு ஆற்றலே. நீங்கள் பயந்த சுபாவமுடையவர்களாக இருந்தால் புத்திக்கூர்மையுடையவர்களாக இருக்க முடியாது. எந்த உருவிலான அபிலாஷை என்றாலும் அது ஆத்மீகத்திற்குரியதாகவோ அல்லது இம்சைக்குரியதாகவோ இருப்பினும் விசாரத்தைத்தான் கொண்டுவரும். பயத்தைக் கொடுக்கும். எனவே, தெளிவான, எளிமையான, நேரான புத்திக் கூர்மையை கவலையுடைய மனம் அமைப்பதற்குதவாது.

எனவே தான் நீங்கள் இளைஞராக இருக்கும் பொழுது அச்சமில்லாத சூழ்நிலையில் வளரவேண்டியது மிகமிக அவசியமானது எம்மில் பெரும்பாலானோர் வளர்ந்தவுடன் பயமுடையவர்களாகி விடுகின்றோம். வாழ்வதற்குப் பயன்படுகின்றோம். பதவியை இழக்கப்பயப்படுகிறோம், பரம்பரை வழக்கங்களுக்குப் பயன்படுகின்றோம். ஏன்! அயலவர்கள், மனைவி, கணவன் என்ன சொல்வார்கள் என்று பயப்படுகின்றோம். இறப்பிற்கும் பயப்படுகின்றோம். எம்மில் பெரும்பான்மையானோருக்கு பயம் ஏதாவதொரு உருவில் இருக்கவே செய்கின்றது. எங்கு பயமுள்ளதோ அங்கு புத்திக்கூர்மை இல்லை நாம் அனைவரும் இளைஞராக இருக்கும் பொழுது நல்லதோர் சூழ்நிலையில் வாழ முடியாதா? பயமற்றதாக, சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலை. அங்கு நாம் விரும்பியதைத் தன்னிச்சையாகச் செய்யக்கூடிய சுற்றாடல். அப்பொழுதுதான் வாழ்வின் முழுத்தன்மையையும் உணர முடியும்.

வாழ்க்கை என்பது மிக ரம்மியமானது, அது நாம் அமைத்திருப்பது போன்று அவலட்சணமானதல்ல. இதனது வளமான, ஆழமான, மக சௌந்தரியமுள்ள தன்மையினை அறிய நீங்கள் எதனையும் தட்டிக் கேட்கவேண்டும் ஒழுங்கமைப்புள்ள சமயம், பரம்பரை வழக்காறுகள், தற்கால சீர்கெட்ட சமுதாயம் ஆகியவற்றிற்கெதிராகக் ஒரு போராட்டமே செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மனித ஜீவன் என்ற ரீதியில் உண்மையென்பது என்னவென்பதை உம்மால் அறிநது கொள்ள முடியும். இருப்பனவற்றைப் போன்று பாவனை செய்யாது புதிதாகக் கண்டுபிடியுங்கள். அது தான் கல்வி. உங்களது தாய் தந்தையார், ஆசிரியர் சமூகம் சொல்வதெல்லாவற்றையும் அநுசரித்து நடப்பதென்பது மிகச்சுலபமானது. வாழ்வதற்குச் சுலபமானதும், பாதுகாப்பானதும் ஆனால், அதுதான் வாழ்வல்ல, ஏனெனில் அதனுள் அழிவும், பயமும் இறப்பும் உள்ளன. வாழ்வு என்பதன் உண்மையென்ன என்பதை நீராகக் கண்டறிவதாகும். இதனையடைவதற்குப் பூரண சுதந்திரம் இருப்பதுடன், உம்முள் தொடரான எழுச்சியுமிருக்க வேண்டும்.

ஆனால், நீர் அப்படிச் செய்வதற்கு உற்சாகப்படுத்தபடுவதில்லை நீராகவே கடவுள் என்றால் என்னவென்று கேடபதற்கு எவராலும் உற்சாகப்படுத்தப்படுவதில்லை. நீர் அப்படிச் செய்வீராயின் பொய் எல்லாவற்றிற்கும் எதிராகச் செயல்படும் ஆபத்துடையவராவீர்.

உமது தாய், தந்தையார், சமூகம் நீர் பாது காப்பாக வாழ்வதையே விரும்பும். நீரும் அவ்வாறு வாழவே விரும்புவீர். பாதுகாப் பாக வாழ்வதென்பது பொய்மை வாழ்வு. அதாவது, பயத்துடன் வாழ்வது. உண்மை யாக கல்வியினது முக்கியபணி நாமொவ் வொருவரும் அச்சமில்லாது சுதந்திரமாக வாழ்வதற்குதவுவதுதான் பயமில்லாத சூழ் நிலையொன்றினை உருவாக்குவதற்குத் தேவை யானது, நீரும், ஆசிரியரும் அல்லது கல்வி கற்ப்பிப்பவரும் அதுபற்றிச் சிந்திப்பதே.

இதனது கருத்து உமக்கு விளங்குகிறதா? அச்சமில்லாத சூழ்நிலையொன்றினை உருவாக் கலினுல் அதைப் போன்ற அதிவிசேட தன் மையினைக் காணமுடியும். அப்படியான ஒரு நிலையினை நாம் உருவாக்கவேண்டும். ஏனெ னில் உலகம் முழுவதும் முடிவில்லாத போர் களில் உழல்கிறது. அதிகார விருப்புக் கொண்ட அரசியல்வாதிகளினுல் இவை வழி நடத்தப்படுகின்றன. அவ்வுலகம் சட்டநிபு ணர்களை, சட்டபாதுகாவலர்களை, போர்வீரர் களை, பதவிவெறிபிடித்த, ஆசை கொண்ட வர்களை கொண்டதாக ஒவ்வொருவரும் அப்பதவியினைப் பிடிப்பதற்காக யுத்தம் செய் கின்றனர் இவர்களை விட சமயக்குருமார்களும், தம்மை முனிவர் எனக் கூறுவோரும், அவர் களைப் பின்பற்றுவோரும் இவ்வாழ்வில் அல் லது மறுவாழ்வில் பதவி, நிலை போன்றவற் றினை வேண்டி நிற்கின்றனர். இது ஓர் பைத்தியக்கார உலகம் முழுமையான குழப்ப நிலையையுடையது. இங்கு முதலாளித்து வத்தை எதிர்த்துக் கம்யூனிஸ்டுகளும், சம தர்மவாதிகளும் இவ்விரண்டையும் எதிர்த் தும் நிற்கின்றனர். ஒவ்வொருவரும் வேறொருவரை எதிர்த்துக்கொண்டும் பதவி யையும், வசதியையும் பெறும் ஒரு பாதுகாப் பான இடத்தினையும் அடைவதற்காகப் போராடுகின்றனர். வேறுபாடுள்ள கருத்துக் களைக் கொண்ட உலகம் முரண்படுகிறது சாதி, வர்க்கப்பிரிவுகள், வெவ்வேறான இனங்கள், குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மடமைத்தனத்தாலும், கொடுமைத்தன்மை யினுலும் வேறுபட்டு நிற்கும் உலகில் நீர் கற்றுக்கொண்டு பின் வாழ்ந்து செல்ல வேண் டியுள்ளது. இப்படியான விபத்துலகில்தான் உம்மை வாழும்படி உமது பெற்றோர் உற் சாகப்படுத்துகின்றனர். நீரும் அதற்குள் உம் மைப் பொருத்தப்பார்க்கின்றீர்.

கல்வியினது நோக்கம் உம்மை இத்தகைய கேடுகெட்ட சமூக அமைப்புடன் ஒத்துப் போவதற்கு தயார் செய்வதா? அல்லது உமக்கு உண்மையான சுதந்திரத்தைக் கொடுப்பதா? அல்லது புதிய உலகமொன் றினையும், வித்தியாசமான சமூகத்தையும் அமைப்பதா? இப்படிப்பட்ட சுதந்திரம் எதிர் காலத்துக்கல்ல, தற்பொழுது தேவை, அல் லாவிடில் நாம் அனைவரும் அழிக்கப்பட்டு விடுவோம், உடனடியாக சுதந்திரமான ஒரு சூழ்நிலையினை நாம் ஏற்படுத்துவோம். அப் படியென்றுற்றான் நீர் வாழ்ந்து உண்மை எதுவென்பதனைக் கண்டறிய முடியும். புத்தி கூர்மையுள்ளவராக வரவியலும், உலகத்தை நோக்கி நின்று சவால்களை ஏற்கமுடியும், ஒத்துப்போகாது நின்று உள்ளூர, ஆழமாக உளரீதியாகத் தொடர்ந்து கலகம் செய்ய முடியும். ஏனெனில் தொடர்ந்து கலகம் செய்வோரே உண்மையென்பதைக் கண்ட யறிய வல்லவர், வழக்கங்களுக்கு ஒத்துப் போகும் தன்மையுடையவர்களல்லவா, நீர் எப்பொழுது தொடர்ச்சியாக ஆராய்ச்சி செய்கிறீரோ, இடைவிடாது கற்றுக் கொண் டிருக்கிறீரோ, தொடர்ச்சியாக அவதானிக் கிறீரோ அப்பொழுதுதான் உண்மை எது என்பதையும், கடவுள், அன்பு என்பது என்னவென்பதையும் அறியலாம். பயமுள் ளவராக நீர் இருப்பீராயின், ஆராய்ச்சி செய்யவோ, அவதானிக்கவோ, கற்கவோ முடியாது. எனவே, கல்வியினது உண்மை யான செயற்பாடு என்னவெனில் உள்ளும், புறமும் மனித சிந்தனையினை. மனித உற வினை, அன்பினை அறியவிடாது இருக்கும் பயத்தினை அச்சத்தினை வேரறுப்பதாகும்.

"பசியிருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதைவிட மீனைப் பிடிக்கக் கற்றுக்கொடுப்பதே சிறந்தது."

— சீனுப்பழமொழி

# எயிட்ஸ் AIDS

— டொக்டர் ந. ச. சிவராஜா

**எயிட்ஸ் (AIDS)**

எயிட்ஸ் என்னும் நோயின் பெயர் ஆங்கிலத்தில் Acquired Immune Deficiency Syndrome) என்னும் சொற்றொடரின் முதலெழுத்துக்களால் குறிக்கப்படும்.

இந்நோய் ஒருவகை வைரஸ் கிருமியினுல் பரப்பப்படுகிறது. இக் கிருமி Human Immunodeficiency Virus அல்லது சுருக்கமாக HIV வைரஸ் என அழைக்கப்படுகின்றது.

மனித உடலிலுள்ள நிர்ப்பீடனத் தொகுதி உடலை வந்தடையும் நோய்க்கிருமிகளை இயற்கையாகவே எதிர்க்கும் சக்தி வாய்ந்தது. HIV வைரஸ் மனித உடலிலுள்ள நிர்ப்பீடனத் தொகுதியைத் தாக்கி, உடல் கிருமிகட்கு எதிராக போராடும் சக்தியை இழக்கச் செய்கின்றது. இதனுல் எயிட்ஸ் நோயினுல் பாதிப்புற்றோர்கள், பல்வேறு தொற்று நோய்களுக்கு ஆளாகி அவற்றை எதிர்க்கும் சக்தி இல்லாததால் இறுதியில் இறக்க நேரிடுகின்றது.

இந்நோய் ஆபிரிக்கா கண்டத்தில் பல காலமாக இருந்ததாக சந்தேகிக்கப்பட்டாலும், 1981 - ம் ஆண்டுதான் உலகத்தில் முதன் முதலாக எயிட்ஸ் நோயாளி ஒருவர், எயிட்ஸ் என்னும் நோயினுல் பாதிக்கப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பல முக்கியமான பிரமுகர்கள் இந்நோயினுல் பாதிக்கப்பட்டு அவர்கள் இறக்க, இந்நோய் பிரபல்யம் அடைந்தது.

கடந்த 8 வருடங்கட்குள் இந்நோய் 140 நாடுகட்கு பரவி 1 லட்சத்திற்கும் மேற்பட்ட தொகுதியினரை பாதித்துள்ளது என்று உறுதி செய்யப்பட்டது இதைவிட பன்மடங்கானோர் பாதிப்புற்று உறுதி செய்யப்படாமல், அறிவிக்கப்படாமல் இருக்கிறுர்கள். இலங்கையில் இந்நோயினுல் இதுவரை சிலர் பாதிக்கப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கண்டு பிடிக்கப்பட்டு சில காலங்கட்கு முன் இறந்தார். உறுதி செய்யப்பட்டவரில் பெரும்பாலானேர் வெளிநாட்டவர்.

**எயிட்ஸ் நோய் பரவும் முறை:**

ஒரு எயிட்ஸ் நோயாளியின் உடற் திரவங்களில் (Body fluids) HIV கிருமிகள் ஏராளமாக இருக்கின்றன. HIV கிருமிகள் காணப்படும் முக்கியமான உடற் திரவங்கள் பின் வருவன:-

- இரத்தம் (மாதவிடாயின் போது வெளிவரும் இரத்தமும் அடங்கலாகும்.)
- எந்திரியம் (Seminal fluid)
- பெண் இனப்பெருக்க உறுப்பிலிருந்து சுரக்கும் திரவம் (Vaginal secretion)
- தாய்ப்பால்

HIV கிருமிகள் உள்ள உடற்திரமம் ஒருவருடைய உடலுக்குள் செலுத்தப்பட்டால் அவருக்கு எயிட்ஸ் நோய் வரக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. இந்தக் கிருமி காயப்படாத உடற் தோலினூடாக செலுத்த முடியாது. ஆனுல் ஊசி மூலமாகவோ அல்லது மென் சவ்வின் (Mucous memprname) ஊடாகவோ உட் செலுத்தலாம். சிறுநீர்க் குழாய், பெண் பாலுறுப்புகளின் உட்பகுதி, மலவாசல் உட்பகுதி, வாயின் உட்புறம் போன்ற இடங்களில் இந்த மென் சவ்வு காணப்படும்.

**இந்நோய் பரவக்கூடிய முறைகளுள் முக்கியமானவை:**

**பாலுறவு:**

பெரும்பாலானவர்களுக்கு பாலுறவு மூலமாகவே இந்நோய் தொற்றுகின்றது—பாலுறவில் தன்னினப் பாலுறவு (Homosexual Contact) எயிட்ஸ் நோயைப் பரப்புவதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

✳ இரத்தம் ஏற்றுதல்

HIV கிருமியுள்ள நோயாளியினுடையதோ அல்லது நோய் காவியினுடையதோ இரத்தத்தை இன்னொருவருக்கு ஏற்றினால் இரத்தம் ஏற்றப்பட்டவர்களுக்கு எயிட்ஸ் நோயுண்டாகலாம். அடிக்கடி இரத்தம் ஏற்றப்படுபவர்கள் இதனால் முக்கியமாகப் பாதிக்கப்படுவார்கள்.

✳ கிருமி நீக்கம் செய்யப்படாத ஊசிகளைப் பயன்படுத்தல்:

போதை மருந்துகளை ஊசி மூலம் ஏற்றுபவர்கள் பெரும்பாலும் கிருமி நீக்கம் செய்யப்படாத ஊசிகளை பலர் தொடர்ச்சியாகப் பாவிப்பார்கள். பாவிப்பவர்களில் ஒருவருக்கு எயிட்ஸ் நோயிருந்தால் அந்த ஊசியைப் பாவிக்கும் அனைவருக்கும் எயிட்ஸ் நோய் வரும் அபாயம் உண்டு.

தொற்று நீக்கம் செய்யப்படாத ஊசிகளைப் பாவிக்கும் மற்றைய சந்தர்ப்பங்களிலும் இந்நோய் பரவக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

✳ தாயிலிருந்து குழந்தைக்கு:

இக் கருவில் இருக்கும் போதோ, அல்லது குழந்தை பிறக்கும் சந்தர்ப்பத்திலோ தொற்றலாம்.

எயிட்ஸ் நோய்க்கான முக்கிய அறிகுறிகள்:-

✳ தனது எடையில் 10% மேல் திடீரென குறைதல்

✳ ஒரு மாதத்திற்கு மேல் நீடித்த காய்ச்சல்

✳ ஒரு மாதத்திற்கு மேல் நீடித்த வயிற்றோட்டம்

✳ ஒரு மாதத்திற்கு மேல் நீடித்த தொடர்ச்சியான இருமல்

✳ உடம்பில் பல இடங்களில் தோன்றும் நிணநீர் சுரப்பிகளின் வீக்கம் (நெறி போடுதல்)

✳ உடல் முழுவதும் தோன்றும் சொறியுடன் கூடிய சரும நோய்

மேற்கூறிய அறிகுறிகள் இருப்பின் ஒரு வைத்தியரைச் சந்தித்து அறிவுரை பெறல் வேண்டும். சில இரத்தப் பரிசோதனைகள் மூலமே அவரும் எயிட்ஸ் நோயென நிச்சயிக்க முடியும்.

எயிட்ஸ் நோய்க்கு எதிராக நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் (Anti biotics) எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

HIV வைரஸ்கள் ஒருவரின் உடலுக்குள் சென்றால் அவர் இறக்கும் வரை அவருடனேயே இருக்கும். ஆகவே தற்போதய நிலையில் இந்நோய் உண்டாகினால் மரணம் நிச்சயம் என்பதை உறுதியாகக் கூற முடியும்.

ஆகவே இந்நோய் வராது தடுப்பதே இன்றைய நிலையில் உள்ள ஒரே வழி.

எயிட்ஸ் நோய் வராது தடுக்கும் முறைகள்:

✳ தன்னினப் பாலுறவில் ஈடுபடாதிருத்தல்.

✳ பலருடன் பாலுறவு கொண்டதாக சந்தேகிக்கும் ஒருவருடன் பாலுறவு கொள்ளாதிருத்தல்.

✳ போதை மருந்துகளை பாவிக்காதிருத்தலும், போதை மருந்து பாவிப்போருடன் உறவைத் தவிர்த்துக் கொள்ளுதலும்.

✳ ஊசி மருந்துகளை ஏற்ற வேண்டிய அவசியமேற்பட்டால் நம்பிக்கையான வைத்தியரிடமோ, வைத்தியசாலையிலோ போடுதல்.

✳ இரத்தம் ஏற்றப்பட வேண்டிய அவசியமேற்பட்டால் உங்களுக்கு நம்பிக்கையான ஒருவருடைய இரத்தத்தையே ஏற்றல் வேண்டும். பணத்திற்காக இரத்தத்தை விற்பவர்கள் பெரும்பாலும் துர்நடத்தையில் ஈடுபடுகிறவர்கள். அவர்கட்கு நோய்மாத்திரமல்ல, வேறு பல தொற்று நோய்களும் இருக்கலாம். ●

# இலங்கையில் பல்கலைக் கழகக் கல்வியில் விரும்பத்தக்க போக்குகள்

திரு. வ. ஆறுமுகம், B. A. (Hons) Dip. Ed. M. Phil
கல்வியியற் துறை, — யாழ். பல்கலைக் கழகம்.

"பல்கலைக் கழகம் ஒரு நாட்டின் உயிர் நாடி" என்பது அறிவியல் மேதை ஐன்ஸ்ரைன் கூற்று. நாட்டின் கல்விக் கட்டமைப்பின் சிகரமாக விளங்கும் பல்கலைக் கழகம், தனது செயற்பாட்டின் விசாலதத்துக்கூடாக, சமூக வாழ்வின் உயிரோட்டத்துக்கு உந்து சக்தியாக இயங்குகின்றது. அதற்கு இயல்பாக அமைகின்ற ஆளணிச் சிறப்பு நாட்டின் உயர்விற்கு வேண்டிய ஆளுமையையும் ஆற்றலையும் கொடுக்கின்றது. அது மட்டுமல்லாமல், பல்கலைக் கழகமானது அதனிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பங்களிப்பினை வழங்குவதற்கு, அதன் அடித்தளமாக விளங்கும், அதனைப் போஷித்து வளர்க்கும், சமூகத்துடன் பொருத்தப்பாடுடையதாய் இருத்தல் அவசியம். சமூகத்தின் தேவைகளுக்கும் பல்கலைக் கழகத்தின் செயல்வீச்செல்லைக்கும் தொடர்பு இல்லாவிடின் பல்கலைக் கழகமானது அச் சமூகத்தின் எதிர்பார்ப்பினை நிறைவு செய்தல் முடியாது. அதனைச் செய்ய முடியாதவிடத்து, பல்கலைக்கழகத் தத்துவத்துக்கே பொருண்மை இல்லாமற் போய்விடும்.

இந்த நோக்கில், நமது நாட்டுப் பல்கலைக் கழகக் கல்வியின் பரப்பில் வேண்டத்தக்க சில அம்சங்களில் கவனஞ் செலுத்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இங்குக் கருத்திற் கொள்ளப்படுபவை — பல்கலைக் கழகக் கல்வியில் பொறுப்பு, கட்டுப்பாடு, கற்கை நெறிகள், கல்விமொழி ஆகியவையாகும்.

## பொறுப்பு

முதற்கண், பல்கலைக் கழகக் கல்வியில் பொறுப்புப்பற்றிய நிலைமையை எடுத்துக் கொள்வோம். எந்த நாட்டிலும் கல்விக்குரிய பொறுப்பு அரசுடையதாதல் இன்றைய வழக்கு. பல்கலைக் கழகக் கல்வியும் அவ்விதமே அமைகின்றது. உலக அரங்கினை நோக்கினுல், அதற்கான பொறுப்பு பெரும்பாலும் அரசினுடையதாகவே இருத்தலைக் காணலாம். அக் கல்விக்கான செலவுகள், வேண்டிய சட்டதிட்டங்களை ஆக்குதல் ஆகிய நடவடிக்கைகளை அரசே மேற்கொள்ளுவதை அவதானிக்க முடியும். கூட்டாட்சி அரசுகள் உள்ள நாடுகளில் பெரும்பாலும் மாநில அரசுகள் அப் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றன. சில நாடுகளில், மாநிலங்களின் செயற்பாட்டுக்குப் புறம்பாக, மத்திய அரசும் பல்கலைக்கழகக் கல்விக்காய பொறுப்பில் பங்கேற்றுக் கொள்வதுண்டு.

இலங்கையில் பல்கலைக் கழகக் கல்வி வரலாற்றில் அக் கல்விக்கான பொறுப்பு தேசிய அரசினுடையதாகவே இருந்து வந்துள்ளது. 1942 இல் இலங்கைப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஏற்பட்ட பல்கலைக் கழகக் கல்விப் பெருக்கம் இன்று, அரசின் பொறுப்பில், எட்டுப் பல்கலைக் கழகங்களாக விரிவடைந்துள்ளது. இன்றும் அதற்கான பொறுப்பு அரசிடமே உள்ளது. நாட்டின் அரசியலில் மாறிவரும் சூழ்நிலை அப்பொறுப்பினைப்பற்றி மீளாய்வு செய்யவேண்டிய தேவையினைத் தோற்றுவித்துள்ளது. அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்டுள்ள மாகாண அரசு அமைப்பில், அதிகாரங்கள் 'பரவலாக்கப்பட்டுப் பன்முகப்படுத்தப்படும்' நிலையில் கல்வியில் தேசிய அரசின் பங்கு என்ன? மாகாண அரசின் பங்கு என்ன? என்பவை விமர்சனத்துக்குரிய விடயங்களாகும். புதிதாக உருவாக்கப்பட்ட மாகாண

அரசுகளுக்கு, கல்வியில், இடைநிலை மட்டம் உட்பட, பெரும்பாலான பொறுப்புக்களும் அதிகாரங்களும் வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

இடைநிலைக் கல்வியை வளர்த்துச் செல்வதில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானவையா என்பதைப் பற்றி ஆராய்வது இக் கட்டுரையின் பரப்பெல்லைக்கும் அப்பாற் போய்விடும், எனவே. அப் பிரச்சினையைத் தவிர்த்து, அவ்வதிகாரங்களை உண்மையானவை என அப்படியே எடுத்துக்கொண்டு நோக்கின் என்ன எதிர்பார்ப்புக்களைச் சிந்திக்கலாம் என்று பார்ப்போம். இடைநிலைக் கல்வியின் இயற்கையான வளர்ச்சி முழுமை பெறவேண்டுமானால் பல்கலைக் கழகக் கல்வியுடன் அது இயைபாகப் பொருந்திக்கொள்ள வேண்டும் என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். அந்த நிலைப்பாட்டில் நோக்கும்போது, இடைநிலைக் கல்விக்குரிய பொறுப்பு, ஓர் அமைப்பிடமும் பல்கலைக் கழகக் கல்விக்காய பொறுப்பு வேறொரு அமைப்பிடமும் இருத்தல் பொருத்தமானதாக ஏற்றுக்கொள்ள முடியாது. இரண்டும் ஒரே அமைப்பின் பொறுப்பில் வருவதே விரும்பத்தக்கது. அவ்விதமான ஒரு நிலைமையே கல்வியை முழுமையாகத் திட்டமிட வழிவகுக்கும். அதுவே பல்கலைக் கழகக் கல்வியின் வளர்ச்சிக்கும் உதவும். மாகாண வளர்ச்சித் தேவைகளின் அடிப்படையைக் கருத்திற்கொண்டு பல்கலைக் கழகக் கல்வியையும் நெறிப்படுத்த அதுவும் மாகாண அரசின் பொறுப்பில் செயற்படுவது தான் பயனளிப்பதாகும்.

## கட்டுப்பாடு

கட்டுப்பாடு என்பது தொடர்பாக இங்கு முக்கியமாகக் கருத்திற்கொள்ளப்படுவது பல்கலைக் கழகச் செயற்பாட்டில் அரசினால் மேற்கொள்ளப்படும் கட்டுப்பாட்டு அதிகாரம் என்பது குறிப்பிடுவது பொருத்தமாகும்.

பல்கலைக் கழகக் கல்விப் பாரம்பரியம் அறிவியற் சுதந்திரத்தின் அடிப்படையில் எழுந்த ஒன்றாகும். ஆரம்பத்திலிருந்தே பல்கலைக் கழகங்கள் தமது செயற்பாட்டில் எவ்வித வெளியார் தலையீடுமின்றி இயங்கக்கூடியதாக இருந்தது. இலங்கையிலும் இந்த போக்குத் தான் இருந்தது. அண்மைக் காலங்களில் இப் போக்கில் மாறுதல்களை அவதானிக்கலாம். இம் மாறுதல்களும் ஏனைய நாடுகளில் காணப்படும் வழக்குகளைப் போன்றவைதான் எனச் சிலர் கூறலாம். வெளித் தோற்றம் அக் கூற்றை நியாயப்படுத்துவதாக இருந்தாலும் உள்நிலைமை வேறுவிதமானதாகவே இருக்கின்றது. பல்கலைக் கழகக் கல்வியில் அரசு மேற்கொள்ளும் செலவினங்களை உரிய முறையில் ஒழுங்குபடுத்தும் முறையில், அனேக நாடுகள், நிதி சம்பந்தமான நெறியாள்கைக்காக ஒரு மத்திய நிறுவன அமைப்பினை உருவாக்கியுள்ளன. உதாரணமாக — இங்கிலாந்தில் பல்கலைக் கழக மானியக்குழு, இந்தியாவில் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு. இவ்வகையிலான குழுக்கள் நிதி தொடர்பான பங்கீட்டுக் கடமைகளையே ஆற்றுகின்றன என்பதைக் குறித்து, இலங்கையின் நிலைமை வேறானது என்று கொள்ளத்தான் வேண்டும்.

1966 ஆம் ஆண்டில் உயர்கல்வித் தேசிய சபை அமைக்கப்பட்டதிலிருந்து, பல்கலைக் கழகங்களின் செயற்பாட்டில், அரசின் தலையீடு பல்வேறு வழிகளில் புகுந்திருப்பதை நாம் காணலாம். நியமனங்கள், கற்கை நெறிகள், நிதி போன்ற அம்சங்கள் தொடர்பாக இப்போக்கினைப் பார்க்கலாம். உயர் கல்வித் தேசியச் சபையின் அமைப்பு, அதன் செயல்வீச்செல்லை என்பன இத்துறையில் அரசின் தலையீட்டுக்கு வழிவகுத்தன. அவ்வழியில் கல்வி அமைச்சு / கல்வி அமைச்சர் பல்கலைக்கழக அலுவல்களில் குறுக்கிடக் கூடிய வாய்ப்புக்கள் பெருகின. இன்று நடைமுறையிலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழக்கிலும் இதே தன்மையினை அவதானிக்கலாம். இக் குழுவின் செயற்பாடு முன்னைய உயர்கல்வித் தேசிய சபையினுடையது போன்றதே. பல்கலைக் கழகக் கல்வியின் நடைமுறைகள் அதன் செல்வாக்கினுள் கட்டுப்பட்டுக் கிடக்கின்றன என்று கூறினால் மிகையாகாது.

இந் நிலைமையினை நியாயப்படுத்தி விளக்கங் கொடுக்க முயற்சிப்பவர்கள் நாட்டில் பல்கலைக் கழகக் கல்வியைத் திறம்பட நெறிப்

படுத்துவதற்கு இது தேவை என்று வாதாடு வர். பல்கலைக் கழகங்களிடையே ஒரு முக மான வளர்ச்சியை உறுதிப்படுத்தவும், அவற் றுக்கிடையே இணைப்பினை ஏற்படுத்தவும், தேவையற்ற இரட்டிப்பினைத் தவிர்த்து விர யத்தைத் தடுக்கவும் இது உதவும் என்பது அவர்கள் கருத்து. இக் கருத்தினை முற்றாக நிராகரிக்க முடியாது. எனினும், இவ்வகையி லான தலையீடு பல்கலைக் கழகங்களின் தனித் துவத்துக்குத் தடையாகச் செயற்படும் என் பதைச் சுட்டிக் காட்ட வேண்டும். இவ்வ கையிலான மத்திய நிறுவனம், நிதி ஒதுக்கீடு, கல்வித்தரஉறுதிப்பாடு, பொதுக் கொள்கை வகுப்பு என்பவற்றுக்காகத் தேவை என்ரு லும், பல்கலைக் கழகங்கள் தமது அலுவல் களை நடத்துவதில் முழுமையான சுதந்திரம் உடையவையாக இருத்தல் விரும்பத்தக்கது.

## கற்கை நெறிகள்

பல்கலைக் கழகத்தின் மிக முக்கியமான செயற்பாடு அறிவுத்துறையில் சமூகத்துக்கு முதன்மைதாங்கி வழிகாட்டுவது என்பதை எவரும் ஏற்கத்தான் வேண்டும். அறிவை வளர்ப்பதும், தேடுவதும் பல்கலைக் கழகத் தின் கடமையாக இருந்தாலும், அதிலும் தன்னைப் பராமரிக்கும் சமூகத்தின் தேவை களைக் கருத்திற் கொண்டே அது இயங்க வேண்டும். இது தொடர்பாக இங்குக் கவ னத்திற் கொள்ளப்படுவது பல்கலைக் கழகத் தில் வழங்கப்படுகின்ற கற்கை நெறிகளா கும்.

பல்கலைக் கழகங்களில் பயிலப்படும் பாட நெறிகள் கலை, விஞ்ஞானம் என்ற பாரம் பரியப் பகுப்பிலிருந்து, இன்று கலை, விஞ்ஞா னம், பொறியியல், மருத்துவம் என்றும், சமூக விஞ்ஞானம், மனிதப்பண் பியல், இயற்கை விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம் என்றும் வெவ்வேறு கண்ணோட்டங்களில் பகுக்கப்படும் கட்டத் துக்கு வளர்ந்துள்ளன. இவை ஒவ்வொன் றும் தமக்குள் பல்வேறு பாடப் பரப்புக்களை அடக்கியுள்ளன. அண்மைக் காலம் வரைக் கும் இவற்றுக் கூடாக வழங்கப்பட்ட கல்வி யும் அதன் விளைவாகிய அறிவும் ஏட்டுக்கல் விப் பாங்கினதாகவே இருந்துள்ளன. ஏட் டுக்கல்வி சமூகத் தேவைகளை நிறைவு செய்ய முடியாது என்ற உணர்வும், கல்வி வாழ்க் கையுடன் பொருந்தியதாக இருக்கவேண்டும் என்ற சிந்தனையும், பல்கலைக் கழகக் கல்வி நெறிகளில் புதிய போக்கினை ஏற்படுத்தியுள் ளன.

இத்தகைய கருத்து மாற்றங்கள்; பல்கலைக் கழகங்களில் வழக்கிலிருந்த பாரம்பரியப் பாட நெறிகள், வாழ்க்கை மையமான பாடநெறி களுக்கு இடங்கொடுக்கச் செய்தன. வாழ்க் கையோடியைந்த கல்வி என்ற தத்துவத் தின் வழியில், மருத்துவம், பொறியியல் தவிர்ந்த ஏனைய துறைகளிலும் தொழில் சார் கற்கை நெறிகள் பல்கலைக் கழகங்களி லும் இடம் பெறுவதைக் காணலாம். எமது நாட்டிலும் இத்தகைய மாற்றங்கள் இடம் பெற்றன. 1970 க்குப்பின் தொழில் சார் கற்கை நெறிகள் எமது பல்கலைக் கழக மட்டத்தில் புகுத்தப்பட்டதைக் காண லாம். கற்றோர் வேலையின்மை உருவாக்கிய பிரச்சினைகள் பூதாகரமாகப் பெருகிச் சமூக துக்கு ஆபத்தை விளைவித்த வேளை, அதற் குப் பரிகாரமாக முன் வைக்கப்பட்ட மாற்று தொழில்சார் நெறிகளைக் கல்வியில் புகுத்தி யதாகும். 1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற அரசு மாற்றம் இப்போக்கில் இடையீட்டை ஏற்படுத்தியது. அரசின் புதிய கொள்கை வகுப்பு தொழில்சார் நெறிகளின் தொடர்ச் சியை ஆதரிக்கவில்லை. இன்று தொழிற்துறை நெறிகளான மருத்துவம், பொறியியல், விவசாயம் போன்றவை, வர்த்தகம், முகா மைத்துவம் என்பன தவிர்ந்த ஏனைய துறை களில் பல்கலைக் கழகக் கல்விப் போக்குப் பாரம்பரிய பாதைக்குத் திருப்பி விட்டது. என்று முடிவு கட்டுதல் தவறாகாது.

தொழில்சார் கற்கை நெறிகளை உறுதி யுடன் தொடர்வதற்கு எதிரான காரணங் கள், என்ன வழிகளில் நியாயப்படுத்தப்பட் டாலும், நாட்டுக்கு நன்மை பயப்பனவா என்பது ஆராயப்படவேண்டிய ஒரு விடய மாகும். எமது நாட்டைப் பொறுத்த வரை

யில் கல்வியை ஓர் ஆடம்பர பொருளாகக் கருதி முதலீடு செய்ய முடியாது. நாட்டின் பொருளாதார வளம் அதற்கு இடமளிக்காது. கல்வியானது, எல்லா மட்டங்களிலும், சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதாக, எவ்வித பிரச்சினைக்கும் மூலமாக விளங்குவதைத் தவிர்த்ததாக, இருத்தல் வேண்டும். பல்கலைக் கழகக் கல்வி இக் கருதுகோளுக்குப் புறம்பானதாகச் செயற்படக் கூடாது.

## கல்வி மொழி

ஒரு மாணவன் கற்கும் கல்வி அவனுடைய வாழ்வில் சுவற வேண்டுமேயானால் அது அவனிடம் ஆழமாகப் பதியவேண்டும். அதற்கான அறிவு, விளக்கம் என்பன அவனுக்கு எளிதில் ஏற்படவேண்டும். இதில் முக்கிய பங்கினை வகிப்பது அக்கல்வியை வழங்குவதற்கு ஊடகமாகப் பயன்படுத்தப்படும் மொழியாகும். கல்வித் தத்துவ, உளவியற் கோட்பாடுகள் பிள்ளையின் தாய் மொழியே அதன் கல்வி மொழியாக அமைய வேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளன. இக்கருத்து எல்லா மட்டங்களுக்கும் பொருந்துவதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பல்கலைக்கழக கல்வியும் இதற்கு உட்பட்டதேயாகும்.

இலங்கையில், கல்வி மொழி பற்றிய நடைமுறைக்கொள்கை, பள்ளிக்கூட மட்டத்தில் எவ்வித மயக்கமும் இல்லாமல், தெளிவானதாக இருக்கின்றது. அங்கு ஒவ்வொரு பிள்ளையும் தனது தாய்மொழியில் கற்கும் உரிமையினையும் வாய்ப்பினையும் பெற்றுள்ளது. ஆனால், பல்கலைக் கழக மட்டத்தைப் பொறுத்து நிலைமை இன்னும் சீரானதாக இல்லை. கலைத்துறைப்பாடங்கள் தாய்மொழியில் கற்பிக்கப்படுகின்றன. விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளில், தாய்மொழி மூலம் கற்கும் உரிமை பெயரளவில்' இருந்தாலும், ஆங்கிலமே பெருமளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. அதே போல, முகாமைத்துவம் போன்ற கலைத் துறைப் பாடங்கள் சிலவற்றிலும் ஆங்கிலம் உபயோகிக்கப்படுவதைச் காணலாம். இவ் வழக்கு மாணவனின் அடிப்படை உரிமையையே மறுப்பதாகும்.

இவ்வழக்கினை ஆதரித்துப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள்ஒன்று - தாய் மொழிக்கூடாக கற்பிப்பதற்கு வேண்டிய பாடநூல்கள், துணை நூல்கள் ஆகியன இல்லாமை. தாய்மொழிக்கூடாகக் கற்பிக்கும் திறனுடைய ஆசிரியர்கள் இல்லாமையும் அதற்கு ஆதரவாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இக்காரணங்களுக்காக, தாய்மொழிக் கூடாகக் கற்பிக்க இயலாது என்றும், அப்படியின்றிக் கற்பிபபதற்கு முற்பட்டால் கல்வித்தரம் வீழ்ச்சியடையும் என்றும் கூறப்படுவதுண்டு. எனவே, ஆங்கிலத்தைக் கல்வி மொழியாகப் பயன்படுத்துவதே பொருத்தமானது என்று அம்மொழியின் உபயோகத்தை ஆதரிப்பவர் வாதாடுவர். இவ்வாதங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியனவல்ல. இலங்கையில், கல்விமொழியாக, தாய்மொழி *1943* ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாகப் புகுத்தப்பட்டது. இடைநிலை மட்டத்தில், *1951* இல் 6 ஆம் வகுப்பில் ஆரம்பித்து, ஒழுங்கு வரிசையாக தாய்மொழி கல்விமொழியாக எல்லா வகுப்புக்களுக்கும் பரப்பப்பட்டது. அதற்கென வகுக்கப்பட்ட கொள்கை காலப் போக்கில் பல்கலைக்கழக மட்டத்தையும் உள்ளடக்கும் என்பதை உணர்ந்து அம்மொழி மாற்றத்துக்குப் பல்கலைக்கழகம் / பல்கலைக்கழகங்கள் தம்மைத் தயார்படுத்தியிருக்க வேண்டும். அப்படிச் செய்யத்தவறியதன் விளைவே இன்றைய நிலை. அதற்காக மாணவர் பாதிக்கப்படக்கூடாது.

ஆங்கிலத்தைக் கல்விமொழியாகப் பயன்படுத்துவதை ஆதரிப்பவர்கள் காட்டும் பிறிதொரு காரணம் — தாய்மொழிமூலம் கல்வி பெறுபவர் தகைமை வெளிநாடுகளில் அங்கீகரிக்கப்படாது என்பது. அத்துடன், ஆங்கிலம்மூலம் கற்போர் வெளிநாட்டு வேலை வாய்ப்பினைப் பெறமுடியும் என்றும் அவர்கள் கூறுவர். இவை கல்வியடிப்படையில் ஏற்கத் தக்க காரணங்கள் அல்ல. வெளிநாட்டு அங்கீகாரம் அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஆகியவற்றுக்காகக் கல்வியளிப்பது ஒரு கலவி அமைப்பின் நோக்கமாக இருக்கக்கூடாது. இருக்கவும் முடியாது. அதற்குப் பதிலாகப் பல்கலைக் கழகக் கல்விமொழிக் கொள்கை உள்நாட்டு நிலைமைகளை யதார்த்த நோக்கில் அணுகவேண்டும்.

பல்கலைக் கழகத்தில் பின்பற்றப்படும் கல்வி மொழி தொடர்பான கருத்துக்கள் ஆய்வு முயற்சிகளையும் உள்ளடக்குவதைக் காண லாம். ஆய்வுகளைத் தாய்மொழிமூலம் மேற் கொள்வது கடினம் என ஒருசாராரும், தாய் மொழிமூல ஆய்வுகள் தரங்குன்றியவையாக இருக்கும் என இன்னொரு சாராரும் கூறுவ துண்டு. இவற்றின் ஏற்புடைமை கேள்விக் குரியதாகும். வாதத்துக்காக இவற்றை ஏற்றுக்கொண்டாலும், இருக்கும் குறைபாடு களைத் திருத்தி, தரத்தினை உயர்த்தி, நமது மொழிகளையும் மேம்படுத்திப் பயன்படுத்தும் வாய்ப்பினைப் பெருக்குவதே ஒரு பல்கலைக் கழகத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு வேண்டிய பாதையில் செல்லாமல் பின்னேக்கிப் போவது பயன்தராது.

உலக நாடுகளை நோக்கும்போது, பெரும் பாலான நாடுகள் தத்தம் மொழி / மொழி களையே எல்லா மட்டங்களிலும் கல்வி ஊடக மாகப் பயன்படுத்துவதைக் காணலாம். முன்னணி நாடு எதுவும் அந்நியமொழி ஒன்றினைக் கல்விமொழியாக உபயோகிப்பது இல்லை. அவற்றின் கல்வி / கல்வித்தரம் தாழ்நிலையில் உள்ளது என யாரும் கூறமுடி யாது. அந்நாடுகளைப் போலவே எமது நாட் டிலும் எமது மொழிகளைப் பயன்படுத்து வதற்கு நாம் ஆவனசெய்தல் அவசியம். ஆங்கிலத்தின் உபயோகம் மேலதிகமாகத் தேவையெனக்கண்டால், அதற்கு உதவும் வகையில், கல்வியில் அந்நியமொழி பற்றிய கொள்கையினை மீளாய்வு செய்வதே பொருத் தமானது.

## தொகுப்பு

தொகுத்துப் பார்க்கையில், மேலே கவனத் துக்கெடுக்கப்பட்ட அம்சங்கள் தொடர்பான பல்கலைக் கழக நிலைமைகள் சீர்செய்யப்பட வேண்டியது நாட்டின் முக்கிய தேவை என்று கொள்வது பொருந்தும். தேசிய ரீதி யில் வகுக்கப்பட்ட பொதுக் கொள்கைகளுக் கிணங்க இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தேவையான சந்தப்பங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்படவும் வேண் டும். பல்கலைக் கழகம் இதில் தனது பங் களிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படவேண்டும். இதன் மூலம் பல்கலைக் கழகம், பொருத்தமானமுறையில், தேசிய நீரோட்டத்தில் கலந்துகொள்ள முடியும் இவ் வழியில், சமூகத்துக்குத் தான் வழங்கவேண் டிய பங்களிப்பினைப் பல்கலைக் கழகம் காத் திரமானதாக வழங்கமுடியும். அப்பங்களிப் பினைச் சமூகம் எதிர்பார்க்கின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

---

## கல்வி பற்றி காந்தி

❀ வாழ்க்கையின் ஒவ்வொரு முறையிலும் ஏற்படக்கூடிய பிரச்சனைகளையெல்லாம் நன்றாகச் சமாளிப்பதற்குரிய சக்தியை மாணவ மாணவிகளுக்கு அளிக்கும் முறையிலே அவர்களிடம் புதைந்து கிடக்கின்ற இயற்கைப்பண்புகளையெல்லாம் வெளிப்படுத்திப் பிரகாசிக்கச் செய்யக் கூடிய கல்வி முறைதான் பயனுள்ளதாகும்.

❀ மனிதன் என்ருல் வெறும் அறிவு மாத்திரமல்ல, அல்லது ஸ்தூல உடலுமல்ல, உணர்ச்சி மட்டுமோ அதுவும் அல்ல. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்று கூடினுல் தான் மனிதன் ஆகிருன். இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மை யான கல்விமுறையாகும்.

❀ அரசாங்கத்திற்கும் வர்த்தகநிலையங்களுக்கும் வேண்டிய குமாஸ்தாக்களைத் தயாரித்துக் கொடுக்கும் தொழிற்சாலை போல் இந்த கல்வி முறை இருக்கிறதல்லவா? கல்வியானது ஒருவனுடைய இயற்கையான அறிவை விசாலமாக ஊட்டி வளர்க்கும். கூர்மையாக்கும். நற்செயல் புரியும்படியான சக்தியைத் தூண்டிவிடும். அப்படியிருந்தும் அதன் மதிப்பை அளவிற்கு அதிகமாக நான் உயர்த்திப் பேசுவதே இல்லை.

# இலங்கையில் கல்வி — சில அவதானிப்புகள்

— பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை
(புவியியல் துறை, யாழ் பல்கலைக் கழகம்.)

இலங்கை வளர்முக நாடுகளில் எழுத்தறிவில் கடந்த சில தசாப்தங்களாக முன்னணி வகிப்பதும், இதன் பேறாக நாட்டு மக்களின் சமூக பொருளாதார நிலைப்பாடுகளில் கல்வியினது தாக்கம் அதிகமாகவிருப்பதைக் காணலாம். இலங்கை மக்களின் தலைக்காய வருமானம் 350 அமெரிக்க டொலராக இருப்பினும், பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் உயர்வாக இருப்பதற்கு மக்களின் எழுத்தறிவும், பொதுக்கல்வியும் உயர் நிலையில் இருந்தமை காரணமாகும்.

எமது நாட்டுக் கல்வி முறையில் காணப்படும் சில பிரச்சினைகளை நோக்க முன்னர், இங்கு காணப்படும் சிறப்பம்சங்களை ஈண்டு நோக்குவோம். எம்நாட்டில் இன்று பத்தாயிரத்திற்குச் சற்று கூடுதலான பள்ளிக்கூடங்கள் உள்ளன. 1985ம் ஆண்டுப் புள்ளி விபரப்படி 4014 ஆரம்பப் பாடசாலைகளும், 3905 கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைகளும், 1752 சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகளும் 368 பௌத்த பிரிவேணுக்களும் இருந்தன. பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 3.6 மில்லியனுக்குக் கூடுதலாகவும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,40,000 ஆக இருப்பதுடன் ஆசிரிய மாணவர் விகிதாசாரம் 1 : 25 ஆகவும் இருக்கின்றது. ஆசிரியர்களின் எண்ணிக்கை, அவர்களின் கல்வித்தகைமை, சேவைக்காலப் பயிற்சி போன்றன முன்னேற்றமடைந்து வரும் போக்கைக் காணலாம். இலவசக் கல்வி, இலவசப்பாடப் புத்தகம் நாடளாவிய ரீதியில் பொதுக்கல்வித் திட்டமும் அதற்குரிய பாடநூல்களும், ஆண்டு 5 முடிவில் புலமைப் பரீட்சையும் ஆண்டு 11 முடிவில் க. பொ. த. (சா. த) பரீட்சையும், ஆண்டு 13 முடிவில் க. பொ. த. உயர்தரப் பரீட்சையும் தேசிய பரீட்சைகளாக இடம் பெறுகின்றன.

ஆண்டு 1 – 13 வரை மாணவர்கள் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படிப்பதற்கு போதிய வசதிகள் உண்டு. ஒரு சில பிரபல்யமான நகரம், பிரதேசப் பாடசாலைகளில் மாணவர் அனுமதி பெறுவது போட்டி நிறைந்ததாக இருப்பினும், கல்வி கற்க விரும்பும் மாணவன் ஒருவன் ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் அனுமதி பெறுவது கடினமானதொன்றல்ல. பாடசாலைகளுக்கிடையே தரரீதியில் வேறுபாடு காணப்படினும், இடஞ்சார்பு ரீதியில் சந்தர்ப்பம் உயர்வாகவே காணப்படுகிறது. மேலும் பள்ளிக்கூடங்களின் இடஞ்சார்புப் பரம்பலும் பெருமளவுக்கு நாட்டின் குடிசனத் தொகைப் பரம்பலுடன் ஒத்துக் காணப்படுகிறது.

மேலும், அரச பாடசாலைகளில் மதிய உணவு விநியோகத் திட்டத்தை அமுல் செய்யவுள்ளது. ஏற்கனவே கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட பள்ளிக்கூடங்களில் இத் திட்டம் ஏலவே நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திட்டம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எமது கல்வி முறை மேற்குறிப்பிட்ட சில சிறப்பம்சங்களைக் கொண்டிருப்பினும், அரச வரவு செலவுத் திட்டத்தில் பெருமளவு பணம் கல்விக்காக ஒதுக்கப்பட்ட போதும் எமது கல்வித் திட்டத்தில் கவலையளிக்கக் கூடியதும் தெளிவாக இனம் காணக்கூடியதுமான குறைபாடுகள் சில உள. பிரச்சனைகளுக்குத் தீர்வு காணாது போனால், எமது கல்வி பெருமளவு பாதிப்புக்கு உட்படுவதுடன் முதலீட்டுக்குரிய பலனையும் பெறமுடியாது போய் விடும்.

நாட்டில் காணப்படும் பள்ளிக் கூடங்களுக்கிடையே பருமன், கல்வித்தரம், அங்குள்ள

பௌதீக வசதிகள் ஆகியவற்றில் பெருமளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒரு சில பள்ளிக்கூடங்களில் மாணவர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டு போவதும் இடநெருக்கடியை ஏற்படுத்துவதுடன் சமாளிக்க முடியாத முகாமைத்துவப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கின்றது. நாட்டிலுள்ள பெருந்தொகையான சிறு பாடசாலைகள் பல வழிகளிலும் பின்னடைந்து செல்வதைக் காணலாம். இத்தகைய நிலைப்பாட்டில் பெரிய சிறிய பாடசாலைகள் இரண்டுமே பாதிப்புக்குள்ளாகின்றன. இதனைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட கொத்தணிப் பாடசாலை முறை முழுமையாக வெற்றி பெற்றதெனக் கூறுவதற்கில்லை. தமிழ்மொழிப் பாடசாலைகளில் மிகக்கூடிய வீதம் சிறு பாடசாலைகளாக இருப்பது குறிப்பிடத்தக்கது. தோட்டப்பாடசாலைகள், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலும் காணப்படும் பள்ளிக்கூடங்களில் அதிகமானவை சிறு பள்ளிகளாகக் காணப்படுகின்றன. மேலும் இப்பள்ளிக்கூடங்கள் பல ஓர் ஆசிரியர் பள்ளிக் கூடங்களாகச் செயற்படுகின்றன. இந்நிலை இப்பிரதேசப் பிள்ளைகளின் கல்வியைப் பாதிப்பதாக உள்ளது.

எமது நாட்டில் மாணவர்கள் தமது ஆரம்ப, இடைநிலைக் கல்வியை முழுமையாகப் பெருது இடைவிலகுதல் ஒரு முக்கிய பிரச்சனையாக உள்ளது. ஆரம்ப, இடைநிலைக்கல்வியை முழுமையாகப் பெறக்கூடிய வாய்ப்பு இருந்த போதும், பல்வேறு காரணங்களினால் மாணவர் இடைவிலகல் அதிகரித்துக்கொண்டு போகிறது. ஆண்டு 1 இல் சேரும் மாணவர்களில் 30% ஆண்டு 6 க்கு வருமுன்பே பாடசாலையிலிருந்து இடைவிலகுகின்றனர். ஆண்டு 11 ஐ 35 வீத மாணவர்களே சென்றடைகின்றனர். 15 வீதத்திற்கும் குறைவானவர்கள் தான் ஆண்டு 13 ஐ சென்றடைகின்றனர். தோட்டப்பகுதி, மட்டக்களப்பு வன்னி, திருகோணமலை பகுதிகளில் மாணவர் இடைவிலகல் மிகவும் உயர்வாக உள்ளது. மாணவர்களின் இடைவிலகல் வளங்களில் ஏற்படும் விரயமாக உள்ளது இடை விலகலுக்கு வறுமையே நேர்க்காரணமாகவும், எதிர்மறைக்காரணமாகவும் உள்ளது. கட்டாய பள்ளிக்கூடவரவும், வறுமையை ஒழிக்கும் முறையில் பெற்றோருக்கு வேலைவாய்ப்பு அளித்தல் மூலம் இடைவிலகலின் வேகத்தைக் குறைக்கலாம்.

இன்று எமது கல்வியில் காணப்படும் ஒரு பெருங்குறைபாடு கால இடை வெளியும் கால தாமதமும் ஆகும். பள்ளிக்கூடக்கல்வி 13 ஆண்டுகளைக் கொண்டதாக இருப்பினும், உண்மையில் 13 ஆண்டு 8 மாதத்தைக் கொண்டு 14 ம் ஆண்டைத் தழுவியதாக அமைகிறது. பல நாடுகளில் பாடசாலைக் கல்விக்காலம் 12 ஆண்டுகளாக உள்ளன. இலங்கையில் பாடசாலைக்கல்விக் கால அளவு ஒப்பீட்டு ரீதியில் கூடுதலாக இருப்பது மாணவர்களின் காலத்தை விரயம் செய்வதாக உள்ளது. க. பொ. த. (சா. த) பரீட்சைக்கு பின்னர் மாணவர்கள் க. பொ. த. உயர்தர வகுப்புக்குச் சராசரி 5 மாதங்களின் பின்னரே சேர்க்கப்படுகின்றனர். 60 ம் ஆண்டுகளிலும் அதற்கு முன்னரும் க. பொ. த. (சா. த) பரீட்சை ஒன்று சித்தியடைந்து க. பொ. த. உயர்தரத்தில் மாணவன் 24 மாதங்களில் க. பொ. த. உயர்தரப் பரீட்சையை எழுதும் வாய்ப்பு இருந்தது. தற்பொழுது இவ்விரு பரீட்சைகளுக்கும் இடையில் உள்ள கால அளவு 32 மாதங்களாக அதிகரித்துள்ளது. டிசம்பரில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எழுதி எடுத்த மாணவர்கள் அதே ஆண்டு ஜூனில் பல்கலைக் கழகம் செல்லக்கூடியதாக இருந்தது. பல்கலைக்கழகக் கல்வி ஆண்டு ஜூனிலிருந்து ஒக்டோபருக்கு மாற்றப்பட்டபோது அதற்கேற்ப க. பொ. த. உயர்தரப் பரீட்சையும் டிசம்பரிலிருந்து ஏப்ரலுக்குப் பின் தள்ளப்பட்டது. எனினும், பரீட்சைக்கும் பல்கலைக் கழக அனுமதிக்குமிடையே 6 மாத கால இடைவெளியே இருந்தது. 1971 ம் ஆண்டு ஏற்பட்ட கிளர்ச்சியினால் க. பொ. த. உயர்தரப் பரீட்சை ஆகஸ்டில் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து இப்பரீடசை தொடர்ந்து ஆகஸ்டில் நடை பெற்று வருகிறது. இதன் விளைவாக அதே ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் மாணவர்களை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்வது கடினமாகிறது. பல்கலைக் கழக கல்வியாண்டு ஒக்டோபரில் இருந்து

படிப்படியாக நவம்பர், டிசெம்பர், ஜனவரி என்று வருடாவருடம் பின் தள்ளப்பட்டு வந்தது.

1977 இல் மீண்டும் பல்கலைக்கழகக் கல்வியாண்டு ஒக்டோபரில் தொடங்கியது. எனினும், 1971—1977 க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பல்கலைக் கழகங்கள் முழுமையாக ஒரு கல்வி ஆண்டை இழந்தன. மேலும் இக் காலத்தில் பல்கலைக் கழக அனுமதி பெறும் மாணவர்கள் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எடுத்து பதினான்கு மாதங்களின் பின்னரே பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்நிலை 1977—1982 வரை நீடித்தது 1983 ஆம் ஆண்டு ஜுலை கலவரத்தின் விளைவாக பல்கலைக்கழக கல்வியாண்டு மீண்டும் குழப்பத்திற்குள்ளாகி, புதிய கல்வியாண்டு ஒக்டோபரில் இருந்து படிப்படியாகப் பின்தள்ளப்பட்டு வந்தது. தற்பொழுது மேலும் ஒரு கல்வி ஆண்டை மாணவர்கள் இழந்து விட்டனர். 1970 களில் ஒரு கல்வியாண்டையும், 1980 களில் இன்னொரு கல்வி ஆண்டையும் இழந்துள்ளனர். எமது பல்கலைக்கழகங்கள் இரண்டு கல்வி ஆண்டை இழந்ததன் விளைவாக பல்கலைக்கழக மாணவர்கள் சராசரியாக இரண்டு வயது கூடியவர்களாகவும் இருக்கின்றனர். 1986 க. பொ. த. உயர்தரப் பரீட்சை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்கள் தம் பல்கலைக்கழக கல்வியை ஆரம்பிக்கவில்லை. 1987 க. பொ. த. பரீட்சை மாணவர்களின் நிலையும் அதுவே. 1987க்கு பின்னர் யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்கள் செயற்படவில்லை. எனவே, பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்களின் கல்வி பெரும் தாமதத்திற்குள்ளாகியுள்ளது. இதனால் இலங்கையின் கல்வி முறையில் காணப்படும் தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

இலங்கையில் உயர்கல்வி கற்றலுக்குரிய சந்தர்ப்பம் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக இருக்கிறது. 1965 க்கு வரையும் பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில் தகுதி கொண்ட எல்லோரும் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1966 இல் அனுமதி முறையில் மாற்றமேற்பட்டது. தகுதிகளாலும் எல்லா மாணவர்களை எடுக்கும் முறையிலிருந்து விலகி இடங்களுக்கேற்ப மாணவர்களைத் தெரிவு செய்யும்முறை ஏற்பட்டது. 1966 / 67 இல் இவ்வாறாகப் பல்கலைக்கழகங்களுக்கு 3648 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். இவ் எண்ணிக்கை 1987 இல் 6204 ஆக அதிகரித்துள்ளது. இருபத்தியொரு ஆண்டுக்காலப் பகுதியில் 2556 இடங்களே அதிகரிக்கப்பட்டன. அட்டவணை 1 இல் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான தரவுகள் தரப்பட்டுள்ளன.

## அட்டவணை I
## பல்கலைக்கழக அனுமதி - 1966 -1987

| வருடம் | கலை (வர்த்தகம், சட்டம் முகாமைத்துவம் உட்பட) | (விஞ்ஞானம் மருத்துவம், கட்டிடக்கலை உட்பட) | மொத்தம் |
|---|---|---|---|
| 66 / 67 | 2358 | 790 | 3648 |
| 67 | 2888 | 872 | 3760 |
| 68 | 2762 | 809 | 3571 |
| 69 | 2285 | 792 | 3077 |
| 70 | 2503 | 955 | 3454 |
| 72 | 2239 | 1099 | 3338 |
| 73 | 2243 | 1177 | 3420 |

| | | | |
|---|---|---|---|
| 74 | 2236 | 1296 | 3532 |
| 75 | 2394 | 1395 | 3789 |
| 76 | 2495 | 1447 | 3942 |
| 77 | 2657 | 1493 | 4150 |
| 78 | 2884 | 2073 | 4957 |
| 79/80 | 2925 | 1923 | 4895 |
| 80/81 | 2962 | 1863 | 4825 |
| 81 | 2899 | 2158 | 5057 |
| 82 | 2973 | 2377 | 5328 |
| 83 | 3017 | 2446 | 5463 |
| 84 | 3026 | 2604 | 5630 |
| 85 | 3119 | 2307 | 5426 |
| 86 | | | |
| 87 | 2990 | 3214 | 6204 |

**Sources:** (i) Hand book — 1983, University Grants Commission, P. 19.

(ii) Statistical Hand Book, 1983, 1985, Division of Planning & Research, University Grants Commission, P30 & P. 28.

(iii) Basic Statistics on Higher Education, 1981, Division of Planning & Research, University Grants Commission P. 10.

(iv) Uuiversity Admissions Record Book, 1987/88.

மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் கலைப் பகுதிக்குரிய அனுமதி ஏறக்குறைய மாற்றத்துக்குள்ளாகாமல் 6000 பேர் வரையில் இருந்து வருகிறது. விஞ்ஞானம், மருத்துவம, பொறியியல், வர்த்தகம் ஆகிய துறைகளில் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டபொழுதும், நாட்டினது குடிசனத்தொகை வளர்ச்சி, க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு ஏற்ப பல்கலைக்கழகங்களில் இடங்கள் அதிகரிக்கப்படாதது பெரியதொரு குறைபாடாகும். பல்கலைக்கழகங்கள், பீடங்கள், துறைகள், பாடநெறிகள் போன்றன அதிகரிக்கப்பட்டபோதும் இவ்வதிகரிப்புக்கு ஏற்ப மாணவர்களின் அனுமதி அதிகரிக்கப்படாதுள்ளமை, உயர்கல்வி நாடி நிற்கும் இளைஞர்களுக்கு மிக்க விரத்தியை அளிப்பதாகவுள்ளது. இலங்கையில் பல்கலைக்கழக, தொழில்நுட்ப கல்வி வளர்ச்சியில் குறிப்பாக மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க துரிதமுயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். இலங்கையில் தொழில்நுட்பக் கல்லூரிகள் சிறந்த முறையில் விருத்தி பெறாது இருப்பது மாணவர்களின் உயர்கல்வியைப் பாதிப்பதுடன் கைத்தொழில் வளர்ச்சியையும் பெரிதும் பாதிக்கும்.

## கல்வி பற்றி காந்தி

கல்விக்கூடங்கள் நம்மை மனிதராக்குவதற்கு ஏற்பட்டவை. நமது பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளுமோ நம்மை அடிமைகளாகவும் கோழைகளாகவும் அவநம்பிக்கை ஐந்துக்களாகவும் மனோதிடமற்றவர்களாகவும் ஆக்கியிருக்கின்றன.

துர்பாக்கிய வசமாக நாம் பெறுகிற கல்வி நமது சூழ்நிலையுடன் எவ்வித்த் தொடர்பும் அற்றதாயிருக்கிறது.

# எத்தகைய கல்வி எமக்குத் தேவை

— சோகி

ஒரு சமூகத்தின் முன்னேற்றம் அச்சமூகத்திற்குக் கொடுக்கப்படும் கல்வியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. தனிமனிதர்கள் பெறும் கல்வி மொத்தத்தில் முழுச் சமுதாயத்தின் ஆற்றலையும், வளர்ச்சியையும் நிர்ணயிக்கிறது. எமது பாடசாலைகளிலும், பல்கலைக் கழகங்களிலும் போதிக்கப்பட்டு வருகிற கல்வியானது அன்று வைத்தியர்கள், எந்திரிகள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள் போன்ற சேவைத் தொழிலாளர்களை உற்பத்தி செய்தது. தம் கல்வியை வெற்றிகரமாக முடிக்காதவர்கள் நுகர் பொருள் வர்த்தகர்களாக தென்னிலங்கையில் பணியாற்றினர். சேவைத் தொழில் பார்ப்பதனையே தமது கௌரவமாக மக்கள் அன்று போற்றினர். பல்வேறு சமூக - பொருளாதார, அரசியற் காரணிகளால் உள்நாட்டு சேவைத் தொழில்துறை உரிமைகள் மறுக்கபட்ட நிலையில் இன்று ஐரோப்பிய நாடுகளிற்கு அகதிகளையும், மத்திய கிழக்கு நாடுகளிற்கு கீழ்நிலை வேலையாட்களையும், தூரகிழக்கு நாடுகளிற்கு பணிப்பெண்களையும் ஏற்றுமதி செய்வதனையே இலட்சியமாகக் கொண்டு எமது சமுதாயம் செயற்படுகிறது.

சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கான பொருள் உற்பத்தியில் எமது சனத்தொகையில் எத்தனை வீதமானோர் ஈடுபட்டுள்ளனர், நமது நாளாந்த தேவைகளில் எத்தனை வீதம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது என்பன பற்றிய கணிப்பீடு ஒன்றைச் செய்து பார்ப்பின் ஆச்சரியமான உண்மைகள் பல வெளிவரலாம். பருமட்டாகக் கூறின், நுகர் பொருளின் பெரும்பகுதி இறக்குமதி செய்யப்படுகிறது. பொருளுற்பதி ஒப்பீட்டளவில் எமது தேவைகளிற்கு போதுமானவையாக இல்லை. தானிய உற்பதி தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லை. கடல் வளமே உள்நாட்டுத் தேவை நுகர்வுக் கப்பால் விருத்தி செய்யப்படவில்லை. மற்றும் அறியப்பட்ட இயற்கை வளங்களைப் பொறுத்தவரையில் வறுமை நிலையே எஞ்சியுள்ளது. இந்நிலையில் சமுதாய வருவாய் ஈட்டம் சேவைத் தொழிலாலும், சிறுபான்மை வர்த்தகத்தாலும் பெறப்படுகிறது. இவ்வாறு சமுதாய வாழ்நிலைக்கான பொருளாதார நிர்ப்பந்தங்கள் எமது கல்வியமைப்பை சேவைநிலைக்குரியதாகவே தொடர்ந்தும் இருந்துவர அனுமதித்துக் கொண்ட பொழுதும் உள்நாட்டு நிலைமைகள் சேவையடிப்படையிலமைந்த வருமான ஈட்டத்திற்கு உகந்ததாக இல்லாதிருப்பது நெருக்கடி நிலைமைகளைத் தோற்றுவித்துள்ளது.

பெரும்பாலான தனி நபர்களதும், குடும்பங்களினதும் வருவாயும் சேமிப்பும் சேவைத் தொழிலால் பூர்த்திசெய்யப்படுகிறது. உள் நாட்டில் காணப்படும் அரசியல் நெருக்கடிகள் ஐரோப்பிய நாடுகளில் அகதி அந்தஸ்து மூலம் பொருளீட்ட உதவுகிறது. அரசியற் காரணங்களிற்காகத் தஞ்சம் புகுந்தோரிலும் பார்க்க, பொருளாதார காரணங்களிற்காகவே பெருந்தொகையானோர் அகதிப் போர்வையைப் பயன்படுத்தியுள்ளமையை மனச்சாட்சியுள்ள எவரும் மறுக்கமுடியாது.

இத்தகையதொரு அவல நிலைக்கு முக்கிய காரணம் எமது சமுதாய உற்பத்தி நிலையும், கல்வியமைப்பும், இணைக்கப்படாமையேயாகும். மனித உயிர்கள் மிகவும் அற்ப பொருளாக மதிக்கப்படுகிற இற்றை நாட்களில், நம்பிக்கையற்ற எதிர்காலம், விரக்தி தமிழ்ச் சமூகத்தின் எல்லா மட்

டங்களிலும் வேரோடியுள்ளது. இந் நிலை முன்னர் என்றுமில்லாதவாறு பெரும் நெருக்கடிகளை எமது சமுதாய வாழ்வதில் தோற்றுவித்துள்ளது, எத்தகைய சமுதாயத்தின் பிரதிநிதிகளாக நாம் உள்ளோம் என்பதைச் சிறிது சிந்திப்பது அவசியம். உழைப்பாற்றல் உள்ளவர்களை அகதிகளாக ஏற்றுமதி செய்யும் ஒரு மக்கட் சமுதாயமா எமது இலட்சியம்? சமுகப் பொறுப்புள்ளஎந்தப் பிரசையும் இன்றைய நிலையையிட்டு கழிவிரக்கம் கொள்ளாதிருக்க முடியாது.

சமுதாய உற்பத்தியும், அதற்கேற்ற கல்வியமைப்பும் எமது சமுதாயத்தின் இருப்பிற்கும் வளர்ச்சிக்கும் இன்று ஒரு அத்தியாவசிய தேவை. மனிதகுலத்தின் விஞ்ஞான சாதனைகளை நமதாக்கி பொருளாதார ஸ்திரமும், வளர்ச்சியும் பெறத்தக்க வகையில் நாமும் எமது சமூகமும் முன்னேறுதல் வேண்டும். பொதுக்கல்வி பற்றிய லெனின் தொகுப்பு நூலின் முன்னுரையில் வருகின்ற வாசகங்கள் இன்றைய எமது கல்வியின் இலட்சியம் எவ்வாறிருத்தல் வேண்டும். எத்தகைய சமுதாயமாக எமது சமுதாயம் மாற்றப்படல் வேண்டும் என்பதனைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

''கல்வியிடம் புதிய கடமைகளை நம்முடைய காலம் எதிர்பார்க்கிறது. சமுதாய வளர்ச்சியில் உயர் வளர்ச்சி வீதத்தை உறுதி செய்யவும், விஞ்ஞான தொழில்துறை முன்னேற்றத்தை உறுதி செய்யவும், விஞ்ஞான ரீதியில் முறைப்படுத்தப்பட்ட உழைப்பைப் பயன்படுத்தி அதனுடைய உற்பத்தித் திறனை மேலும் மேலும் உயர்த்தவும், அறிவைச் சுயேட்சையாகப்பெற்று அதனை நடைமுறைப்படுத்தவும் தங்களை முழுமையாகத் தயார் செய்து கொண்ட மக்கள் தேவை'' என்பதே அவ்வாசகமாகும்.

வரலாறாகிவிட்ட பண்டைப் பெருமைகளையிட்டு வாதம் புரிவதை விடுத்து, மெய்யான நிலைமைகளைப் புரிந்து கொண்டு சமுதாய உற்பத்தியை திட்டமிடுவதும், அதற்கேற்ற பொருத்தமான கல்வியமைப்பை தெரிந்தெடுத்து அமுல்படுத்துவதுமே எமது சமுதாயத்தின் சுதந்திரமான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் உரியவர்களின் கடமையாகும்.

## கல்வி பற்றி காந்தி

❀ சமுதாயத் தீமைகளையும் பிறகொடுமைகளையும் எதிர்த்துப் போராடுவதற்குரிய மனோதிடத்தை வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும் தர நம்முடைய கல்விமுறை பிசகிவிட்டது.

❀ அறிவை வளர்ப்பதே பள்ளிக்கூடங்களின் வேலையாயிருக்க வேண்டும். அவ்வறிவு வளர்ச்சிமூலம் மாணவர்களுக்கு நல்லொழுக்கம் தானாகவே ஏற்படும்படி செய்யவேண்டும்.

❀ பிள்ளைகளின் மீது பாடப்புத்தகங்களை ஏராளமாய்ச் சுமத்துவது அனாவசியமென்பது என்கருத்து. பிள்ளைகளுக்கு உண்மையான பாடப்புத்தகம் ஆசிரியரேயாகும்.

❀ முதியோரின் கல்வியையும் குழந்தைகளின் கல்வியையும் வற்புறுத்தாத எந்த கல்வித் திட்டமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

❀ இங்கு படிக்கும் மாணவ மாணவியர் மதியம் வரைதான் குறிப்பிட்ட பாடங்களைப் படிக்கின்றனர். மதியத்திற்குப் பின் அவரவர் சொந்த விருப்பங்களுக்கு ஏற்ப ஓவியம், சிற்பம், கைத்தொழில் என எதை வேண்டுமானாலும் படிப்பார்கள்.

❀ இங்கு படிக்கும் மாணவ மாணவியர் வேறு எங்கு படிப்பவனைக் காட்டிலும் எளிமையும் மனிதநேயமும் உலகளாவிய பார்வையும் கொண்டவர்களாகவே படித்துமுடித்து வெளியேறுகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

# தாகூர் சாந்திநிகேதனம்

— தொகுப்பு: **சிவதாஸ்**

இயற்கையோடிணைந்த பல்கலைக்கழகம் அமைதியான சூழல்... சுதந்திரமான உணர்வு... சுற்றிவர மரங்கள், அவற்றில் இனியகீதங்களை இசைத்தவண்ணம் பறவைகள். இவற்றிற்கிடையில் இயற்கையை நேசித்தவண்ணம் மரத்தின் கீழ் இருந்து மாணவ மாணவியர்கள் கல்வி கற்கிறார்கள்.

''கல்வி கற்கும் மாணவர்கள் எவ்வளவு சுதந்திரத்தோடு இருக்கமுடியுமோ அவ்வளவு சுதந்திரத்தோடு இருக்கவேண்டும்'' என்ற தாகூரின் இலட்சியத்தை நிறைவேற்றியவண்ணம் மாணவ மாணவியர்கள் படித்துக் கொண்டிருப்பது எங்கு தெரியுமா?

தனது கல்விச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதற்காக கவி ரவிந்திரநாத் தாகூரினால் 1901 இல் ஐந்து குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட சாந்திநிகேதனிதோன்.

இன்று மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் படிக்கும் விஸ்வபாரதி பல்கலைக்கழகமாக வளர்ந்திருக்கின்றது.

கவிஞர் தாகூரின் நாற்பதாம் வயதில், அதாவது1901 இல் அவருடைய உள்ளத்தில் இருந்த அமைதி கலைந்தது. ஏதோ ஒரு புது முயற்சியை உள்ளம்நாடி அலைந்தது. அந்த அலைவே சாந்திநிகேதனம் என்னும் அமைதிக் கோயிலில் கலைத்தொண்டு புரியுமாறு கவிஞரைத் தூண்டியது.

தக்க கல்விமுறை இல்லாத குறையால், இளமையில் தாம் பட்டபாடு அவரது நினைவில் நின்றது. சிறைக்கூடமாக இருக்கும் பள்ளிக்கூட வாழ்வை எப்படியாவது மாற்றத் துணிந்தார். பொருள் விளங்காத பாடத்தை யந்திரம் போல் கற்கும் முறையால் குழந்தைகளுக்கு இயற்கையாக உள்ள ஆற்றல் மங்குவதால் அதைப் போக்கவேண்டும் என்று விரும்பினார். உணர்வற்ற பாடப்புத்தகங்களிலிருந்து கண்மூடி வழக்கங்களையும் மாற்றத் துணிந்தார். விருப்பம் போல் விளையாடி வேண்டியதைக் கற்கும்படி உரிமை கொடுத்துக் குழந்தைகளை வளர்க்கவேண்டும். குறித்த நேரத்தில் யந்திரம் போல் வாங்குகளில் உட்கார்ந்து கற்காமல் ஆடிப் பாடி விருப்பம் போல் அறிவை வளர்க்க வாய்ப்புத் தரவேண்டும். குழந்தைகள் தாமே அறிவுப்பசி எடுத்து அறிவுணர்வை நாடவேண்டும். இசையாலும், நாடகத்தாலும், முயற்சியாலும் ஆர்வத்தாலும் கல்வி வளரவேண்டும். இயற்கை பகையானது அன்று, நட்பானதுதான் என்று உணர்ந்து இயற்கையோடு பழகிக்கற்க வேண்டும் – இவ்வாறெல்லாம் கவிஞரின் உள்ளத்தில் எண்ணங்கள் உதித்தது.

தாகூர் ஒருநாள் தந்தையார் தேவேந்திரநாதரிடம் சென்று ஒரு பரிசு கேட்டார். சாந்திநிகேதனத்தில் ஒரு கலைக்கழகம் நடத்துவதற்கு இடம் தந்து இசைந்தருளுமாறு கேட்டார். தந்தையாரும் உதவி வாழ்த்தினார். 1901 இல் குடும்பத்தோடு சென்று சாந்திநிகேதனில் வாழத்தொடங்கினார்.

சாந்திநிகேதனம் இயற்கையமைப்பாலே அமைதிக்கு உரிய தனியிடமாகும். நாற்புறமும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் வெட்டவெளியில் பல அழகான மரங்கள் வளர்ந்து ஓங்கியிருந்தன. தொழுகைக்கு உரிய நிலையம் ஒன்று அங்கே அமைக்கப்பட்டிருந்தது. ஒரே கடவுள் என்றும், கடவுள் உருவமற்றவர் என்றும் வழிபடும் முறை வற்புறுத்தப்பட்டு வந்தது. விக்கிரவழிபாடு முற்றாகத் தடைசெய்யப்பட்டிருந்தது.

கவிஞர் சாந்திநிகேதனத்தில் பள்ளிக்கூடம் தொடங்கிய பொழுது, மாணவராகச் சேர்ந்த சிறுவர் ஐவரே. அவர்களுள் கவிஞரின்

மகனும் ஒருவர். ஏராளமான கட்டடங்களும் பொருள்களும் இன்ப வாழ்விற்கு காரணம் அல்ல, இயற்கையோடு இணைந்த எளிய வாழ்வே நமக்கு அமைதியைத் தரும் என்று அறிவுறுத்தினர். பள்ளிக்கூடங்கள் நகரங்களின் நெருக்கடிக்கு இடையே அமைவதால் பயனில்லை என்பதும் காடுகளின் இடையில் இயற்கைச் சூழலில் அமைய வேண்டும் என்பதும் அவருடைய கொள்கைகள்.

சாந்திநிகேதனப் பள்ளிக்கூடத்தில் பாட்டும் இசையும் பெருகியிருந்தன ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடம் இசைமுழக்கத்தோடு தொடங்கி இசைமுழக்கத்தோடு முடியும். உழவர்கள் உழத் தொடங்கும் போதும் சாந்திநிகேதனில் திருவிழா நடக்கும். அப்போதெல்லாம் ஆடல், பாடல், கண்காட்சி நாடகம் எல்லாம் உண்டு.

தம் குறிக்கோளுக்கு ஏற்ற முறையில் கல்வி புகட்டவல்ல ஆசிரியர் பலரைக் கவிஞர் தேடிச் சேர்த்தார். வாழும் உலகத்தைப் பற்றியும் வாழ்க்கை நடத்தும் மக்களைப்பற்றியும் எவ்வளவு கற்பித்தாலும் சலியாமல் கற்கும் பசி சிறுவர்க்கு இயல்பாக இருப்பதை அவர் உணர்ந்தார். பயனற்ற, சுவையற்ற இறந்தகாலச் செய்திகளை அறிவதில் அவர்களுக்குள்ள வெறுப்பையும் புறக்கணிப்பையும் அறிந்தார் சுவையான முறையில் கல்வி புகட்டினல் விளையாட்டில் உள்ள அவ்வளவு அக்கறை கொண்டு சிறுவர்கள் தாமாகவே இது என்ன? அது என்ன? என்று விடாமல் கேட்டு அறிவு வளர்பதையும் கண்டார். இவ்வாறு செய்தால் வேலைக்கும் விளையாட்டிற்கும் உள்ள வேறுபாடுகள் மறையும். வீட்டிற்கும், பள்ளிக்கூடத்திற்கும் உள்ள வேறுபாடும் மறையும் என்று அவர் நம்பினர். அதனல் சாந்திநிகேதனத்தில் சட்டதிட்டங்கள் இல்லாமல் செய்தார். ஆள்வோர் ஆளப்படுவோர் இல்லாமல் செயதார். ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்களாகப் பழகி கற்க முடிந்தது.

சட்டதிட்டங்களின் ஆட்சியும் அடக்குமுறையும் இல்லாமல் செய்தாரே அல்லாமல் ஒழுங்கு முறையினுல் அமையும் கட்டுப்பாட்டைப் புறக்கணிக்கவில்லை. எல்லோர்க்கும் பொதுவான, எல்லோர்க்கும் நன்மையான, யார்க்கும் தீமை செய்யாத ஒழுங்குமுறை வளரச் செய்தார். தவறினவர்களைத் தண்டிக்கும் பொறுப்பை ஒருவர் கையில் விடாமல் மாணவர்களே மன்றம் அமைத்துக் கூடி எண்ணிச் செய்யுமாறு ஏற்படுத்தினர். எல்லா உயிரிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதைப் பொதுவிதி ஆக்கினர். மற்றவர்களின் பழக்கவழக்கங்களையும் மொழி முதலியனவற்றையும் இழகாமல் மதித்து நடக்க கற்பித்தார்.

1914 இல் எப். ஆண்டிரூஸ், பியர்கள் என்னும் ஆங்கிலேய அறிஞர் இருவரும் சாந்திநிகேதனத்திற்கு வந்து தொண்டாற்ற முன்வந்தார்கள். 1915 இல் தென்னுபிரிக்காவில் காந்தி ஏற்படுத்திய போனிக்ஸ் பள்ளியின் மாணவர்கள் இந்தியாவிற்கு வந்து சாந்திநிகேதனத்தில் தங்கியிருந்தார்கள். காந்தியடிகளும் வந்திருந்தார்கள். 1918 இல் சாந்திநிகேதனத்தில் விசுவபாரதி என்ற உலகப் பொது நிலயமான உலககலைக்கழகத்தை அமைத்தார். விசுவபாரதிக்குள் சாதி சமயப் பிளவு எதுவும் புகாதபடி தூய்மையாகக் காத்தார். எல்லாச் சமயத்தவரும், எல்லா இனத்தவரும் 'மனிதர்' என்ற பொதுத் தன்மை விளங்க வாழவேண்டும் என்றுபோதித்தார். உணவு விடுதிகளில் எவ்வகையான வேறுபாடும் நுழைந்து பிரிவு படுத்தாபடி செய்தார். வழிபாடு முதலிய வற்றில் எந்தக் கட்டுப்பாடும் விதிக்காமல் முழு உரிமை நிலவச் செய்தார்.

கவி தாகூர் தம் மூத்த மகன் ரதிந்திர நாதரை கிராம முன்னேற்றத்திற்காக தொண்டு செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு அமெரிக்காவிற்கு அனுப்பி உழவைப் பற்றி மூன்று ஆண்டுகள் படித்து வருமாறு செய்தார். எல்மிர்ஸ்ட என்ற ஆங்கிலேயர் ஒருவரும் இந்த முயற்சிக்கு துணையாக கிடைத்தார். விசுவபாரதியில் கற்பிக்கும் கலைகளில் கிராமத்தொண்டு என்பதும் ஒரு கலையாகச் செய்தார். இதற்கென 'ஸ்ரீநிகேதன்' என்ற பெயரால் 1922இல் செயல் முறை தொடங்கப்பட்டது.

சாந்திநிகேதனத்திற்கு அருகில் கருள் என்ற சிற்றூரில் உள்ள ஒரு வீட்டை கிராமத் தொண்டுக்குரிய தலைமை நிலையமாக மாற்றி னர். சுற்றிலும் தொண்டர்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டன. சிறந்த வகையில் நெல் லும் கரும்பும் பயிராயின. மரமே இல்லாத பகுதியில் மரங்கள் பல வைத்து செழிக்கச் செய்தார். கூட்டுறவு கழகங்கள் பல அமைந் தன. கிராமங்களில் ஒவ்வொரு குடும்பமும் கூட்டுறவு கழகத்தில் உறுப்பினராக சேர்ந் தன. இதில் கட்டும் கட்டணத்தில் ஒரு பகுதியை கொண்டு கிராம சுகாதாரமும் வைத்திய ஏற்பாடும் செய்யப்பட்டன.

தேர்வுமுறை மாணவரின் கல்வி வளர்ச் சிக்கு முட்டுக்கட்டையானது என்பது கவிஞ ரின் கொள்கை. அறிவை வளர்ப்பதில் உரிமை யுணர்ச்சி இன்றியமையாதது என்றும், இல்லை யானல் கல்வி என்பது கட்டாய உணவுமுதலி யனபோல் தீமை செய்யும் என்றும்உணர்ந் தார். சாந்திநிகேதனம் பள்ளிக்கூடத்தில் மற்றவர்களின் விருப்பத்திற்கு இணங்க தேர்வு திட்டப்படி கல்வி முறை அமைத்திருந்தார். ஆனல் முதலிருந்தே அவருடைய மனதில் அதை எதிர்த்துப் போரராட்டம் நடந்தது. பின்னர் 1920 இல் சாந்திநிகேதன ஆசிரியர் கள் கவிஞரின் கருத்துப்படி தேர்வு முறையை கைவிட்டனர். குறிப்பிட்ட காலம் வரை படித்தால் அந்தப் படிப்பில் அனைவரும் பட்டம் பெற்றதாகவே கருதப்பட்டு பட்டம் கொடுக்கப்பட்டுவிடும். தேர்வு என்பதே கிடை யாது. ஆனல் 1951 இல் மத்திய பல்கலைக் கழக அமைப்புக்குழுவினல் தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இருந்தும் பட்ட மளிப்பு விழா மிகஎளிமையாக பாரம்பரிய முறைப்படியே இன்றும் நடக்கின்றது என் பது குறிப்பிடத்தக்கது. இப்போதும் முன்பு போலவே மிக எளிமையாக ‘சப்தபரணி’ (சப்தபரணி என்பது ஒருமரம்) கொடுக்கும் நிகழ்ச்சியாகவே கொண்டாடப்படுகின்றது.

இன்றைய விஸ்வபாரதி பல்கலைக்கழகத் தின் சிறப்பம்சம் என்னவென்ருல் பட்டப் படிப்பு படிக்கிற மாணவ, மாணவியர் சுற்றுப்புறக்கிராமங்களிலுள்ள மக்களோ டும் – தொழிலாளர், விவசாயிகளோடும் நேரடித்தொடர்பு கொண்டுள்ளனர். அவர் களின் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுகின்றனர். அவர்களுக்குக் கைத்தொழில்களை கற்றுத் தந்து அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப்பாடுபடுகின்றனர். மற்ற பள்ளிகளி லும் கல்லூரிகளிலும் சமூகசேவை என்பது வெறும் பொழுது போக்காகவோ அல்லது எப் போதாவது போய்ச் செய்யும் ஒரு செயலாக வோதான் இருக்கும். ஆனல் இங்கு அது அன்ருடம் படிக்கும் ஒரு பாடம்.

விவசாயப் படிப்புக்கு என்று இருக்கும் ‘ஸ்ரீநிகேதன்’ பிரிவில் பயிலும் மாணவ மாணவியர்கள் சுற்றுப்புவத்திலுள்ள விவ சாயிகளோடு அன்ருடம் நேரடித்தொடர்பு கொண்டுதான் படிப்பு நடைபெறும்.

---

★ *படிவக் கற்களைக் கொண்டு சிலையை செருக்குவது வது போன்றே கல்வி, ஆன்மாவைப் பக்குவப்படுத்தும். ஒரு பாமரனுள் கரந்துறையும் தத்துவஞானி, வீரன், விவேகி, குணசீலன், மேதை ஆகியோரை கல்வி அகழ்ந்து அரங்குக்கு அழைத்துக் கொண்டு வரும்.*

— அடிசன்

★ *ஆசிரியர்கள் கற்பிப்பதை ஒரு வர்த்தக முறையாக்கி விட்டனர். மாணவர்களும் ஒருவகை நிர்ப்பந்தத்தா லேயே பாடசாலை செல்கின்றனர்.*

— ஐவன் இலிச்

## மறைவாக நமக்குள்ளே

☐ சொந்த மண்ணிலே சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதை விட்டு விட்டு அன்னிய மண்ணிலே, அகதி முகாம்களிலே 'அசைலம்' (Asylum) கேட்டு சரணுகதி அடைந்து ஒரு வேளை சோற்றுக்கும் கையேந்தி நிற்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

— கி. ப்ரியா – சுண்டிக்குளம்

❊ நினைக்கப்படக் கூடாதவர்கள்.

☐ புரியாத சிறுகதைகளைப் படைக்கும் 'அதிமேதாவி' எழுத்தாளர்கள், தாங்கள் பெரிய இலக்கியத்தைப் படைத்துவிட்டோம் என்று மார்தட்டி நிற்பதன் மகத்துவம் பற்றி?

—க.சிவதாஸன், 'ஜனசக்தி'

❊ சிறுகதைகள் மட்டும்தான் புரியவில்லையா? அப்படியானுல் கவலைப்பட வேண்டியதில்லை. பலர் நாவல், கவிதை, கட்டுரை என்றுகூட கவலைப்படுகிருர்கள்.

## ஜராதுஷ்டிரன்

ஒரு முறை வங்க நாவலாசிரியரான சரத் சந்திரரைப் பாராட்டுவதாக எண்ணி ஒருவர் கூறினுர்: 'நீங்கள் எழுதுவது எவ்வளவு நன்ருகப் புரிகிறது. குருதேவர் இரவீந்திரநாத் தாகூர் எழுதுவது ஒன்றுமே புரியவில்லை. அவரை விட நீங்கள்தான் சிறந்தவர்'

சரத்சந்திரர் பதறிப்போய்க் கூறினுர். விடயம் அதுவல்ல. குருஜி எங்களைப் போன்றவர்களுக்காக எழுதுகிருர். நான் உங்களைப் போன்றவர்களுக்காக எழுதுகிறேன். அது தான் வித்தியாசம்'

ஒருமுறை பெனுட்ஷாவின் நூலை வெளியிட்ட பிரசுரகர்த்தா 'விற்பனை அபாரம். பிரதிகள் அனைத்தும் உடனடியாக விற்றுத் தீர்ந்துவிட்டன' என்று ஷாவுக்கு மகிழ்ச்சியுடன் தந்தியடித்தார். ஷா அதற்குப்பதிலாக பின்வருமாறு தந்தியடித்தார்.

'விற்பனையை நிறுத்து. நூல் மிகவும் மோசம் போலிருக்கிறது'.

தமிழ் நாட்டில் சமீபத்தில் காலஞ்சென்ற க. நா. சுப்பிரமண்யம் பற்றியும் இப்படி ஒருகதை உண்டு. ஒரு நியூஸ் ஏஜெண்ட் தனது கடைக்கு வந்த எழுத்தாளரிடம் 'என்ன நீங்கள் எல்லாரும் க. நா. சு – வை தலைக்குமேல் வைத்துக் கொண்டாடுகிறீர்கள். அவரது நூல்கள் அதிகம் விற்பனையாவதில்லையே' என்று கவலைப்பட்டார். அதற்கு எழுத்தாளர் 'க. நா. சு. எங்களுக்காக எழுதுகிருர். நாங்கள் வாசகர்களுக்காக எழுதுகிருேம்' என்று பதில் கூறினுர்.

பழகுதமிழில் எழுதிய பாரதியின் ஞானரதம், குயில் பாட்டு எல்லாம் உங்களுக்கு விளங்கிவிட்டதா? கம்பனின் எந்தவொரு பாடலையாவது பொழிப்புரை இல்லாமல் உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? புரிதல் என்பது தேடுதல் தான். இந்தத் தேடுதல் இலக்கியம் படைப்பவனுக்கும் அவசியம்தான். படிப்பவனுக்கும் அவசியம் தான். இரண்டுமே ஆத்மாவுடன் தொடர்பு கொண்டவை. ஆகவே இருத்தலுக்கு புரிதலான தேடுதல் அவசியம். தேடுதலின் இறுதிப் பயனே இலக்கியத்தின் தரததை எடைபோடும். ஆகவே, எநதவொரு எழுத்தாளனும் பிறருக்கு விளங்கக்கூடாது என்பதற்காக நிச்சயமாக இந்தக்காலத்தில் எழுதுவதில்லை.

## பதிலளிக்கிருர்

முயற்சி இல்லாத புரிதல் வேண்டுமானுல், தமிழ் சினிமா பார்க்க ஓடிப் போங்கள்!

☐ அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்றத்தேர்தலிலே வடக்கு – கிழக்குப் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் 'மிதவாதிகள்' புறக்கணிக்கப்பட்டதேன்?

—சத்யா — குளக்காடு.

✲ வழமையாக நடைபெறும் பாராளுமன்றத்தேர்தல்களில் இந்த மிதவாதிகள் நடாத்தும் மேடைக்கச்சேரிகள், களியாட்ட விழாவான மாநாடுகள், சுவரொட்டி வீர வசனம், அங்கங்கே மறைவாக 'தாகசாந்தி' காரோட்டம், பணநோட்டுக்கள் கைமாற்றம், தேர்தல் காலங்களில் மிதவாதிகளின் வீடுகளில் உரிமையுடன் புகுந்து, சமையல்கட்டு வரை சென்று வீட்டுப்பெண்களிடம் உணவு கேட்க வாய்ப்புகள் வழங்கும் சாணக்கியங்கள் எதுவும் இம்முறை மிதவாதிகளுக்கு கிடைக்காமல் போனமையே. இவற்றினாலேயே இவர்கள் அந்நியமாகிப் போனார்கள்.

மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சி. பழைய தேர்தல் மயக்கங்கள் நீங்கியமை. மிதவாதிகள் ஒவ்வொருவரைப்பற்றியும் சுயமாக விமர்சனப் பார்வையுடன் எண்ணிப்பார்க்க கிடைத்த நிர்ப்பந்தங்கள்.

☐ இலக்கியமானது மக்களுக்காகவே படைக்கப்பட்டதாக இருக்கவேண்டும். பாமர மக்களும் விளங்கிக்கொள்ளக் கூடியமுறையிலும் எல்லோரின் வாழ்க்கைக்கு வழிகாட்டக் கூடியதாகவும், இலகுவாக அமையவேண்டும். மற்றவை அனைத்தும் குப்பைத்தொட்டிக்குச் செல்லவேண்டிய காகிதக் குப்பைகள். இதுபற்றிய உங்கள் கருத்தென்ன?

— யேசுராசா — யாழ்ப்பாணம்.

✲ இலக்கியத்தை மக்களுக்காகத்தான் படைப்பதாக எல்லா எழுத்தாளரும் கூறுவர். ஒவ்வொரு மினிநாவலும் மூன்றுஇலட்சம் பிரதிவரை விற்பனையாகும். எழுத்தாளர் ராஜேஷ்குமார் கூட 'நான் மக்களுக்காகத்தான் எழுதுகிறேன். அவர்களுக்கு நன்கு விளங்குகிறது எனது எழுத்து. குற்றம் செய்தவன் தண்டிக்கப்படுவான். எனவே குற்றம் செய்யாதிரு' என்ற படிப்பினையும் வழிகாட்டலும் தான் என் எழுத்தின் நோக்கம். அதுவே என் எழுத்தின் வெற்றி, என்கிறார். அவர் நாவல்கள் என்ன குப்பைத் தொட்டிக்கா போகவேண்டும்.' (அம்மாடி யோவ்! எவ்வளவு குப்பைத் தொட்டிகள்) ஆகவே, எழுத்தின் கதையை கருவை விளங்குவது முக்கியமல்ல. எழுத்தின் தொனியை விளங்குவது தான் முக்கியம். அதற்கான பயிற்சியை எழுத்துகள் முதலில் வாசகர்களுக்கு வழங்கியே தீரவேண்டும். ஆரம்பத்தில் எதுவுமே விளங்கிவிடும் என்பதும் பொருளல்ல. வாழ்க்கைக்கு வழிகாட்டல் என்கிறீர்கள். வாழ்க்கை என்றால் என்ன? ஆளுக்காள் வாழ்க்கை பற்றிய கருத்தேற்றங்கள். சிலரின் வாழ்க்கைக்கு படிக்கவே நேரமிருப்பதில்லை. வாழ்க்கைக்கு வழிகாட்டும் எழுத்தாளர் எத்தனைபேர் வாழ்க்கையில் வெற்றிபெற்றுள்ளனர். முதலில் போலியான மயக்கங்களை (இவை புத்திஜீவிகள் தந்த மயக்கங்கள்) விட்டொழியுங்கள்.

☐ சல்மன் ருஷ்டிக்கு ஈரானியத்தலைவர் அயதுல்லா கொமனி மரணதண்டனை விதித்திருப்பது எழுத்துச் சுதந்திரத்திற்கும், பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் அடிக்கப்பட்ட சாவுமணியல்லவா? இதனை எதிர்த்துப் பல நாடுகள் மௌனம் சாதிப்பதேன்?

— தாறிக் — மன்னார்

✲ நிச்சயமாக பத்திரிகைச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் இரண்டிற்கும் இந்த மரணதண்டனை ஒரு சாவு மணிதான். ஆனால் 'சாத்தானின் செய்யுட்கள்' என்ற பிரச்சனைக்குரிய நூலைப்படிக்காமல் இக்கேள்விகளுக்கு விடையளிப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது. எனினும்,

இந்த விடயத்தில் பலநாடுகள் மௌனம் சாதிப்பதே இது இலக்கியம், பத்திரிகை எழுத்துச் சுதந்திரத்துக்கும், மதத்துக்கும் அப்பால், அரசியல் ரீதியான எழுந்த பிரச்சனை என்பதனைப் புலப்படுத்துகிறது. இதில் பிரித்தானியரைவிட, அமெரிக்கரின் கை கூடுதலாக வேலை செய்திருப்பதாக கருதப்படுகிறது. ஈரான் மட்டுமல்லாது அமெரிக்காவின் பங்கும் பல நாடுகளை மௌனிக்க வைத்துவிட்டன. அதேவேளையில்,

பத்திரிகை சுதந்திரம் என்றுபேசுகிறோம். நாம் இத்தகவல்களைப் பெற உதவிய பத்திரிகைகள் உண்மைகளை எந்தளவிற்கு வெளியிட்டுள்ளன என்பதே விவாதத்திற்குரியது முற்றிலும் தெரியாத ஒன்றிற்கு விளக்கம் கூறுவது சிறுபிள்ளைத்தனம்.

# 'பெரஸ்ரோய்க்கா'

S. ஞானசேகர்

சோவியத் யூனியனில் இன்று மாபெரும் சமுதாய மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அரசியற் சீர்திருத்தம், கூடுதல் ஜனநாயகம், பகிரங்கத்துவம், பொருளாதார அமைப்புமுறை மாற்றம் என பல்வேறு துறைகளிலும் ஏற்படும் மாற்றங்கள் கம்யூனிசத்தை நோக்கிய பாதையில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்த பெரஸ்ரோய்க்காவைக் கண்டு முதலாளித்துவம் கிலிகொண்டுள்ளது. தற்போது உள்ள சோசலிச அணியுடன் போட்டிபோடுவதற்கே உலகிலுள்ள 3ம் உலக நாடுகளை எல்லாம் சுரண்டிக்கொண்டிருக்கிற மேற்தலகானது பெரஸ்ரோய்க்கா ஏற்படுத்தப் போகும் பொருளாதாரப் பாய்ச்சலை எப்படி முகம் கொடுப்பது என்று புரியாமல் குழம்பிப் போயிருக்கிறது. தாம் அணிந்து கொண்டுள்ள முகமூடிகளான ஜனநாயகம், சுதந்திரம் என்பவற்றை நோக்கி உண்மையிலேயே சோவியத்யூனியன் நகர்வதைக் கண்டிக்கவும் முடியாமல், பொறுத்துக்கொள்ளவும் இயலாமல் முன்னுக்குப் பின் முரணகப் பிதற்றுகின்றது.

## எதிரானதா?

அதேவேளை 3ம் உலக நாடுகளில் இன்று முனைப்பாகியுள்ள, மார்க்சியவாதிகளால் முன்னெடுக்கப்படுகின்ற நவகாலணித்துவ எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்களை பலவீனப்படுத்தும் நோக்குடன் தமது வெகுசனத் தொடர்பு சாதனங்களினூடாகவும் திருச்சபைகள் போன்ற கருத்துருவ அடக்குமுறைச் சாதனங்களினூடாகவும் மார்க்சியம் பொய்யாகிவிட்டது என்றும் சோசலிச நாடுகள் எல்லாம் மார்க்சியத்தினின்றும் விலகி ''தங்களைப்போன்றே'' ஜனநாயக வழிக்குத் திருப்பிக்கொண்டிருப்பதாகவும் 'காதுக்கினிய' கட்டுக்கதைகளை அவிழ்த்து விடுகின்றன.

இங்கு எனக்குக் கிடைத்த வேடிக்கையான அனுபவம் ஒன்றையும் கூறியாகவேண்டும். அவர் எனது பாடசாலை நண்பர், கிறிஸ்தவ மதவாதி. என்னை சந்தித்தபோது ''பார்த்தீர்களா எல்லோரும் மார்க்ஸ் மார்க்ஸ், என்று கூவினீர்களே இப்பொழுது ரஷ்யாவில் என்ன நடக்கிறது?'' என்று கிண்டலாகக் கேட்டார். திருச்சபையால் காதிற் பூச்சூட்டப்பட்ட அவரைப் பார்க்கும்போது எனக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. நான் அவரிடம் இரண்டு கேள்விகள் கேட்டேன். மார்க்சியம் என்றல் என்ன அதாவது மார்க்சியத்தின் தன்மை சார்ந்த பெயர் என்ன? பெரெஸ்ரோய்க்காவில் அடங்குகின்ற பிரதான அம்சங்கள் எவை?

## மார்க்சியத்திற்கு

அவராலோ இதை வாசிக்கின்ற அநேக மாணவர்களினுலோ இவற்றிக்குப் பதில் கூற முடியாது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. மார்க்சியம் என்றால் என்னவென்றே தெரியாதவர்களெல்லாம் அதை விமரிசிப்பதும் பிழைபிடிப்பதும் மிகவும் வேடிக்கையானது. மார்க்சியத்தை தெரிந்துகொள்ளு முன்பாகவே அது பிழையானது என்ற கருத்துருவம் முதலாளித்துவத்தின் கொடிய அடக்குமுறைச் சாதனங்களால் அவர்கள் மனங்களில் விதைக்கப்பட்டுள்ளது. அவர்கள், தாம் எப்படி ஏமாளிகளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் ஏன் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது என்றும் சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

ஆனல், மார்க்சியம் ஒரு சார்புத்தன்மையுள்ள அரசியல் நூலோ அல்லது மார்க்ஸ் ஒரு அரசியல்வாதியோ அல்ல. அது ஒரு தத்துவம்; அவர் ஒரு தத்துவ ஞானி. உண்மையில் மார்க்சியம் என்பது மிக மிக முழுமையான, ஆழமான, முரணில்லாத, சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கை விவரிக்கின்ற விஞ்ஞானபூர்வமான இயங்கியல் ஆகும்.

பொருளுற்பத்தியே சமுதாய வாழ்வின் அடித்தளம் என்று மார்க்சியம் கூறுகிறது. பொருளுற்பத்தியை மையமாகக் கொண்டே சமுதாயத்தின் பொருளாதார உறவுகள் அல்லது உற்பத்தி உறவுகள் அமைகின்றன. இவ்வுறவுகளே அடித்தளமானவை, முதனிலை யானவை, ஏனைய எல்லா உறவுகளையும் நிர்ணயிப்பவை.

இந்த உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்குமிடையிலான காலத்துக்குக் காலம் ஏற்படும் முரண்பாடுகளே புரட்சிகளைத் தோற்றுவிக்கின்றன. அதன்மூலம் வரலாற்றை முன்னெடுத்துச் செல்லுகின்றன என மார்க்ஸ் கூறினார்.

உற்பத்தி சக்திகள் எனப்படுபவை உற்பத்தி யின் மூலப்பொருட்களும் உற்பத்திச் சாதனங் களும் மக்களுடைய உழைப்புச் சக்தியுமாகும். விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியாலும் உழைப்பின் மீதான மக்களுடைய சிறப்புத் தேர்ச்சி மற்றும் அனுபவத்தாலும், இவை இடையுறுமல் வளர்ச்சியடைந்த வண்ணம் இருக்கின்றன.

ஒரு குறிப்பிட்ட சமுதாய அமைப்பு நிர் மானிக்கப்படுகின்ற ஆரம்பத்தில் அதன் உற்பத்தி உறவுகள் உற்பத்திச்சக்திகளின் தன்மைக்கு ஏற்றவண்ணமாய்க் காணப்படு கின்றன. ஆனால் உற்பத்திச்சக்திகள் இடையுறுது வளர்ச்சியடைகையில், ஒரு நிலையில் அந்த உற்பத்தி உறவுகள் உற்பத் திச்சக்திகளின் வளர்ச்சியைத் தடைசெய் கின்ற, சமுதாயத்தில் தேக்கநிலையை ஏற் படுத்துகின்ற காரணிகளாக அமைகின்றன. இதன் அடுத்தகட்டமாக அங்கு புரட்சி வெடிக்கிறது, புதிய சமுதாய அமைப்பு உருக்கொள்கிறது, புதிய உற்பத்தி உறவு கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இது மீண் டும் மீண்டும் சுழல்நிகழ்வாக நடைபெறு வதன் மூலம் வரலாறு தொடர்ந்து முன் னேக்கிச் செல்கிறது.

உதாரணமாக நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவம் உருவானதைக் கருது வோம். நிலப்பிரபுத்துவத்தின் பிரதான உற்பத்தி உறவான நிலப்பிரபு-கூலிவிவசாயி என்ற உறவுமுறை, கைத்தொழிற்புரட்சியி னூடாக வளர்ச்சியடைந்துகொண்டிருந்த உற்பத்திச் சக்திகளுடன் முரணித்தபோது அங்கு முதலாளித்துவப் புரட்சி நடைபெற் றது. பொருளுற்பத்தி கைத்தொழில்மய மாக்கப்பட்டது, புதிய பொருளாதார உறவாக முதலாளி – தொழிலாளி உறவு உருவாகியது.

இப்புரட்சியின்போது நிலப்பிரபுவர்க்கம் தம்முடைய நலன்களை முற்றுக இழக்க வேண்டியதாயிற்று. ஆகவே அது இறுதி வரையிலும் புரட்சியை எதிர்த்து நின்றது. ஆனல் நாம் மிகத்தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டியது இதுதான். நிலப்பிர புக்களால் முதலாளித்துவப் புரட்சி ஏற்படு வதைத் தடுத்து நிறுத்த முடிந்ததா? அல்லது அதற்கு முக்கிய சமுதாய அமைப் பான அடிமை உடமை சமுதாயத்திலிருந்து நிலப்பிரபுத்துவம் உதயமாவதை அடிமை யுடமையாட்களால் தடுக்க முடிந்ததா? இல்லை! இது போன்றுதான் முதலாளித்து வத்திலிருந்து சோசலிசம் நிர்மாணமாவது மாகும்.

ஏனெனில் ''வரலாறு என்பது தற்செய லான நிகழ்வுகளின் தொகுப்பு அல்ல. வர லாற்றின் வளர்ச்சி திட்டவட்டமான விதிக ளினுல் ஆளப்படுகிறது. இவை புறநிலை எதார்த்த விதிகளாகும். ஆகவே இவை மக்களுடைய சித்தத்தையும் உணர்வுகளையும் சார்ந்திராதவை. மாறுக இவைதான் மக் களுடைய உணர்வையும் சித்தத்தையும் அவர்களது செயல்களையும் நிர்ணயிப்பவை'' என மார்க்ஸ் கூறுகிறுர்.

முதலாளித்துவத்திலிருந்து சோசலிசம் உதயமாவதும் மனிதகுலத்தின் முன்செலுத் தலுக்கான, வரலாற்றின் வளர்ச்சிக்கான ஒரு தவிர்க்கமுடியாத நிகழ்வேயாகும். சோசலிசப்புரட்சியானது மனிதகுல வரலாற் றில் முதற்றடவையாக தனிச்சொத்துரி மையை இல்லாதொழிக்கிறது. இதன் பொருள், சோசலிசம் தனிஆளையோ அவ ரது சொந்தத்தேவைகளையோ மதியாது சிறுமை செய்கிறது என்பதோ அல்லது வறு மையின் மூலமாக மக்களைச் சரிசமனுக்குகி

றது என்பதோ அல்ல. இதற்கு நேர்மாறாக உழைக்கும் மக்களுடைய தேவைகள் முழு நிறைவாகப் பூர்த்திசெய்யப்படுவதற்குரிய நிலமைகளை சோசலிசம் வரலாற்றில் முதன் முறையாக உருவாக்குகிறது. கூட்டுழைப்பும் உற்பத்திச் சாதனங்களது பொதுவுடைமையும் வாழ்க்கைத்தரததை பெருமளவு உயரச்செய்கின்றன. மக்கள் அனைவருக்கும் கிட்டும்படியாகிவிட்ட கலாச்சாரத்தை வளர்த்து செழுமைபெறச் செய்கின்றன.

இவ்வாறு முதலாளித்துவத்திலிருந்து உருவாகின்ற சோசலிச அமைப்பானது என்றென்றெய்க்குமாய் நிலைத்திருக்கின்ற என்றல்ல. அங்கும் உற்பத்திசக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்குமிடையே காலத்துக்குக்காலம் முரண்பாடுகள் தோன்றும். தேக்கநிலையும் சீர்குலைவுகளும் உண்டாகும். அவை காலத்திக்குக்காலம் சமுதாய அமைப்பை மாற்றியமைக்கும். இவ்வாறுதான் அங்கும் வளர்ச்சி நடைபெறுகிறது.

ஆனால் அங்குள்ள வேறுபாடு யாதெனில் நடைபெறுகின்ற மாற்றங்கள் சமரசமான முறையில் செயற்படுத்தப்படுவதுதான். இதன் காரணம், சோசலிசம் அமைப்பில் ஒன்றுக்கொன்று முரணான வர்க்கங்கள் இல்லாமையே சோசலிசத்திற்கு முந்திய சமூக அமைப்புகளிலெல்லாம் ஏற்பட்ட முரண்பாடுகள் பகை முரண்பாடுகளாய் இருந்தன. ஒன்றுக்கொன்று முற்றிலும் எதிரான வர்க்கங்களிடையே போராட்டம் நடைபெற்றது. ஒருவர்க்கத்தின் வீழ்ச்சியிலேயே மற்றைய வர்க்கத்தின் வளர்ச்சி தங்கியிருந்தது. ஆகவே அங்கு சமுதாய மாற்றங்கள் இரத்தம் சிந்திய புரட்சிகளினூல் பிறப்பிக்கப்பட்டன.

ஆனல், ஒரு சோசலிச சமுதாயத்தின் பிரதான வர்க்கங்களான தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவு ஜீவிகள் யாவரும் உழைப்பாளி மக்களே! அவர்கள் ஒன்றுக்கொன்று எதிரான ஒன்றையொன்று நசுக்குகின்ற வர்க்கங்கள் அல்ல. மாறாக, ஒன்றிலொன்று தங்கியிருக்கின்ற ஒன்றின் நலனில் ஒன்று பரஸ்பர அக்கறையுள்ள வர்க்கங்களாகும். ஆகவேதான் சோசலிசத்தின் முரண்பாடுகள் ஒன்றுகூடி விவாதிப்பதன் மூலம் தீர்க்கக்கூடியதாய் அமைகின்றன.

இவ்வாறான ஒரு மாற்றம்தான் இன்று சோவியத்யூனியனில் நடைபெறுகின்ற பெரஸ்ரோய்க்காவாகும். இந்த பெரஸ்ரோய்க்காவுக்குப் பின்னர் நிர்மாணிக்கப்படும் சமுதாய அமைப்புக்கூட என்னென்றெக்குமாய் நிலைத்திருக்கப்போகின்ற ஒன்று அல்ல. அவ்வாறு ஒன்று தொடர்ந்து நிலைத்திருக்குமாயின் அதுதான் மார்க்சியத்திற்கு எதிரானதும் முதலாளித்துவ சமூக ''விஞ்ஞானங்களுக்கு'' இசைவானதுமாகும்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழுவால் முன்வைக்கப்பட்ட மறுசீரமைப் புத்திட்டத்தை காரசாரமான விவாதங்களின் பின்னர் சில சீர்திருத்தங்களுடன் கட்சியின் 19 வது அனைத்து ஒன்றிய மகாநாடு அங்கீகரித்தது. மறுசீரமைப்பின் பிரதான அம்சங்கள் பொருளாதார அமைப்புமுறை மாற்றம், ஜனநாயக மேம்படுத்தலும் அரசியற் சீர்திருத்தமும், அதிகாரத்துரைத்தனத்தை முறியடித்தல். இனங்களுக்கிடையிலான உறவுகளை மேலும் செழுமைப்படுத்தல், பகிரங்கத்துவம் (கிளாஸ்நொட்) மற்றும் சட்டசீர்திருத்தம் என்பவையாகும்.

அக்டோபர் புரட்சியின் பின்னர் தாபிக்கப்பட்ட அமைப்பானது உலகின் மிகப் பின் தங்கிய நாடுகளின் ஒன்றாயிருந்த ருஷ்யாவை உலகின் முன்னணி நாடான சோவியத் யூனியனாக மாற்றியமைத்தது. பின்னர், தேக்க நிலைக் காலகட்டத்தில் தற்போது சீர்படுத்தப்படுகின்ற பலவிடயங்களிலும், சீர்குலைவுகளும், பின்னடைவுகளும் ஏற்பட்டன என்பது வாஸ்தவமான ஓர் உண்மையே. ஆனல் தத்துவரீதியாக இது இயல்பானது. ஒரு தேக்கநிலைதான் அடுத்தகட்ட வளர்ச்சிககு அத்திவாரமிடுகிறது.

பெரஸ்ரோய்க்காவைப் பற்றிய விமரிசனங்களில் முதலாளித்துவ வாதிகளால் பரவலாக கையாளப்படுவது 'ஜனநாயகப்படுத்தல்' ஆகும். சோவியத் யூனியனின் ஒரு கட்சி

ஆட்சிமுறை நீங்கும் வரையிலும் அங்கு ஜன நாயகம் மலரப்போவதில்லை என்று அவர்கள் கூறுகிறுர்கள். ஆனுல் ஒரே கட்சியே ஆட்சி யிலிருக்கின்ற ஆர்மேனிய, ஆசர்பைஜான் பாராளுமன்றங்கள் ஒன்றுக் கொன்று முற்றி லும் முரணுன தீரமானங்களை நிறைவேற்றி யிருப்பதையும் ஒரே கட்சியின் மகாநாட்டில் ஒவ்வொரு தனி உறுப்பினருக்கும் இருந்த சுதந்திரத்தையும் அவர்கள் காணத் தவறி விடுகிறுர்கள்.

பல கட்சி ஆட்சி என்பது பல்வேறு கருத் துக்களைக் கொண்டவர்களினுல் தான் ஏற் படுவது அல்ல. அப்படியாயின் 30 கோடி வாக்காளர்களைக் கொண்ட ஒரு நாட்டில் 30 கோடி கட்சிகள் இருக்க வேண்டும். ஏனெ னில் எந்த இரு மனிதர்களும் எல்லா வகை யிலும் ஒத்த கருத்துக்களைக் கொண்டிருப்ப தில்லை. உண்மையில் பல கட்சிகள் தோன்று வதன் காரணம் பல்வேறு வர்க்க அடித் தளங்களைக் கொண்ட ஓர் சமூக அமைப்பில் ஒவ்வொரு வர்க்கத்தினரதும், ஒவ்வொரு மக்கட் பிரிவினரதும் நலன்களைப் பாதுகாப் பதற்கேயாகும். ஆனுல் சோசலிச சமுதா யத்தில் உழைக்கும் மக்களின் வர்க்கமான ஒரேயொரு வர்க்கமே இருக்கிறது. ஆகவே தான் அங்கு உழைப்பாளி வர்க்கத்தின் ஏக பிரதிநிதியாக கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியி லிருக்கிறது.

கட்சியின் மகாநாட்டில் உரையாற்றுகை யில் கொர்ப்பச்சேவ் பின்வருமாறு கூறினுர். ‘‘முன்னர் ஒருதலைப்பட்சமாக கையாளப் பட்ட அல்லது முற்றுகவே புறக்கணிக்கப் பட்ட மார்க்ஸ், லெனின் ஆகியோரது பல கருத்துக்கள் இப்போது மீள் சிந்திக்கப் படுகின்றன.’’

ஆகவே சோவியத்யூனியனில் நடைபெறு கின்ற பெரஸ்ரோய்க்காவானது முதலாளித் துவத்தை நோக்கிய பாதையல்ல அது உண்மையான ஜனநாயகத்தை நோக்கிய, அதாவது கம்யூனிசத்தை நோக்கிய பாதை யாகும்.

ஆம்! கம்யூனிசமே கம்யூனிசம் மட்டுமே நிறைவான சமாதான சகவாழ்வை, ஜன நாயகத்தை மானிட உயிர்ப்பை மனித குலத்திற்கு வழங்கும்.

**மார்க்சியம் சர்வவியாபகமானது. ஏனெனில் அது உண்மையானது.**

**வி, இ. லெனின்**

---

*உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகளே அல்ல.*
*அவர்கள் உங்கள் வழியாக வந்தவர்களே தவிர*
*உங்களிடமிருந்து வந்தவர்கள் அல்ல.*
*உங்களது எண்ணங்களை அவர்கள் மீது சுமத்தாதீர்கள்-அவர்கள்*
*தங்கள் எண்ணங்களோடு உலகிற்கு வந்தவர்கள்.*

— கலில் கிப்ரான்

*குழந்தை வளர்ப்பு என்பது எளிதானதல்ல.*
*அது எதிர்கால உலகையே உருவாக்கும் ஒரு புனிதமா பணி*

— ரூஸோ

*எல்லா ஆண்களும் பெண்களும் சமமே.*
*இவர்களுள் ஏற்றத்தாழ்வு இல்லை.*

— கன்பூஷியஸ்

# நூற்றுண்டை நோக்கி யாழ் இந்து...

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வண்ணுர்பண்ணையிலே 1890 ம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. அகில இலங்கையிலே தலைசிறந்த கல்லூரிகளில் (All Island Schools) ஒன்ருன இது தன் வரலாற்றில் பலசோதனைகள் மத்தியிலே சாதனைகள் பல படைத்து இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது. ஆங்கிலேயரின் ஆட்சியின்பொழுது கெடுபிடிகளுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டதனுலோ என்னவோ அதைத்தொடர்ந்து வந்த எந்த ஆக்கிரமிப்பு சக்தியாலும் இதன் வளர்ச்சியிலே எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தமுடியவில்லை. பிரச்சினைகள் பல எதிர்நோக்கினுலும், காலத்தின் தேவையறிந்து சமூகத்திற்கு சகலவழிகளிலும் சேவையாற்றி வருகின்றது. கல்வி, விளையாட்டு உட்பட சகலதுறைகளிலும் பலமாணவர்களை உருவாக்கிய யாழ். இந்து இவ்வருடம் தன் நூருவது வயதில் காலடி எடுத்துவைத்துள்ளது. இதையொட்டி இச்சிறப்புக்கட்டுரையை பிரசுரிப்பது பொருத்தமென எண்ணுகின்றேம்.

— ஆசிரியர் குழு

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிறப்பு சமூக இயக்கத்தின் வெளிக்கிளம்பல்

— கலாநிதி சபா. ஜெயராசா
விரிவுரையாளர், கல்வித்துறை.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தோற்றம் கல்வி சார்ந்த சமூக இயக்கத்தின் வெளிக் கிளம்பலாகவும் தேவையாகவும் அமைந்தது. ''இந்துக் கல்லூரிச் சமூகம்'' என்ற தொடர் அதன் சமூகப் பங்கினையும் பணியினையும் குறிப்பிடும் குறியீடாகக் கொள்ளத்தக்கது. சமயம் என்பதற்கு மிகவும் ''ஒடுங்கிய'' வரைவிலக்கணத்தைக் கொடுப்பதன் வாயிலாக இந்துக் கல்லூரி இயக்கத்தை முழுமையாக விளக்கிவிட முடியாது. பிரித்தானியர் ஆட்சியின் கல்வி சார்ந்த சமூக நடைமுறைகளின் நேர் வெளிப்பாடாக மட்டுமன்றி சுரண்டலுக்கும் ஒடுக்கு முறைக்கும் எதிரான கல்வி நிறுவன ஒழுங்கமைப்பாகவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முகிழ்த்தெழுந்தது.

கிறிஸ்தவ சமயத்தின் தியாக உணர்வுகளை முதற்கண் நாம் புரிந்துகொள்ளுதல் வேண்டும். கல்வி வரலாற்றை எழுதியவர்கள் பலர். இந்த நடப்பியலை அறிந்து கொள்ளாது, இலங்கையிற் சமயப் பூசலை வளர்த்து வந்துள்ளனர். அந்நிய சுரண்டல் அரசுகள் தமது ஒடுக்கு முறைகளை வெளிப்படையாகத் தெரியாது மறைப்பதற்குச் சமயத்தைக் கேடயங்களாகப் பயன்படுத்தின. ஒடுக்குமுறைகளை அரசே மேற்கொண்டது. சமயம் மேற்கொள்ளவில்லை.

அடுத்ததாக இந்து சமயத்தின் சமூக இயல்பினை நோக்குதல் வேண்டும். பின பற்றுவோரிடையே கட்டற்ற சுதந்திரங்களை வழங்கும் ஒரு சமயமாக இந்து சமயம் விளங்குகின்றது. அதன் காரணமாக இந்து சமயம் பழைமையும், புதுமையும் ஒருங்கே மலரும் சமயம் என்றுகொள்ளப்படும்.

ஆறுமுக நாவலரின் ஆளுமையை ஆராய்ந்தால் இந்தப் பண்பைத் தெளிவாக விளக்க முடியும். பழைமையை இறுகப் பற்றிநின்ற ஆறுமுக நாவலர், விவிலிய வேதத்தை மொழிபெயர்த்தும் ஆங்கிலக் கல்வி இயல்புகளை வெகு இலாவகமாக உள்வாங்கியும் செயற்பட்டார்.

ஆங்கிலேயரது பொருளாதார நடவடிக்கைகள் ஆங்கிலக் கல்வியோடு பெருமளவில் இணைந்திருந்தன. 1829 ஆம் ஆண்டில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட கோல்புறூக்—கமரன் குழுவினர் இக்கருத்தை நன்கு தெளிவுபடுத்தினர். இலங்கை மக்கள் அக்காலத்திற் பிழைப்பூதியப் பொருளாதார நிலையில் இருந்தார்கள். கல்வி வாயிலாகக் கிடைக்கப்பெற்ற எந்த ஒரு தொழிலும் சமூக நிலைப்பட்ட மேம்பாட்டை அவர்களுக்கு வழங்கக் கூடியதாக அமைந்தது. கல்வியும் தொழில் முறைகளும் ஒன்றிணைந்த வகையிலே தோன்றிய மத்தியதர வகுப்பினரின் எழுச்சிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தோற்றத்துக்குமிடையே சமாந்தரமான தொடு கோடுகளை வரைய முடியும்.

ஆங்கிலக் கல்வி வாய்ப்பைப் பெற்றவர்கள் தமது இருப்பை விமர்சனம் செய்தார்கள். தமது தாய் மொழியையும் பண்பாட்டையும் மீளாய்வு செய்யத் தலைப்பட்டார்கள். மேலைப்புல அறிவு வளர்ச்சியை உள்வாங்கி அவற்றை இந்த மண்ணில் வளர்க்கக் கூடிய விதைகளை தூவினார்கள். ஆங்கிலக் கல்வி முறையையும், கலவிசார் காட்டுருக்களையும் இந்த மண்ணில் நிலைகொள்ளத் தக்கவாறு வடிவமைத்தார்கள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை பிரித்தானிய அரசு மேற்கொண்ட சில தனித்துவமான நடவடிக்கைகள் இந்துக் கல்லூரி இயக்கத்துக்கு வேகமும், விசையும் ஊட்டின. யாழ்பபாணக் குடாநாட்டில் ஆங்கிலப் பாடசாலைகளை மிசநெறியாளர் மிகுந்த வினைத்திறனுடன் நடத்திவந்தார்கள். அவர்களுக்கு உதவி நன்கொடை அளிப்பதென்று அரசு மேற்கொண்ட முடிவு இந்து சமய இயக்கங்கள் தீவிரமாகச் செயற்படுவதற்குரிய விசைகளுக்குத் தூண்டுதலளித்தது.

கிறீஸ்தவச் சூழல், ஆங்கிலக் கல்வி, வினைத்திறன் கொண்ட செயற்பபாடு, பொது நன்மைகளை மேம்படுத்தல் என்ற மிசனெறியாளரின் செயற்பாடுகள் இந்துக் கல்வி இயக்கங்களுக்கு மேற்கோள் பண்புகளாக அமைந்தன. சைவச் சூழல், ஆங்கிலக் கல்வி, வினைத்திறன்கொண்ட செயற்பாடு. பொது நன்மைகளை மேம்படுத்துதல் என்பவற்றை இந்துக் கல்வி இயக்கங்கள் மேற்கொண்டன. 1872 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி வண்ணார்பண்ணைச் சைவ ஆங்கில பாடசாலையை நாவலர் நிறுவினர். சைவமும் ஆங்கிலமும் வெகு நட்புறவோடு ஒன்றிணைந்துகொண்டன. சைவத்தின் குரலாக ஒலிப்பதற்கு 1889 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்து சாதனம் ஏடு ஒரு பக்கத்தில் ஆங்கில மொழிப் பிரயோகத்தையும் மறு பக்கத்தில் தமிழ் மொழிப் பிரயோகத்தையும் கொண்டிருந்தது.

இச்சந்தர்ப்பத்திற் கல்வியின் வர்க்க சார்புடமை கவனிக்கப்படவேண்டியுள்ளது. சமூக அடுக்கமைப்பின் அதிஉயர் நிலையிலிருந்தோர் ஆங்கில மொழியைத் தமது ஊடகமாகக் கொண்டிருந்தனர் மத்தியதர வகுப்பினர் தாய்மொழியையும் ஆங்கிலத்தையும் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தினர். அடிநிலை மக்கள் தாய் மொழியை மட்டுமே அறிந்திருந்தனர். பிரித்தானிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் நலிவடைந்த தேசிய மொழிக் கல்வி வழங்கலை ஏற்படுத்திக்கொண்டிருந்தன. தேசிய மொழிகள் இரண்டாம் பட்சமானதாகக் கருதப்பட்ட நிலையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் இந்துக்கல்வி இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய செயற்பாடு பொதுமக்கள் தழுவிய இயக்கமாக முனைப்படைவதற்குரிய உள்ளார்ந்த வலுவைக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தோன்றுவதற்குரிய வித்து 1886 ஆம் ஆண்டில் நெவின்ஸ் முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை அவர்களது சிந்தனைகளிலே உருவாகி 1887 ஆம் ஆண்டு செயல்வடிவம் கொண்டது. ''தேசிய நகர்ப்புற உயர் பாடசாலை'' எனற அமைப்பு அதேயாண்டு ஏற்படுத்தப்பட்டது. இரண்டு ஆண்டுக்கால வளர்ச்சியின்

பின்னர் அதனை சட்ட வல்லுனர் எஸ். நாகலிங்கம் பொறுப்பேற்றார். ''நாகலிங்கம் பாடசாலை'' என்ற பெயர் அப்போது அந்தப் பாடசாலைக்கு வழங்கப்பெற்றது. பொறுப்பாளரின் பெயரைப் பாடசாலைக்குச் சூடுதல் இந்துக்கல்வி இயக்கங்களின் தேசியத் தன்மையினைப் பிறிதொருவகையில் எடுத்துக் காட்டும் பண்பாக அமைந்தது. 1890 ஆம் ஆண்டில் அந்தப் பாடசாலையைச் சைவ பரிபாலன சபை பொறுப்பேற்றது. ''இந்து உயர் நிலைப் பாடசாலை'' என்ற பெயர் அப்போது வழங்கப்பட்டது. ''இந்து'', ''சைவம்'' ஆகிய சொற்கள் ஊர்களின் பெயர்களோடு இணைக்கப்பட்டுப் பாடசாலைகளுக்குரிய பெயர்கள் அமைக்கப்படுதல் இந்துக் கல்வி இயக்கத்தின் பிறிதொரு குறியீடாக அமைந்தது. 1902 ஆம் ஆண்டு இந்துக்கல்லூரி ஆட்சிச் சபை நிறுவப்பட்டமை இந்துக்கல்லூரிகளை விரிவாக்குவதற்குரிய நிறுவனக் கட்டமைப்பாக விளங்கியது. இந்தியாவில் மறுமலர்ச்சி பெற்ற இந்து கல்வி இயக்கங்கள், இந்திய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி, தமிழ் மக்களிடையே கல்வியடிப்படையிலே தோன்றிய உயர்ந்தோர் குழாத்தினரது உருவாக்கம், கல்விக்கும் தொழிலுக்குமிடையே காணப்பட்ட நேரடியான உறவு, போன்ற பல்வேறு காரணிகள் இந்துக் கல்லூரிகளின் வளர்ச்சியைத் தூண்டின. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆரம்பம் கல்வித்துறையைப் பொறுத்தவரை உத்தம நிலைச் செயற்பாடாக அமைந்தமையால் கொக்குவில், மானிப்பாய், வட்டுக்கோட்டை, காரைநகர், உரும்பராய், சாவகச்சேரி போன்ற ஊர்களில் இந்துக்கல்லூரிகளின் உருவாக்கம் விரிவடைந்தது.

இந்துக் கல்லூரிகளின் இயக்க வெற்றிக்குப் பல்வேறு காரணிகள் தூண்டுதலளித்தன. முதற்கண் அதிபர் நியமனங்களின் இந்துக் கல்லூரி ஆட்சிச் சபை அதிக கவனம் செலுத்தியது. அதிபர் நியமனங்களில் அறிவுக்கும் பட்டங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டன. அதிபர்கள் தத்தமது கல்லூரிகளுக்குரிய ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதில் மிகுந்த கவனஞ் செலுத்தினுர்கள், பட்டதாரிகளுக்கு நியமனங்களில் முன்னுரிமை வழங்கப்பட்டது. அதிபர்களும் ஆசிரியர்களும் புலமைச் சுதந்திரத்தை அனுபவித்தார்கள். சமூகத்துக்கும் கல்லூரிகளுக்குமிடையே நல்லுறவுகள் பயனடைந்திருந்தன. இந்துக் கல்லூரிகளிற் கற்று உத்தியோகங்கள் பெற்றோரும், மலாயா சிங்கப்பூர், போன்ற நாடுகளிலே தொழில்கள் பெற்றோரும், தம்மை உருவாக்கிய கல்லூரிகள்மீது நன்றிக்கடன் கொண்டிருந்தார்கள். ஆசிரியர்கள் வினைத்திறனுடன் செயற்படுவதற்குரிய சூழல் கல்லூரிகளில் அமைந்திருந்தது. ஆசிரியர்கள் மீது குறைந்தளவு தலையீடுகளே இருந்தன. மார்க்ஸிய அறிவைப் பரப்புவதிலும் இந்துக் கல்லூரிகளிற் கற்பித்த ஆசிரியர்கள் கணிசமான பங்களிப்பைச் செலுத்தினர். அத்தகைய ஆசிரியர்கள் மீது இந்துக்கல்லூரி கல்லூரி ஆட்சிச் சபை எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்காமை பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஆசிரியர்கள் தன்னலமற்ற சேவையைச் செய்தார்கள். அந்தச் சேவைகளுக்கு மதிப்பும், கௌரவமும் கொடுக்கப்பட்டன.

---

கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் கற்றுக் கொடுக்கப்படும் விஷயங்கள் கல்வியல்ல. கல்விக்குரிய சாதனங்களே ஆகும்.

— எமர்ஸன்

இந்த உலகில் மிகவும் புரட்சிகரமானது எதுவென்றால், அது கல்விதான். ஒரு எழுத்தைக் கற்றுத்தருவது ஒரு புரட்சிக்கு வித்திடுவதாகும். ஒரு பாடசாலையைக் கட்டுவது என்றால் —— எதிரியைத் தாக்க ஒரு கோட்டை கட்டப் படுகிறது என்று அர்த்தம்.

— இங்கர்சால்

# இரு நாய்களின் கதை

## செல்லப் பிராணி
## ஜிம்மி

❀ உயர்குலத்திலுதித்த கலப்பினமான இதற்கு தன் பெற்றோர் உட்பட தன் வம்சா வழியைத் தெரியும். பிறப்புச் சான்றிதழ் கூட உடையது. பதிவு செய்யப்பட்டது. கழுத்தில் பட்டியுடையது.

### உணவு

❀ இறக்குமதி செய்யப்பட்ட வாசனைத் திரவியம் கலந்த தகரத்திலடைக்கப்பட்ட உணவையே இது உண்ணும்.

### சுகாதாரம்

❀ பெரிய, சதைப்பிடிப்பானது. நன்கு பராமரிக்கப்படும். காயமேற்பட்டால், மிருக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆதரிக்கப்படும். ஒழுங்காக நீராட்டப்பட்டு உரோமம் சீவப்படும்.

### உறைவிடம்

❀ சிறந்ததொரு வதிவிடமுண்டு. சிலவேளை குழந்தைகளின் கட்டில்கள் அல்லது எஜமானியின் மடியில் உறங்கும்.

### குட்டிகள்

❀ ஆவலாக எதிர்பார்க்கப்படும். பராமரிப்பு உண்டு. மரபுவழி காட்டப்பட்டு செல்வந்த வீடுகளுக்கு விளம்பரம் செய்து விற்கப்படும். மனமுவந்த செல்லப் பிராணி நல்ல விலை போகும்.

### உடற்பயிற்சி

❀ எஜமான் உடற்பயிற்சிக்குச் செல்லும் போது அவருடன் உடற்பயிற்சிக்கென கடற்கரையோரங்களுக்குஅழைத்துச் செல்லப்படும்.

## தெரு நாய்
## ?

❀ அசுத்தமான நாய் சேரிப்பகுதிக்குரியதெனக் கருதப்படுவது. ஏற்றத்தாழ்வு கொண்டாடும் சமூகத்தால் ஜாதி குறைந்ததெனக் கருதப்படுவது.

❀ குப்பைத் தொட்டிகளிலும் கிடங்குகளிலும் மீதியாக வீசப்பட்டவற்றை உண்ணும் பெரும் பான்மையான மனிதரைபபோல எப்பொழுதும் பசியுடனேயிருக்கும்.

❀ உடம்பில் புண் மற்றும் சரும நோய்களுடையது, மெலிந்து காணப்படும். கவனிப்பாரற்றது. அயலிலுள்ள நாய்க்கூட்டத்திடமிருந்து நோய்களை தொற்றிக்கொள்ளும். ஒருபோதும் குளிப்பதில்லை. மனிதர்களைப் போல இதற்கும் நீர்த்தட்டுப்பாடு.

❀ தெருவிலும் சிறு குடிசைகளில் வாழ்பவர்களுறங்கும் நிலத்தில் அவர்களுடனும் உறங்கும்.

❀ குட்டிகள் பெற்றோரைப்போல போஷாக்கற்றவை. சிறு பராயத்தில் இறப்புவீதம் அதிகம். இளமையில் நல்ல அழகு. இழிவான நாய்க்கூட்டத்துடன் சேரும்.

❀ சிறு குடிசைகள் முழுவதும் ஓடித்திரிதல். குப்பைத் தொட்டிகளில் அயலிலுள்ள நாய்களுடன் சண்டையிடும்.

பொறுப்பு

| | |
|---|---|
| ❀ மக்களை நன்கு இனம் கண்டுகொள்ளல். ஏழைகள் எனில் குரைத்து அவர்களைத் துரத்தும். | ❀ நல்லாடையுடன் தனது பகுதிக்கு வரு பவர்களைக் கண்டாற் குரைக்கும். |

சமூக அந்தஸ்து

| | |
|---|---|
| ❀ ஒரு முறை வெளிநாட்டிற்கும் பயணம் செய்தது. விமானத்தில் எஜமானியின் கடவுச் சீட்டில் இதன் பெயர் பதிவு செய்யப்பட் டிருக்கும். | ❀ இதன் வெளியூர்ப்பயணம் நகரசபைத் தெரு நாய்களின் அழிகுழிக்கே. |
| ❀ தரம் குறைந்த நாய்களுடன் சேர அனுமதிக்கப்படமாட்டாது. | ❀ 'உயர் குலம்' எனக் கருதப்படும் சமூ கத்தால் மனிதவினத்தின் 'தாழ்குலம்' எனக் கருதப்படும் ஒருவன் ஒதுக்கப்படுவதுபோல் புறக்கணிக்கப்படும். |
| ❀ நாய்களின் கண்காட்சியில் நல்ல மதிப் புண்டு. பத்திரிகைகளில் நாய்களுக்குரிய பக்கத்தில் படங்கள் பிரசுரிக்கப்படும். பாராட் டும் பரிசும் வழங்கப்படும். | ❀ நோய்வாய்ப்பட்டது. மாசிமாத வெப்ப அலைகளின் போது மனநிலையிழந்து கடை யருகே கயிற்றால் தொங்கவிடப்பட்டுச் சாகடிக் கப்படும். |
| ❀ அரசாங்க மாற்றங்களினால் பாதிப் படைவதில்லை. | ❀ அரசாங்க மாற்றங்களினால் பாதிப் படைவதில்லை. |

நாய்களின் உயிர்கள் ஏன் இவ்வளவு வேறுபடுகின்றன?

புத்திக்கூர்மை, கடினவுழைப்பு, திறமை ஆகியவற்றில் வேறுபடுகின்றனவா?

அல்லது விதி, கர்மம், நல்லதிஷ்டம், ராசி, காரணமா?

நன்றி : SOCIAL JUSTICE.

# 'ராகிங்' இல்லாத பல்கலைக்கழகம்

தெற்கு கர்நாடகத்தில் உடுப்பியிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் மணிப்பால் என்ற நவீன நகரம் இருக்கின்றது. அங்கு 40 கல்வி நிலையங்கள் இருக்கின்றன. பல்லா யிரக்கணக்கான இந்தியர்களும், வெளிநாட்டவர்களும் இங்கு கல்வி கற்கின்றனர். இங்கு தான் உலகப் புகழ் பெற்ற உடற் கூற்றியல் (ANATOMY) மியூசியத்தை கொண்ட கஸ்தூர்பா மருத்துவக் கல்லூரியும் உண்டு. இங்குள்ள கல்வி நிலையங்களில் சிறப்பம்சம் என்ன வென்றால், இங்கு ராகிங் அறவே கிடையாதாம். எல்லா மாணவ மாணவியர்களும் ஒன்றாகக் கூடி எவ்வித வேறுபாடும் இல்லாமல் 'மாணவ சொர்க்கபுரி' மணிப்பாலில் வாழ்கிறார்கள்.

# இயற்கை உரிமைகள்

— வி. பி.

இயற்கைச் சட்டம், இயற்கை உரிமைக் கோட்பாடுகள் உரோமைச் சட்டவல்லுநர் காலத்திலிருந்து றூஸ்வெல்றின் 4 சுதந்திரங்கள் (எங்கும் எல்லாரிடத்தும் பேச்சுச் சுதந்திரம், மதச்சுதந்திரம், தேவையிலிருந்து சுதந்திரம், பயத்திலிருந்து சுதந்திரம்) காலம் வரை என நீண்ட வரலாற்றை உடையது என மார்கிறற் மக்டோனல்ட் கூறுகின்ருர்.

இயற்கைச் சட்டம், இயற்கை உரிமைகள் பற்றிய கோட்பாடுகள் தெளிவாயில்லை என்பது பலரது அபிபபிராயமாகும். இவை போதியளவு தெளிவில்லாதவையாயிருந்தும் ஏன் இவை அரசியல், உளவியல், சட்டரீதியான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பது கேள்விக்குரியதாகும். இக்கோட்பாடு தெளிவற்றதாயிருந்தாலும் இதன்மூலம் அரசியல், சமூக மெய்யியலில் காணப்படும் பிரச்சனைகளுக்கு சுமூகமான தீர்வைப் பெறவே இது அறிமுகப்படுத்தப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மூன்றுவகையான எடுப்புகளைக்கவனத்தில் கொள்வோம்.

1) பகுப்பெடுப்புகள்
2) அனுபவம்சார் எடுப்புக்கள்
3) மனித விழுமியங்கள் பற்றிய கூற்றுக்கள்.

1 வது வகை, 2 வது எடுப்புக்களின் கலப்பாக இயற்கை உரிமை பற்றிய கூற்றுக்களை விபரிக்க முயல்வதாலேயே இயற்கை உரிமைக் கோட்பாட்டில் பிரச்சனை எழுகின்றது.

ஓர் அடிமையின் உரிமைகள் அவன் வாழும் சமூக சட்டங்களிலிருந்தே பெறப்படுகின்றன. அவன் சுதந்திரமாய் இருக்கவேண்டிய உரிமைகளைக் கொண்டிருக்கின்ருன். ஏனைய மனிதர்களைப் போன்று அவனும் மதிப்பினைப் பெறவேண்டியது முறையே. எனினும் அவனது அடிமைநிலை சமூக வழமையினுல் நிர்ணயிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனும் இயல்பாகவே மனிதத்துவமுடையவன். எந்தவொரு மனிதனும் இயல்பாகவே இன்னொரு மனிதனின் அடிமை அல்ல.

ஓர் அடிமை சுதந்திரமாய் இருப்பதற்கு உண்மையான உரிமையைக் கொண்டிருப்பினும் அவன் சுதந்திரமாய் இல்லை. ஏனெனில், அவன் வாழும் சமூகத்தில் நிலவுகின்ற சட்டம் அவனுக்கு அவ் உரிமையை அனுமதிக்கவில்லை. அவன் சுதந்திரமாய் இருக்க வேண்டினும் அவன் சுதந்திரமாய் இல்லை. காரணம், சட்டங்கள் பூரணமாய் காணப்படுவதாகும்.

இயற்கை விஞ்ஞான விதிகள் பரவலாக எல்லா இயற்கை விஞ்ஞான நிகழ்வுகளுக்கும் பொருந்துவதுபோல இயற்கைச் சட்டம் எல்லா மனிதர்கள் சார்பாகவும் எதுவித பாரபட்சமுமின்றி பிரயோகத்தை கொண்டிருப்பதாகக் காணப்படுகின்றது. மேலிருந்து கீழே விழும் சகல பொருட்களும் நியுட்டனின் புவியீர்ப்பு விதிக்கு உட்பட்டதாய் செயற்படுவதைக் காண்கின்றேம். சாதாரண சூழலில் எந்தவொரு புவியீர்ப்புவிதிக்கு விதிவிலக்கானது அல்ல.

''மனிதன் சுதந்திரமாய் பிறக்கின்றான்;
எனினும் அவன் எங்கும் சங்கிலியால்
பிணைக்கப்பட்டு காணப்படுகின்றான்''

என்கின்றார் றூசோ.

''இயற்கைச் சட்டம் எல்லோர்க்கும்
சமமான பிரயோகத்தை உடையதாய்
காணப்படுகின்றது''

என்கின்றார் சிசரோ.

எல்லா மனிதரும் ஏதாவதொரு வகையிலே பூரணமில்லா முறையிலே சட்டங்களுக்கும் வழமைகளுக்கும் ஆளாக்கப்பட்டிருப்பதால் பாதிப்புக்குள்ளாகாத இயற்கையை சிசரோ எங்கே, எப்பொழுது அவதானித்தார் என்று நாம் கேட்கலாம். என்றுமே அவதானிக்கப்படாத அல்லது அவதானத்தால் உறுதி செய்யப்படாத உண்மைகளை எவ்வாறு கண்டுபிடிக்கமுடியும்?

கோட்பாட்டின் காரணத்திற்குக் கொடுக்கப்பட்ட பிரத்தியேகமான தன்மையிலேயே பதில் தங்கியுள்ளது. இயற்கைச் சட்டம், இயற்கை உரிமை பற்றிய எடுப்புகள் அனுபவத்திலிருந்து பெறப்பட்ட பொதுமையாக்கங்கள் அல்ல. அல்லது அனுபவத்தில் உறுதி செய்யப்பட்டு அவதான நிகழ்வுகளிலிருந்து பெறப்பட்ட உய்த்தறிகள் அல்ல. எனினும் அவை இயற்கை உண்மையிலிருந்து முழுமையாகப் புறநீங்கலானவை அல்ல. மனிதனின் இன்றியமையாப் பண்பிலிருந்தே அதாவது, மனிதனுக்கு இன்றியமையாப் பண்பாக காரணித்தல் அறிவு உண்டு என்ற கூற்றிலிருந்தே அவை பெறப்பட்டவை. இயற்கைச் சட்ட நியதி மனித நியாயத்தால் முன்வைக்கப்படுவதோடு மனிதர் காரணத்தை உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதாலேயே தெரியப்படுகின்றது. மனிதர்கள் காரணத்தைக் கொண்டுள்ளார்கள் என்பது இயற்கை உண்மையாகும். பகுத்தறியும் இந்த இயல்பான நடத்தை காரணமாகவே மனிதர் மனிதருக்கிடையே ஓர் ஒத்ததன்மை காணப்படுகிறது; அத்தோடு விலங்குகளிலிருந்து அவர்கள் வேறுக்கப்படுகின்றார்கள்.

''எல்லாப் பொதுவிதிகளுக்கும் நியாயித்தல் அடிப்படையாக
இயற்கைச் சட்டம் அமைகின்றது;
அதுவே மனிதன் இயல்பாகவே பகுத்தறிவு ஆற்றல்
உள்ளவன், சமூகத்தன்மை வாய்ந்தவன் என்பதற்கு
இறுதிப் பொருத்தக் கோட்பாடாகும்''

— சேர் பிறெட்ரிக் போலொக்.

''இயற்கைச் சட்டம் என்பது சரியான நியாயித்தலின் கட்டளையாகும்''

— குறேஷியஸ்.

''மனிதன் தனது இயற்கை உரிமைகளைச்
சமூகத்திடம் கையளிப்பது முன்பு இருந்ததையும்விட
மோசமாக வருவதற்கு அல்ல; அவற்றைச்
சிறப்பாகப் பாதுகாக்கவே''

— பெயின்.

ஒருவனது குடி உரிமைகளுக்கு அடிப்படை அவனது இயற்கை உரிமைகளேயாகும். ஒருவனது கை, கால்கள் அவனோடு தொடர்புற்று இருப்பதுபோல ஒவ்வொரு மனிதனோடும் அவனது

இயற்கை உரிமைகள் அவனது பகுத்தறிவை முன்வைத்து இணைக்கப்பட்டுள்ளன. அவன் அவற்றை ஒரு சமூகத்திலிருந்து இன்னொரு சமூகத்திற்கு எடுத்துச் செல்கின்முன். அவன் தன்னை இழக்காமல் அவற்றை இழக்கமுடியாது.

> ''சுதந்திரம், சொத்து, பாதுகாப்பு, அடக்குமுறையை எதிர்த்தல்
> போன்ற இயற்கை உரிமைகள் சார்பாக மனிதர்
> சுதந்திரமாகவும் சமமாகவும் பிறந்துள்ளார்கள்''
>
> எனப் பிரஞ்சிய பாராளுமன்றம் கூறியது.

> ''எல்லா மனிதரும் சமமாகப் படைக்கப்பட்டுள்ளார்கள்.
> வாழ்க்கை, சுதந்திரம், மகிழ்ச்சிப் பெறுகை ஆகிய இயல்பான
> உரிமைகளை இறைவன் கொடுத்துள்ளரான்.
> இவ் உரிமைகளைப் பாதுகாக்கவே அரசுக்கள் நிறுவப்பட்டுள்ளன''
>
> என அமெரிக்க சுதந்திர அறிக்கை யூலை 4, 1776 இல் கூறியது.

ஒருவன் தமிழனக, முஸ்லீமாக, சிங்களவனக, நீக்ரோவாக, யூதனகப் பிறப்பது தற்செயல் நிகழ்ச்சியே. அவனது சமூகச்சூழல் இத்தகைய தற்செயல் நிகழ்ச்சியினுலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. மேலும் அவன் தற்செயலாகவோ அன்றேல் வழமைப்படியோ ஒரு வைத்தியனகவோ, பொறியியலாளனகவோ, வியாபாரியாகவோ, தையற்காரனகவோ காணப்படலாம். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அவனுக்கான குடியியல், சட்ட உரிமைகளை இவ்வழமைகள் நிர்ணயிக்கின்றன. ஆனல் அவன் தற்செயலாக மனிதனக வில்லை. அவனுடைய இன்றியமையாத்தன்மை மனிதத்துவமேயாகும். அவனது இயற்கை உரிமைகளை அவனது மனித இயல்பே நிர்ணயிக்கின்றது. மனிதனின் இயல்பு மனிதன் பற்றிய வரைவிலக்கணத்தில் வெளிப்படுத்தப்படுகின்றது.

எழுதப்படாத இயற்கைச் சட்டம் ஆட்கொள்கின்ற பொது இலக்கு என்பதிலேயே மனித உரிமைகள் தங்கியுள்ளன என்பது தவருகும். ஏற்றுமதிக்கு மட்டும் எனக் குறிக்கப்பட்ட விஸ்கி போத்தல்கள் (bottles of Whisky pach marked for export only'') போன்றன அல்ல மனிதர்கள்.

இயற்கை உரிமைக் கோட்பாட்டை எதிர்த்துக் கூறப்படும் பெரிய குற்றச்சாட்டுகளுள் ஒன்று இயற்கை உரிமைக் கோட்பாட்டை முன்வைக்கும் ஒவ்வொருவரும் வெவ்வேறு பட்ட இயற்கை உரிமைகள் பட்டியலைத் தருவதாகும்.

கொப்ஸிற்கு ஒரேயொரு இயற்கை உரிமை உள்ளது. அது அவன் தன்னைப் பாது காப்பதாகும். வேறு சிலருக்கு வாழ்க்கை, பாதுகாப்பு, மகிழ்ச்சிப் பெறுகை, சுதந்திரம் போன்றவை இயற்கை உரிமைகளாகும். தொழில் செய்யும் உரிமை, உழைப்பிற்கேற்ப ஊதியம் போன்றவற்றை நவீன சமூகவியலாளர்கள் இயற்கை உரிமைகள் பட்டியலில் சேர்க்கின்றுர்கள்.

M. மறிரன் ஒன்பது இயற்கை உரிமைகளைத் தனது பட்டியலில் தருகின்றுர். அவை பின்வருமாறு:

1. வாழ்வதற்கான உரிமை.
2. சுதந்திரத்திற்கான உரிமை.
3. உடமை வைத்திருப்பதற்கான உரிமை.
4. இறைப் பணியைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமை.

5. திருமணம் செய்வதற்கான உரிமை.
6. குடும்பம், உருவாக்குவதற்கான உரிமை.
7. தொழில் செய்வதற்கான உரிமை.
8. போதிய ஊதியத்திற்கான உரிமை.
9. பொருளாக அல்ல, ஒரு ஆளாக ஒவ்வொரு மனிதனும் நடத்தப்படுவதற்கான உரிமை.

ஒழுக்கநெறி உரிமையை ஒத்ததே இயற்கை உரிமை என்கின்றார் கான்ற். இயற்கை உரிமைகள் பயன்படுத்தப்பட்டுவந்தவாறு வரலாற்றை நோக்குகையில் கான்றின் கூற்று ஏற்புடையதன்று. இயற்கை உரிமை சார்பான ஒரு பொது நூலினை அவற்றின் அரசியற் தன்மையேயாகும்.

''உரிமைகளுடனும் கடமைகளுடனும் மனிதன் என்பது சமூகத்தின் படைப்பேயாகும். எனவே, தனியாள் உரிமைகள் சமூகத்தின் பார்வையிலேயே தீர்மானிக்கப்படவேண்டும். என்கிறார் றிச்சீ

நல்ல சமூகத்தின் நிபந்தனைகளே இயற்கை உரிமைகளாகும். இவ் நிபந்தனைகள் மனித தீர்மானங்களாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. மனித தேவைகளின் தேர்வாக எதனைச் செய்யவேண்டும் என்பதே இயற்கை உரிமைகளை உறுதிப்படுத்துகின்றன.

ஆதாரம்: Peter Laslette, Philosophy, Politics and Society.

---

## புலமைப்பரிசில்

மூன்றும் அகில நாடுகளில் ஒன்று அது.

இயற்கை வளம் அங்கு நிறைந்திருந்தபோதும், அங்குள்ள குறைபாடு போதிய கல்வியின்மையே. இதனால் அங்கு உழைப்பு, உற்பத்தி, சேமிப்பு, தொழில் வாய்ப்பு, மூலதனம் என்பன அறவே ஏற்படாது போக நித்திய வறுமையே நிலவியது.

இதனைப் போக்க அந்த நாட்டு அரசாங்கம், வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி தனது வரவு செலவுத் திட்டத்தில் பெருமளவு தொகையைக் கல்வி வளர்ச்சிக்கென ஒதுக்கியது.

நாட்டில் மக்கள் நன்கு கல்விகற்கத் தொடங்கினர். ஓரளவு முன்னேற்றமும் தென்படலாயிற்று அது;-

முதலாம் அகில நாட்டின் கண்களை உறுத்தியது.

''அந்த நாடு இப்படியே வளர்ச்சி பெறுமானால், அந்நாட்டிலிருந்து நாம் மிக மிகக் குறைந்த விலைக்குப் பெறும் மூலப் பொருட்களை இழந்துவிடுவோமே!'' இதற்கு என்ன வழி? யோசித்தது.

அவசரம் அவசரமாக உள்ளே நுழைந்தது.

''மேலதிகப் பட்டப்படிப்பிற்கும்...... உயர் கல்விக்கும்...... அறிவியல் ஆய்விற்கும் நாம் புலமைப் பரிசில்கள் வழங்குகிறோம்!— என அறிவித்தது,

வறிய நாட்டிற்கு பெருமகிழ்ச்சி. வளர்ச்சி பெற்ற நாட்டிலே பெறும் அறிவு தாய் நாட்டை வளர்க்கப் பெரும் உதவி புரியும் என எண்ணியது.

தன் நாட்டின் மேதைகளாக வரும் அறிகுறி கொண்டோரைத் தெரிந்து முதலாம் அகில நாட்டிற்கு அனுப்பியது.

ஆனால் —

அங்கு சென்ற திறம் மேதைகளினது ஆய்வுகளனைத்தும், முதலாம் அகில நாடுகளின் பொருளாதார, வைத்திய, தொழில்நுட்ப — மருத்துவ — அறிவியல் சார்ந்தனவாகவே இருந்தன.

வறிய நாடோ மேலும் மேலும் அடிப்படைக் கல்விக்கு தனது செல்வத்தை ஒதுக்கிக் கொண்டிருந்தது,

— செம்பியன் செல்வன்
(குறுங்கதை நூலிலிருந்து)

# குழந்தையின் சுகாதாரமும் வளர்ச்சியும் பாதுகாப்பும்
# (Promotion and Protection of Child Health)

டாக்டர். K பாலகிருஷ்ணன் — Registered Medical Practitidner, Kondavil.

எங்கள் சமுதாயத்தில் திடகாத்திரமான குழந்தைகளை உருவாக்க வேண்டுமானுல் முதலில் குழந்தைகளின் தாய்மாரை பராமரிக்கவேண்டும். ஒரு தாய் கர்ப்பவதியாய் இருக்கும் பொழுதும், குழந்தைக்குப் பாலூட்டும் பொழுதும் உணவைப் பொறுத்த மட்டில் முதல் இடம் அளிக்கவேண்டும்.

இலங்கையில் சில இடங்களில் பழைய கோட்பாடுகளுக்கிணங்க கர்ப்பகாலத்தின் கடைசி மூன்று மாதங்களில் கர்ப்பவதிகள் மாமிச புரதத்தை எடுக்காமல் தவிர்த்து விடுகிருர்கள். இக்காலப்பகுதியில் தாய்மார்கள் கூடிய அளவு புரதம் உட்கொள்ள வேண்டும். போதிய அளவு பால், மீன், இறைச்சி, முட்டை போன்றவைகள் அவசியம் உட்கொள்ள வேண்டும் இவ்வுணவுகள் தங்கள் தராதரத்திற்கு அப்பாலோ அல்லது பெற்றுக்கொள்வதற்குக் கஷ்டமாக இருந்தாலோ பருப்புவகைகள், கருவாடு, பாசிப்பயறு, போஞ்சி, பச்சை இலைவகைகள் உட்கொள்ளலாம். அத்துடன் பழவகைகளான பப்பாசி, வாழைப்பழம், தோடம்பழம் போன்றவைகளும் உட்கொள்ளலாம். இந்த நாட்களில் வழமையாக சாப்பிடும் அளவிற்குமேலாக 2–3 அவுன்சு சோறு உட்கொள்ள வேண்டும்.

ஒரு தாய் கர்ப்பவதி என்று காணப்பட்டதும் கர்ப்பிணி சிகிச்சை நிலையத்திற்கு (Antehatal clinic) சென்று பரிசோதிக்க வேண்டும். ஏழுமாதத்தில் மாதத்தில் ஒரு முறையும், அதன்பின்மாதத்தில் இரு முறையும், கடைசிமாதம் கிழமையில் ஒரு முறையும் பரிசோதிக்க வேண்டும். இக்கிளினிக்கில் வயிற்றையும் இடுப்பு எலும்பையும் கவனிப்பதற்கு மேலாக கர்ப்பிணிகள் உட்கொள்ளும் உணவைப்பற்றியும், முலையைப் பற்றியும் வைத்திய ஆலோசனைகள் கூற வேண்டும். அத்துடன் இரத்த அமுக்கம் சிறுநீர், நிறை முதலியன ஒவ்வொரு முறையும் பரிசோதிக்க வேண்டும். பொதுவாக கர்ப்பிணிகளுக்கு முலையையும் முலைக் காம்பையும் பாதுகாப்பதைப் பற்றியும் பாலூட்டும் ஒழுங்குமுறைகளைப்பற்றியும் ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

பிறநாடுகளில் வசதியுள்ளவர்கள் ஆறுமாதத்தில் தாய்ப்பாலை நிறுத்தி விட்டு வேறு பால் வகைகளைச் (பசுப்பால் கொடுப்பார்கள். எமது நாட்டிலும் சிலர் ஆறுமாதத்தில் தாய்ப்பாலை நிறுத்துகின்றனர். பொதுவாக கிராம மக்களிடையே வசதிக்குறைவின் நிமித்தம் வேண்டிய அளவு பசுப்பால் கிடைப்பது அரிதாகிறது. இதனுல் குழந்தைகளுக்குப் போசாக்கின்மை காரணமாக சோகை; கை, கால்கள் பலமில்லாமல் ஈரக்குப் போன்ற தோற்றமும், பானை வயிலும் (Pot Belly), பெரிய தலையும், குரங்குபோன்ற முகத்தோற்றமும் ஏற்படுகின்றது. ஆகையால் தாய்ப்பாலின் அவசியத்தை கிளினிக்கில் கர்ப்பிணிகளுக்குக் கூற வேண்டும். இதற்குப்பல காரணங்கள் உண்டு. முதலாவதாக நகரத்தில் வாழும் வசதி படைத்தவர்கள் குழந்தைகளுக்குப் புட்டிப்பாலை ஊட்டுகிருர்கள். அதே போல கிராமத்தில் வாழும் வறிய மக்களும் வசதி படைத்தவர்களைப்போல புட்டிப்பாலைக் கொடுக்கிருர்கள். இரண்டாவதாக வேலைக்குப் போகும் தாய்மார்கள் நாகரீக நிமித்தமாகத் தாய்ப்பாலைக் குழந்தைகளுக்குக் கொடுக்க விரும்புவதில்லை. இருப்பினும், அவர்கள் விருப்பினுல் அதிகாலையிலும், மாலைநேரத்திலும், இரவிலும் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கலாம். மற்ற நேரங்களில் ஒன்று அல்லது இரண்டு போத்தல் புட்டிப்பால் கொடுக்கலாம்.

இதைவிட எங்கள் நாட்டில் ஒரு தீயபழக்கம் காணப்படுகிறது. அதாவது குழந்தையும் தாயும் படுக்கும் பொழுது மார்போடு சேர்ந்து கொடுகிப் படுக்கின்றனர். குழந்தை

இரவில் இடையிடையே எழும்பும் பொழுது தாயின்பால் மணம்வீசும், எழும்பியவுடன் தாயின் முலைக்காம்பைத் தேடும் சிறிது நேரம் பால் உவிந்தபின் குழந்தை நித்திரையில் ஆழ்ந்துவிடும். இந்நிகழ்ச்சி இரவில் அரைமணித்தியாலத்திற்கு, ஒரு மணித்தியாலத்திற்கு ஒருதடவை நிகழும். இதன் காரணமாக தாய்க்கு தூக்கமின்மை ஏற்படுகிறது. அதோடு தாய்க்குச் சோர்வாதத்தைக் கொடுக்கிறது. இது குழந்தைக்கும் நல்லதல்ல. இதனால் தாய்ப்பால் சரிவர வெளியேற்றப்படுவதில்லை. இந்த அரைகுறைப் வெளியேற்றத்தால் தாய்ப்பால் சுரப்பிகளும் சரிவர இயங்காது போய்விடுகிறது. சில கிழமைகளால் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவிடுகிறது. தாய் எந்நேரமும் படுத்திருப்பது கூடாது.

பாலில் தாய்ப்பால் சிறந்ததென்றாலும் ஆறு மாதத்திற்கு மேல் கொடுப்பதில் பயன் அளிக்காது. தாய்ப்பாலில் ஆறு மாதத்திற்குப்பின் புரதம், இரும்பு, கல்சியம், விற்றமின் A, விற்றமின B 2 என்பன குறைவாகக் காணப்படும். இலங்கையில் ஆராய்ச்சிகளின்படி தாய்ப்பாலில் போதியளவு கொழுப்புச்சத்து காணப்படாததை அவதானித்து இருக்கிறார்கள். கர்ப்பமாயிருக்கும் போது தாய்மார்கள் போதியளவு கொழுப்புச்சத்துக்களையோ, எண்ணெச்சத்துக்களையோ பிரசவகாலத்திலும், பாலூட்டும் வேளையிலும் உட்கொள்ள வேண்டும். எண்ணெச்சத்து எனுமிடத்து எங்கள் கிராமங்களில் நல்லெண்ணெயைப் பாவிக்கலாம். இவ்விடயங்களைக் மக்கள் மத்தியில் அறிவிப்பதற்கு பலதரப்பட்ட விளம்பரங்களையும் போதனைகளையும் ஒழுங்குசெய்வது அத்தியாவசியமாகின்றது.

மூன்று மாதத்திற்குப்பின்பு குழந்தைகளுக்கு தோடம்பழம், தேசிக்காய், பப்பாசி, தக்காளி, மாம்பழம் போன்றவற்றின் பழச்சாறுகளைக் கொடுக்கலாம். இதே மாதத்தில் மீன் எண்ணெய்யையும் (Shask liver oil or Cod liver oil) கொடுக்க வேண்டும். ஏனெனில், தாய்க்குக் கொழுப்புச்சத்து குறையுமிடத்து விற்றமின் A குறைபாடும் காணப்படும். இவ்விரண்டையும் மூன்று மாதத்தில் கொடுக்கலாம். அல்லது முன்கூட்டியேயும் கொடுக்கலாம். முன்கூட்டியே கொடுப்பதானால் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கவேண்டும். பின்பு படிப்படியாகக் கூட்டிக் கொடுக்கலாம். நான்காம் மாதம் அரிசிக்கஞ்சி போன்றவைகளைக் கொடுக்கலாம். கஞ்சியை வடிக்காமல் கடைந்து கொடுக்கவேண்டும். நன்றாகப் பழுத்த வாழைப்பழத்தையும் நசுக்கிக் கொடுக்கவேண்டும்.

ஐந்தாம் மாதத்தில் குழந்தைகளுக்கு மரக்கறி சூப்போ அல்லது மரக்கறியும் நெத்தலிக்கருவாடு சூப்போ கொடுக்கத் தொடங்கலாம். இலை வகைகளான அகத்தி, தம்பலா போன்றவைகளும், கிழங்கு வகைகளான உருளைக்கிழங்கு, இன்னல, வத்தாளைக்கிழங்கும், பருப்புவகைகளும் பாசிப் பயறும் சேர்த்துக்கொள்ளலாம். சில தாய்மார்கள் பாசிபயறு உணவில் சேர்ப்பதை விரும்பமாட்டார்கள். ஏனெனில் இது குழந்தைகளுக்கு அஜீரணத்தையும் சமியாத்தன்மையையும் உண்டாக்கும் என்று எண்ணுகிறார்கள். பாசிப்பயரை நன்றாக வறுத்தபின்பு அதன் வெளித்தோலை அகற்றியபின் அவித்துப் பயன்படுத்தினால் எவ்விதமான கெடுதியையும் ஏற்படுத்தாது. இதே போல நெத்தலிக்கருவாட்டையும் நன்றாகக் கழுவிக் காயவைத்தபின் இடித்துத் தூளாக்கி சூப்பிற்குச் சேர்த்துக் கொதிக்க வைத்த பின்பு ஆறவைத்துக் கொடுக்கலாம்.

ஆறும் மாதத்தில் அரிசி சூப்பில் 1–2 தேக்கரண்டி அளவு கொடுக்கலாம். இதைத் தொடக்கத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துப்பின்பு கூட்டிக்கொடுக்கலாம். இதே மாதத்தில் அரை அவியல் முட்டையின் மஞ்சள் கருவில் தொடக்கத்தில் 1/4 தேக்கரண்டி அளவு கொடுத்துப் பின்பு கிழமைக்கு 2–3 தரம் கூட்டிக் கடைசியில் முழு அளவில் மஞ்சள் கருவைக் கொடுக்கலாம். மஞ்சள் கருவை இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை கொடுத்தால் போதுமானது. ஆனால், ஏழாம் மாதத்தில் மீன், இறைச்சி வகைகளைச் சூப்புடன் சேர்த்துக் கொடுக்கலாம்.

இவற்றையெல்லாம் உணவாகக் குழந்தைகளுக்குக் கொடுக்குமிடத்து தாயப்பால் நான்கு வேளையோ அல்லது எட்டு அவுன்சு

பசுப்பாலோ அல்லது மாப்பாலோ கொடுக்க தேவையில்லை. ஒன்பது அல்லது பத்து மாதத்தில் மிளகாய் கூட்டுக்கள் இல்லாத கறிகளை உணவுடன் சேர்த்துக் கொடுக்க லாம். இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மிளகாய் கொண்ட உறைப்பான கறிகள் சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும். உறைப்பான கறிகள் உணவுடன் சேர்த்துக்கொள்வதால் வயிற்றோட்டம், வயிற்றுக் கோளாறுகள் ஏற்படுவதையும் அவதானிக்கலாம்.

இந்தவயதில் மேலும் சில உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

அதாவது:-

1. எல்லா வகையான பொரித்த உணவுகள்.
2. ஊறுகாய், சட்னி போன்றவை.
3. அன்னுசி, அப்பிள்.
4. பொதுவாக கேக் வகைகள்; வீட்டில் தயாரிக்கும் எண்ணெவகைகளைக் கொண்ட உணவுப் பொருட்கள் உதாரணமாக:- மஸ்கட், வடை போன்றன.
5. கடலை வகைகள், கடலை சேர்த்த சொக்லேற்.
6. இறைச்சிவகைகள்.
7. பேக்கன் (Bacon) போன்ற உணவுப் பொருட்கள்.

பசுப்பால் கிரமமாகக் கிடைப்பதில் சிரமம் ஏற்படின் பசுத்தயிர் பாவிக்கலாம். எருமைத்தயிர் இரண்டு வயதுக்கு மேற் பட்ட பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம்.

எருமைத்தயிரில் பசுப்பால் தயிரிலும் பார்க்க கொழுப்புச்சத்து மூன்று வீதம் கூடுதலாகக் காணப்படுகிறது. இதனுல் இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தை களுக்கு இது வயிற்றோட்டத்தை விளைவிக்கும்.

தாய்மார்களிடம் இன்னுமொரு பழமை யான நம்பிக்கை குடிகொண்டிருக்கிறது. அதாவது குழந்தையின் இரண்டாவது வயதில் சோறு கொடுக்கும் பொழுது குழந்தைக்கு பால் கொடுப்பதை நிறுத்து கிருர்கள். ஏனெனில் பாலும், சோறும் கொடுக்குமிடத்து புழுவை உண்டாக்கும் என்று கருதுகிருர்கள். புழுவானது அசுத் தத்தாலும், அசுத்தமான சூழலின் மூல மாகவும் ஏற்படலாம். சுத்தமான சூழலில் குழந்தையை வளர்ப்பதனுல் பொதுவான புழுக்களான வட்டப்புழு (Round worm) தானப்புழு (Whip wosm), கொழுக்கிப்புழு (Hook worm) போனறவற்றைத் தவிர்க் கலாம். எங்கள் நாட்டில் கிராமப்புறங் களிலும் நகர்ப்புறங்களிலும் 80% வீதமான சிறுவர்கள் இப்புழுக்களினுல் பாதிக்கப்படு கின்றனர். இப்புழுக்களில் இரண்டொரு வீதமானவை சிறுர்களின் குடலில் காணக் கூடியதாக இருக்கிறது. இப்பிரச்சினையை துப்பரவின் மூலமும், சிறந்த சுகாதாரத்தின் மூலமும் கட்டுப்படுத்தலாம். சாப்பாட்டிற்கு முன், கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுவ தாலும், மலசல கூடத்திற்குப் போனபின் கைகால்களை கழுவுவாதலும் இப்புழுக்கள் தொற்றுவதைத் தடுக்கலாம். உணவு வகைகளை ஈ போன்றவை அசுத்தப் படுத்துவதில் இருந்து தடுக்குமுகமாக மூடி வைக்க வேண்டும்,

கண்டபடி மண்ணை அசுத்தம் பண்ணுமலும், சிறுவர்கள் கீழே விழுந்த உணவுப் பொருட் களை உண்ணுமல் தவிர்ப்பதனும் பொது வாக வட்டப்புழு, தானப்புழு போன்றவற் றைக் கட்டுப்படுத்தலாம்.

கொழுக்கிப்புழு பொதுவாக வளர்ந்தோ ரிலும் காணப்படுகிறது. வீட்டில் இருந்து வெளியில் செல்லும்போது பாதணிகள் பாவிக்க வேண்டும். இப்பழக்கங்களை நடை முறைப்படுத்துவதற்குத் தகுந்த வைத்திய விளம்பரங்கள் கொடுக்கப்படல் வேண்டும்.

ஒரு குழந்தையின் பருவகாலம் (Age of Puperty) வரும் வரையே ஒரு பைய்ந் பாலோ அல்லது இரண்டு கிளாஸ் பாலோ தினமும் கொடுக்க வேண்டும். ஆனுல் எங்கள் நாட் டில் இது நடைமுறையில் சாத்தியமாகாது, மேல்நாட்டில் யுத்த காலத்தில் பங்கீட்டு முறை யில் சிறுபிள்ளைகளுக்கும், கர்ப்பவதிகளுக்கும் பால் ஊட்டும் தாய்மார்களுக்கும் பாலை விநி யோகம் செய்தார்கள். இப்படியான முறை களில் எங்கள் நாட்டிலும் எல்லோருக்கும் தகுந்த அளவில் பால் கிடைக்கக் கூடியதாக நடைமுறைப் படுத்தலாம். இதற்காக பொது மக்களுக்கு சுகாதார விளக்கத்தையும், அதன் நோக்கத்தையும், அதன் அத்தியாவசியத் தையும் பரப்புரை செய்தல் வேண்டும்.

எமது நாட்டில் பாடசாலைக்குப் போகு முன் சிறுர்களும் (Pre School Children) பாடசாலைச் சிறுர்களும் சுகாதார முறையில் மேலோங்கி இருக்கிருர்கள் என்று சொல் வதற்கில்லை. இதன் பல குறைபாடுகளைச் சுகாதாரப் போதனைகளின் மூலம் நிவர்த்தி செய்யலாம். இதற்காக சுகாதாரப் பிரிவில் கடமையாற்றும் ஒவ்வொரு உத்தியோகத் தர்களும் பொதுவாக டாக்டர்கள், தாதிமார் கள், பரிசோதகர்கள் தங்கள் கடமை நேரத் தில் குறைந்தது மாதத்தில் 1 - 2 மணித்தி யாலங்களாவது சுகாதாரக கல்விப் பணிப்பிற் காகச் செயலாற்றுவது நல்லது. அபி விருத்தியடைந்த நாடான ரஷ்யாவில் (U S, S. R.) டாக்டர்கள், தாதிமார்கள், ஒவ்வொரு மாதத்திலும் பிள்ளைகளின் நேர் முகச் சந்திப்பிலும் மேலதிகமாக நான்கு மணித்தியாலங்களைச் செலவிடுகின்ருர்கள். ●

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம்

— சில கருத்துக்கள் —

கலாநிதி. சி. க. சிற்றம்பலம்,

தலைவர், வரலாற்றுத் துறை, யாழ். பல்கலைக் கழகம்.

**தமிழ்** மக்களின் பாரம்பரிய பிரதேசம் பற்றிய கோட்பாடு தோன்றி வளர்ந்த வரலாற்றினை உற்று நோக்கும்போது இது இந் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஓர் அரசியற் கோட்பாடாக அன்றைய இலங்கைத் தமிழரசுக் கட்சியால் முன்வைக்கப்பட்டு, பின் வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியாலும் விடுதலை இயக்கங்களாலும் வளர்க்கப்பட்ட தொன்றாகவே காணப்படுகிறது. நாற்பதுகளில் (1944) இலங்கை கொம்யூனிஸ் கட்சி வட கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்குரியவர்கள் எனத் தீர்மானம் இயற்றினாலும் கூட இதற்கு மேல் இதனை அது தொடர்ந்து வற்புறுத்தி இதற்காகப் பாடுபடவுமில்லை எனலாம். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் 1949 ஆம் ஆண்டில் மருதானையிலுள்ள அரசாங்க குமாஸ்தா சேவா மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் 18 - 12 - 1949 இல் கூறிய கருத்துக்கள், அதுவும் இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் கூறப்பட்டவை இக்கோட்பாட்டிற்கு கால்கோளாக அமைந்தன. அன்று அவர் 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் இலங்கைக்குக் கால் வைத்த போது இலங்கையில் இரண்டு தேசிய இனங்களாகத் தமிழர், சிங்களவர் ஆகியோர் விளங்கினர் என்றும், இவர்கள் பாரம்பரியமாகத் தனித் தனிப் பிராந்தியங்களில் வாழ்ந்திருக்கின்றார்கள் என்றும், இவர்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்றும் இத்தகைய சுயநிர்ணய உரிமைக்கான தகுதிகளான தொடர்ச்சியாக ஒரே பிரதேசத்தில் இவர்களின் வாழ்வு, புவியியல் ரீதியில் இவர்களின் செறிவு, கலாசார ரீதியில் உள்ள தனித்துவம், பொருளாதார வளம் ஆகியவை இத்தகைய தகுதி படைத்த தமிழ் மக்களுக்காக, அவர்கள் தன்மானத்துடன், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுய ஆட்சி ஒன்றை அமைக்கப் போராடுவதற்காகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவும் சுட்டிக் காட்டினர். பின்னர் இக் கட்சியின் சின்னமாக வீடு தேர்ந்தெடுக்கப்பட்டதும், இதன் முதல் தேசிய மகாநாடு வட கிழக்கு மாகாணங்களின் நடுமையத்தில் அமைந்திருக்கும் திருகோணமலையில் 1951 இல் நடைபெற்றதும் தமிழரின் பாரம்பரிய பிரதேசத்தில் கொண்டிருந்த அக்கறையிலே எனலாம். திருகோணமலை மகாநாடு திருகோணமலை தான் தமிழர் சுய ஆட்சி பெறும்போது தமிழ்ப் பகுதிகளின் தலைநகராக அமையும் எனவும் கட்டியம் கூறி நின்றது.

இத்தகைய புதிய சிந்தனை ஒன்று தோன்றுவதற்கான சூழலைச் சற்று நோக்குவதும் அவசியமாகின்றது. காரணம் இதனை ஆராய்வதன் மூலம் தான் இக் கருததின் தாக்கத்தினைச் சரிவர மதிப்பீடு செய்யலாம். இந்நூற்றாண்டின் முதற்காலப் பகுதியில் சிங்கள மக்கள் மத்தியில் அன்றைய ஆட்சியினராகிய பிரித்தானியருக்கெதிராக இலங்கையில் தேசியவாதம் தோன்றுவதற்குப் பதிலாக முழு இலங்கையையும் தளமாகக் கொண்டு சிங்கள பௌத்த தேசிய வாதம் கரையோரச் சிங்கள மக்களின் செல்வாக்கில் முன்னிலை பெற்றுக் காணப்பட்டது. 1925 இல் கண்டிச் சிங்களவர் தமக்கென ஒரு சபையை 'கண்டியர் மகாசபை' என்ற பெய

ரில் நிறுவி 1927 இல் தமது பிராந்திய நலன்களைப் பாதுகாப்பதற்குச் சுதந்திர இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறை ஒன்றைப் பிரித்தானியர் முன் வைத்தனர். இவ்வமைப்பில் மூன்று பிராந்தியங்கள் அடங்கின. கரையோரப் பகுதிகள், கண்டிப் பகுதிகள், வடகிழக்கு இணைந்த தமிழ்ப் பகுதிகள் ஆகியனவையாகும். தமிழ் மக்களோ அன்றைய பிரித்தானியரால் வடக்கு கிழக்குப் பகுதிகள் வளர்ச்சியடையாத நிலையில் கொழும்பில் கிடைத்த வாய்ப்புக்களில் அக்கறை கொண்டவர்களாகி, இலங்கையர் தேசியவாதத்தில் நம்பிக்கை கொண்டு ஒற்றை ஆட்சி அமைப்பிலுள்ள பாராளுமன்றத்தில் எவ்வளவு பிரதிநிதித்துவத்தினைப் பெற முடியுமோ அதனைப் பெறுவதில் அக்கறை கொண்டவர்களேயொழிய, பிராந்திய ரீதியில் ஓர் அமைப்பின் மூலம் தமது நலன்களைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டவில்லை. தமிழ் மக்களில் இத்தகைய எதிர்பார்ப்புகள் தக்க பலனளிக்காது தோல்வி கண்ட காலகட்டத்தில் தான் தமிழ் மக்களுக்காகப் போராடத் துணிந்த எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் இக் கருத்து வெளியாகியது. காலங் கடந்த கருத்தாயினும் பின்வந்த சம்பவங்கள் இக்கருத்து ஒரு தீர்க்கதரிசனமான கருத்து என நிரூபித்தன எனலாம்.

தமிழ் மக்கள் தனியான தேசிய இனத்தவர்கள் என்பதனை பிரித்தானியர் தமது ஆட்சியின் தொடக்க காலத்திலே உணர்ந்து விட்டார்கள் என்பதனை, அப்போதைய பிரித்தானிய கவர்னரின் காரியதரிசியாக இருந்த கிளே கோஸ் 1799 இல் வெளியிட்ட குறிப்புக்கள் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இக் காலத்தில்தான் ஐரோப்பாவில் தேசியவாதம் எழுச்சியினால் தேசிய அரசுகள் தோன்றிய காலமுமாகும். இத்தகைய பின்னணியை அறிந்த ஒருவர் கண்களில் தமிழ் மக்கள் தனித் தேசிய இனத்தவர்கள் என்று கணிக்கப்பட்டமை வியப்பில்லை எனலாம். அன்று அவர்,

'இலங்கைத் தீவானது மிகப் பழைய காலந்தொட்டே இரு வேறு தேசிய இனங்களால் வெவ்வேறு பகுதிகளில் உரிமை கொண்டாடப் பட்டுள்ளது. இத்தீவில் நடுப்பகுதியும் தென் பகுதியும் வளவை ஆற்றிலிருந்து சிலாபம் வரை உள்ள மேற்குப் பகுதியும் சிங்கள இனத்தினரால் ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இத்தீவின் வடக்குக் கிழக்கு நிலப் பகுதிகள் மலபார் மக்களின் (தமிழரின்) ஆட்சிக்குட்பட்ட பகுதியாகும். இந்த இரு தேசிய இனங்களும் இவ் விரு பகுதியினரும் மதத்தாலும் மொழியாலும் வாழ்க்கைப் பண்பாலும் முற்றிலும் வேறுபட்டவர்களாவர்.'

இவரின் கூற்றையே அக்காலத்தின் பிரதம நீதிபதியாக இருந்த ஆங்கிலேயரான சேர். அலெக்சாண்டர் ஜோன்சனும் அங்கீகரித்துள்ளார். அலெக்சாண்டர் ஜோன்சனுக்கு இந்நாட்டு வரலாறு, சட்ட நுணுக்கங்கள் ஆகியவற்றில் நிரம்பிய பயிற்சி இருந்தது. அவர் கூறியதாவது,

'வட மேற்கிலுள்ள புத்தளத்திலிருந்து தென்கிழக்கேயுள்ள குமணை ஆறு வரையிலுள்ள நிலப் பகுதி தமிழ் மக்களின் குடியிருப்பு ஆகும். மேற்கே சிலாபத்திலிருந்து தென்மேற்கே உள்ள குமணை ஆறு வரையிலுள்ள நிலப்பகுதி சிங்கள மக்களின் குடியிருப்பாகும்''.

பிரித்தானியர் ஆட்சியை ஆரம்பித்தபோது தமிழ், சிங்கள தேசிய இனங்களின் தனித்துவத்தை நன்குணர்ந்திருந்தனர் என்பதை முதன் முதலாக இந் நாட்டினை ஆட்சி செய்ய உருவாக்கப்பட்ட சட்ட நிரூபண சபையில் 1833 இல் 1 தமிழரைப்போன்று 1 சிங்களவரைமட்டுமே நியமித்திருந்தனர். 1889 இல் கண்டிச் சிங்களவருக்கும் ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது, இவ்வாறு 19 ஆம் நூற்றாண்டில் தமிழர் தனித்துவமான கலாசாரத்தினை உடையவர்கள் என்றும் சிங்கள மக்களில் கரையோரத்தில் வாழ்பவர்களும் மலைநாட்டில் வழ்பவர்களும் தனித்துவமான கலாச்சாரப் பண்புகளை உடையவர்கள் என்றும் அங்கீகரித்தமை புலனாகின்றது. இத் தனித் தன்மையை உணர்ந்து தான் கண்டியர் தேசிய சபை 1927 இல் மூன்று பிராந்தியங்களைக் கொண்ட, அதில் தமிழருக்கென

வடக்கு கிழக்கு மாகாணங்கள் கொண்ட அமைப்பை நாடி நின்றது.

இத்தகைய அமைப்புப்பற்றி 1956 இல் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்த தன் மூலம் ஒரு மொழி இரு நாடுகள் உரு வாவதற்கு வழிவகுத்தவர் எனக் கலாநிதி கொல்வின் ஆர். டீ. சில்வாவினுல் வர்ணிக் கப்பட்டவராகிய எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா 1927 இல் கூறி இருந் தமை குறிப்பிடத்தக்கது. அன்று அவர்,

'பழைய வரலாற்றைப் பார்ப்பார்களே யானுல் இந்த மூன்று இனங்களாகிய தமிழரும், கரைநாட்டுச் சிங்களவரும், கண் டிச் சிங்களவரும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் வாழ்ந்தும் ஒன் றிணையும் போக்கு எதனையும் கொண் டிருக்கவில்லை என்பதை இவர்கள் காண் பார்கள். இவர்கள் தங்கள் மொழியை யும் பழக்க வழக்கங்களையும், மதத்தையும் பேணி இருந்தனர். இந்த வேறுபாடுகள் மெல்ல மெல்ல மறையும் என்பதில் நம் பிக்கை வைக்கும் எவனும் சிந்தித்துச் செயலாற்ருத ஒருவனுவான்.'

சிங்கள — தமிழ் தேசிய இனங்களுக்கான வேறுபாடு, பௌத்த சிங்கள மக்கள் முழு இலங்கைக்கும் தமது எண்ணிக்கையை அடிப் படையாகக்கொண்டு ஆட்சி உரிமை கொண் டாடக் கூர்மை அடைந்தது. 1919 இல் இலங்கை மக்களின் சுதந்திரத்திற்காக ஒரு நிறுவனம் தேவை என எண்ணி, இலங்கைத் தேசிய காங்கிரசை உருவாக்கியவரும் பின்னர் அதன் முதற் தலைவருமான சேர் பொன். அருணுசலம் அதனின்று 1923 இல் வெளி யேற வேண்டியதற்குக் காரணம், சிங்கள மக்களின் கெடுபிடியே எனலாம். தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைக்காகப் போராடுவதற்காக ஒரு நிறுவனம் தேவை என்பதை சேர் பொன் அருணுசலம் உணர்ந்து 1924 இல் அதனை தமிழ் லீக் என்ற பெயரில் உருவாக்கினுலும், அடுத்த ஆண்டில் அவரது திடீர் மரணம் தமிழ் லீக்கின் வாழ்வையும் அஸ்தமனமாக்கியது. 1920 களில் தமிழ் மக்கள் தாம் புறக்கணிக்கப்படுகின்றன ு. என உணரத் தொடங்கினர். காரணம் இக் காலம் வரை சிங்கள மக்களுடன் சமத்துவ மான பிரதிநிதித்துவம் தமிழ் மக்கள் பெற்று வந்ததால் தாம் சிறுபான்மையினர் என்று உணரவில்லை. ஆனுல் 1921ல் சட்ட நிரூபண சபைக்கு பிரதேசவாரியாக நடைபெற்ற தேர்தலில் தாம் சிறுபான்மையினர் என உணர்ந்தனர். 23 பேர் கொண்ட சட்ட நிரூபண சபையில் இவர்களின் எண்ணிக்கை நான்காக மட்டுந்தான் காணப்பட்டது. இதில் அதிருப்தி கொண்ட தமிழ் மக்கள் தமது பிரதிநிதித்துவத்தினைக் கூட்டி சட்ட சபையில் தமது செல்வாக்கினைப் பயன்படுத்த முனைந்தார்களே அன்றி, கண்டியர் 1927 இல் தமது தனித்துவத்தினைப் பாதுகாக்க சமஷ்டி அமைப்புக் கோரி நின்றதை ஆதரிக்கத் தவறினர்.

கண்டியர் பின்வந்த டொனமோர், சோல்பரி அரசியற் திட்டங்களின் முன்னர் சமஷ்டி முறையை வற்புறுத்தி அது ஏற்கப் படாத நிலையில் கரையோரச் சிங்களவரின் பௌத்த சிங்கள தேசியவாதத்துடன் சங்கம மாயினர். தமிழ் மக்களோ எனில் டொன மோர், சோல்பெரி அரசியற் திட்டங்களில் கூடிய பிரதிநிதித்துவம் பெறுவதில் அதிக அக்கறை மட்டுமே காட்டினர். திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் சமபலப் பிரதிநிதி துவம் அல்லது 50:50 என்ற பிரதிநிதித்துவக் கோட்பாட்டையே சோல்பெரி குழுவினர் முன் வைத்தார். அதாவது சிங்கள மக்களுக்கு 50% பிரதிநிதித்துவமும் சிறுபான்மையினர் எல்லோருக்கும் 50% பிரநிதித்துவம் என் பதே இதன் பொருளாகும். சிறுபான்மை யினரில் தமிழ் மக்கள் பெரும்பான்மையின ராகக் காணப்படுவதால் போதிய செல் வாக்கை ஆட்சி உரிமையில் பெறலாம் என இவர் நம்பினுர். எனினும் நடைமுறையில் சிக்கலுடைய அமைப்பே இது என்பதை உணர்ந்த சோல்பெரிக் குழுவினர், கண்டியர் கூறியது போன்ற ஒரு சமஷ்டி அமைப்பை, தமிழ்ப் பிரதிநிதிகள் கேட்காதநிலையில் சொடுக்கவும் விரும்பவில்லை. காரணம் ஆங்கில நாடு ஒற்றை ஆட்சி அமைப்புடைய நாடு. அத்தகைய அமைப்பையே இலங்கை

யில் புகுத்தல் நலம் என அவர்கள் உணர்ந்த தோடு, சோல்பெரி அரசியற் திட்டம் தயாரிக் கப்பட்டபோது டி. எஸ். செனநாயகா போன்ருேர் காட்டிய மதிநுட்பம் தமிழ் மக்கள் ஒரே அணியில் நின்று எதிர்க்கும் நிலைக்குப் பதிலாக பதவி ஆசையினுல் கவரப் பட்டு அவரின் வலையில் சிக்கி அதனை ஏற்க வும் வைத்தது.

இத்தகைய அமைப்பு எண்ணிக்கை அள வில் சிங்கள மக்களுக்கு ஆட்சியில் மூன்றில் இரண்டு பலத்தை வழங்குவதை மேலும் உறு திப் படுத்துவதற்காக அக் காலத்தில் தேர்த லில் தெரிவு செய்யப்படும் 95 பேரைக் கொண் டிருந்த முதல் சுதந்திர பாராளுமன்றத்தில் 7 பிரதிநிதிகளை மட்டுமன்றி 20 தொகுதி களிலும் தமது செல்வாக்கை மலைநாட்டில் செலுத்திய இந்தியத் தமிழ் மக்களின் வாக் குரிமை பறிக்கப்பட்டது. 1948 இல் நிறை வேறிய இந்திய பாகிஸ்தானியர் சட்டங்கள் இவர்கள் பலத்தைக் குறைத்ததோடு சிங் கள மக்களின் 2/3 பலத்தினை நிரந்தரமாக வும் உறுதி செய்தது. சிங்கள மக்களுக்கு பெரும்பான்மை பலத்தை இத்தகைய சட்டம் இன்னொரு விதத்திலும் அளித்தது. அதாவது தொகுதிகளைக் கணிப்பது ஆட்களின் எண் ணிக்கையின் அடிப்படையிலேதான் நடை பெறுவது வழக்கம் வாக்குரிமை இல்லாத இந்தியத் தமிழர், ஆட்தொகைக்கு மட் டும் சேர்க்கப்பட்டு சிங்கள மக்களின் தொகு திகள் பங்கிடப்பட்டதால் சிங்கள மக்கள் தமது சனத்தொகை விகிதாசாரத்திற்கு (74 %) மேலாக பாராளுமன்றத்தில் கிட்டத் தட்ட (10 %) அளவில் கூடிய அதிகாரத் தினைப் பெறவும் முடிந்தது.

இத்தகைய பின்னணியிற்ருன் தமிழ் மக் கள் தாம் இந்நாட்டில் தமது கலாசாரத் தின் தனித்துவத்தைப் பேணி வாழ்வதற்கு மொழி மட்டுமன்றி ஒரு பிரதேசமும் அவ சியமென்றும், இத்தகைய பாதுகாப்பை ஒரு சமஷ்டி அமைப்பே தரும் என்றும் 1949 இல் திரு. எஸ். ஜே. வி. செல்வநாய கம் முன்வைத்தார். இத்தகைய கொள்கை யை நியாயப்படுத்த சர்வதேச ரீதியில் சுய நிர்ணய உரிமைக்கு அருகதை உள்ள இனங் கள் போன்று தமிழ் மக்களும் உளர் என் ருர். தமிழ்ப் புத்தி ஜீவிகளால் முன்வைத்து வளர்க்கப்பட வேண்டிய ஒரு கருத்தை ஒரு சட்டத்தரணி முன்வைத்து வளர்த்ததால் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதைப் பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டின எனலாம்.

1956 இல் தனிச் சிங்கள அரசமொழிச் சட்டம் உருவாகியது. இக் காலகட்டத்தில் வடகிழக்கு மாகாணங்களில் ஒரு சிங்களப் பிரதிநிதி கூட இல்லை. இப்பகுதியிலுள்ள தமிழ்பேசும் பிரதிகள் யாவரும் இச்சட்டத் திற்கு எதிராகவே வாக்களித்ததும் ஈண்டு நினைவு கூரற்பாலது. இதனை எதிர்த்து காலி முகத்தில் அகிம்சை ரீதியில் சத்தியாக்கிரகம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியால் மேற் கொள்ளப்பட்டதும் தலைவர்கள் கொடூர மாக சிங்களக் காடையரால் தாக்கப்பட்ட தும் பின்னர் தமிழ் மக்கள் பிரச்சனைக்குப் பரிகாரமாக 1957 யூலை மாதம் பண்டார நாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம் உருவா னதும் வரலாற்று நிகழ்ச்சிகள். இவ் ஒப்பந் தம், பின்னர் பௌத்த பிக்குகளின் தலை யீட்டால் கிழித்தெறியப் பட்டாலும் கூட தமிழ் மக்களின் பாரம்பரியக் கோட்பாடு மேலும் அரசியல் நிலையில் வலுவுள்ள கோரிக்கையாகி ஸ்திரம் பெற்று வளரு வதற்கு வழி வகுத்த வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த ஒப்பந்தமாகும். சில வர லாற்ருசிரியர்கள் தமிழ்த் தலைவர்களால் கட்டி வளர்க்கப்பட்ட தமிழ் மக்களின் பாரம் பரிய பிரதேசம் என்ற ஐதீகத்தை இது அங்கீகரித்து விட்டது எனவும் விசனித்துள் ளனர். இவ் ஒப்பந்தம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்பதனை அங்கீகரித்த ஒப்பந்தமா கும். சுதந்திர இலங்கையில் சிறீலங்கா சுதந் திரக் கட்சிப் பிரதமர் ஒருவரை அங்கீகரிக் கப்பட வைத்த மிகமிகக் காத்திரமான ஒப் பந்தம். ஏற்கனவே 1927 இல் கண்டியர் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்க ளின் பாரம்பரிய பிரதேசம் என்பதனை அங்கீ கரித்தாலும் பின்னர் 1931 இல் டொன

மோர் அறிக்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களை 'தமிழ் மாகாணங்கள்' 'தமிழர் அதிகமாக வாழும் மாகாணங்கள்' என்ற சொற்பிரயோகங்கள் காணப்பட்டாலும் கூட சுதந்திர இலங்கையின் பிரதமரால் இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சி உண்மையிலேயே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியே, இதன் மூலம் சுதந்திரம் பெற்றதன் பின் அசுர வேகத்தில் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றபோதெல்லாம் இவை தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசத்தைப் பறிப்பதற்கான ஒரு திட்டமிட்ட சதி என்ற கோஷம் கடந்த நாற்பதாண்டுகளாக தமிழ் மக்கள் மனதில் நன்கு வேரூன்றி வளருவதற்கும் இதன் மூலம் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் பற்றிய உணர்வு நிலைநாட்டப்படுவதற்கும் தமிழ் மக்கள் தங்கள் பிரதேசம் பற்றி விழிப்பாய் இருப்பதற்கும் வழி பிறந்தது. 1961 இல் முதல் முதலாக தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் அன்றைய இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் ஒரு சில மாதங்களுக்கு அரச இயந்திரத்தைச் செயலிழக்கச் செய்ததன் மூலம வட-கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்பதனை அங்கீகரிக்கவும் வைத்தது.

மேற்கூறிய அங்கீகாரத்தைக் கடந்த நாற்பது ஆண்டுகளில் மாறிமாறி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இன்னொரு அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் அளித்தது. இதன் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயகாவுடன் தந்தை செல்வநாயகம் அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் மற்றுமொரு அங்கீகாரத்தினையும் பெற்றார். அஃதாவது வரலாற்று ஏடுகளில் டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தம் என இடம் பெறும் இவ் ஒப்பந்தத்தில் தமிழ் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாக, நீதிமன்ற மொழியாக அங்கீகாரம் பெற்றதோடு குடியேற்றத்தில் முன்னுரிமை இப் பகுதியிலுள்ளோருக்கு அளிக்கப்படவேண்டுமென்பதும் அவ்வாறில்லாதவிடத்து பிற மாகாணங்களிலுள்ள தமிழ் பேசும் மகனுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்பதுவும் ஏற்கப்பட்டது. பின் வந்த 1972, 1978 ஆம் ஆண்டு அரசியல் திட்டங்கள் தமிழ் மக்களின் பெரும்பான்மை பிரதிநிதிகளின் சம்பந்தமின்றி ஒரு தலைப்பட்சமாக நிறைவேற்றப்பட்டாலும்கூட வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் நீதிமன்ற, நிர்வாக மொழி என்பதனை இவையும் ஏற்றன. சுதந்திர இலங்கை அரசுகளினால் தயாரிக்கப்பட்ட இரு அரசியற் திட்டங்களும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் பெரும்பான்மையான தமிழ்ப் பிரதிநிதிகளால் அங்கீகரிக்கப்படவில்லை எனலாம். 1976 இல் வடக்கு கிழக்கு மாகாணங்கள் சுதந்திரமுள்ள அரசு என்ற 'தமிழீழத்' தீர்மானம் வட்டுக்கோட்டையில் நிறைவேறுவதற்கும் கால்கோளாக அமைந்ததும், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தால் முன் வைக்கப்பட்டு, பின்னர் சிங்கள மக்களின் ஆட்சி உரிமைபெற்ற இரு கட்சியின் பிரதமர்களாலும் அங்கீகரிக்கப்பட்டதுமான தமிழர் தாயகம் என்ற வடிவத்தில் முதிர்ச்சியான ஒரு வடிவமே தமிழீழக் கோட்பாடு எனலாம்.

துரதிஷ்டவசமாக 1977 ஆண்டின் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தமிழரின் தாயகக் கோட்பாடு சர்வதேச ரீதியில் வலுவடைந்த போது அதனை முறியடிக்க யூ. என். பீ. அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களான புத்திஜீவிகளும் முன்னின்று பல ஆராய்ச்சி வெளியீடுகளை வெளியிட்டனர். இவ் வெளியீடுகளில் பின்வரும் அம்சங்கள் முக்கியம் பெற்றன.

1. இந் நாட்டின் 74 வீதமாகிய சிங்கள மக்களுக்கே இம் முழு நாடும் சொந்தம். இந் நிலையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் 12·6% தமிழ் மக்களுக்கு இந் நாட்டின் விஸ்தீரணத்தில் 30 வீதமான நிலப் பரப்பையும் 2/3 கரையோரப் பகுதியையும் எவ்வாறு அவர்களின் தாயகமாக ஏற்க முடியும்.

2. தமிழருக்கென்ற தாயகம் ஒன்றில்லை, கிழக்கு மாகாணத்தில் கூட கரையோரத்திலிருந்து 10 மைல் வரை தான் தமிழர் குடியேற்றங்கள் காணப்பட்டனவென்றும் மிகுதி

யான கிழக்கு மாகாணப் பகுதிகளில் அங்கு மிங்குமாக உள்ள பழைய சிங்களக் குடியேறறங்களுக்குரிய இடங்களிலும் மனித நடமாட்டமில்லாத இடங்களிலும் காடுகளை அழித்து சிங்களக் குடியேற்றங்களைக் கிழக்கு மாகாணத்தில் அரசு மேற்கொண்டதில் என்ன தவறு என்று கேட்கப்படுகின்றது.

இலங்கையின் மாகாணங்களாக, வடக்கு கிழக்கு மாகாணங்கள் 1832 இலும் பின்னர் 184ம இல் மேல் மாகாணமும் 1873 இல் வட மததிய மாகாணமும் 1886, 1889 களில் ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களும் பிரித்தானியரால் ஏற்படுத்தப்பட்டன. இதனால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உண்மையிலே இந்நூற்றாண்டின் ஆரம்பத்திற்முன் தற்போதைய வடிவத்தைப் பெற்றது எனலாம். இப் பிராந்தியத்தில் குறிப்பாக வட மாகாணம் 90% தமிழ் மக்கள் வாழும் பிரதேசமாகும். சர்ச்சைக்குரிய கிழக்கு மாகாணத்தின் சனத்தொகை மதிப்பீட்டை உற்று நோக்கும்போது இப் பாரம்பரிய பிரதேசம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தில் எவ்வாறு பறிபோனது என்பதும் புலனாகும்.

| | தமிழர் | முஸ்லீம் | தமிழ்மொழி பேசுவோர் | சிங்களவர் |
|---|---|---|---|---|
| 1827 | 74·52% | 24·72% | 99·24% | 0·53% |
| 1881 | 59·11,, | 33·71,, | 92·82, | 4·66,, |
| 1891 | 58·40 ,, | 34·49,, | 92·89,, | 5·06,, |
| 1901 | 55·83 ,, | 35·97,, | 91·80,, | 5·05,, |
| 1911 | 55·08 ,, | 38·32,, | 93·40,, | 3·76,, |
| 1921 | 53·54 ,, | 39·41,, | 92·95,, | 4·53,, |
| 1946 | 48·74 ,, | 39·06,, | 87·80,, | 9·87,, |
| 1953 | 47·37 ,, | 38.18,, | 85·ɔ5,, | 13·11,, |
| 1963 | 45·06 ,, | 34·19,, | 79·25,, | 19·90,, |
| 1971 | 43·97 ,, | 34·64,, | 78·61,, | 20·70,, |
| 1981 | 42·13 ,, | 32·37,, | 74·40,, | 24·92,, |

மேற்கூறிய கணிப்பீட்டை நோக்கும் சிங்கள மக்கள் 74% ஆக இன்று இருப்பது போல் அன்று தமிழ் மக்கள் கிழக்கு மாகாணத்தில் கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்டது. புலனாகிறது. பிரித்தானியர் ஆட்சி 1796 இல் தொடங்கியபோது காணப்பட்ட நிலை இதுவாகும்.

அன்று சிங்கள மக்களின் எண்ணிக்கை கிழக்கு மாகாணத்தில் 0·53% தான். தமிழ் மக்களோடு கிழக்கு மாகாணத்தில் ஐரோப்பியர் வருகையோடு இங்கே செறிந்து பரவிய முஸ்லீம்களின் எண்ணிக்கையான 24·72% சேர்ந்தால் தமிழ்பேசும் மக்கள் தொகை 99·24% என்பதை மறுக்க முடியாது. 1921 இல் தமிழ் மக்கள் சிறுபான்மையினராகிவிட்டதாக எண்ணிய காலத்திற்கூட வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய 5 மாவட்டங்களில் பெரும்பான்மையினராகவே விளங்கினார்கள். சிங்கள மக்களின் எண்ணிக்கை 5% க்குக் குறைவாகவே இக் காலத்தில் கிழக்கு மாகாணத்தில் காணப்பட்டது. சுதந்திரமடைந்த காலகட்டத்தில் 1947 இல் 9·87% ஆக இருந்த சிங்கள மக்கள் 1957இல் பண்டா — செல்வா ஒப்பந்த காலத்தில் 13·11% ஆகி 1965 இல் டட்லி — செல்வா ஒப்பந்த காலத்தில் 19·90% ஆக உயர்ந்ததும் திட்டமிட்ட வகையில் இப் பிராந்தியத்தின் தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பலத்தினைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சதி இதுவே என்பதனை கடந்த கால குடிசன மதிப்பீடுகள் விசேடமாக 1921ஆம் ஆண்டின் பின்னர் காணப்படும் மதிப்பீடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

வடக்கு — கிழக்கு மாகாணங்கள் பற்றிய ஆங்கிலர் குறிப்புக்களும்; குடிசன அறிக்கைகளும் மட்டும் இவ்விதம் தமிழரின் பாரம்பரியத்தினை காட்டவில்லை. ஆங்கிலேயருக்கு முன்னர் இந் நாட்டை ஆண்ட டச்சுக்காரர் (1658 — 1796) இப் பிரதேசம் தமிழரின் பாரம்பரியப் பிரதேசம் என்பதனை உணர்த்தி உள்ளது. இலங்கையின் கரையோரப் பகுதிகளை நிர்வாக வசதிக்காக 6 மாவட்டங்களாக இவர்கள் பிரித்தனர். இவற்றில் மூன்று தமிழ் மாவட்டங்களாகும்.

1. மோதரகம்ஆறு – யாழ்பாணம் வரை– யாழ்ப்பாண மாவட்டம்.

2. கொக்குளாய் – வெருகல் ஆறு வரை– திருகோணமலை மாவட்டம்.

3. வெருகல் ஆறு – குப்புக்கன் ஆறு வரை – மட்டக்களப்பு மாவட்டம்.

இம் மூன்று மாவட்டங்களும் ஒரே நீதி – நிருவாகப் பிரிவில் இயங்கிய ஒன்றே வடக்கு கிழக்கு மகாணங்கள் ஒரே பிரதேசம் என இவர்கள் எண்ணியதை எடுத்துக் காட்டுகின்றது. இக் காலதில் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் உள்ள வன்னிச் சிற்றரசுகள் பெயரளவில் கண்டிச் சிங்கள மன்னர் ஆணையை ஏற்றாலும் நிருவாகம் தமிழில் நடைபெற்றதென்றே தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களே இவை என்பதனை உணர்த்துகின்றன. இப்பகுதிகளில் தமிழ் வழக்கிலிருந்ததைப் போர்த்துக்கேயர் ஆட்சிக்குரிய (1505 — 1658) ஆவணங்களும் எடுத்தியம்புகின்றன எனலாம்.

ஐரோப்பியர் வருமுன் உள்ள வரலாற்றை நோக்கும்போது இலங்கையின் நாகரீக வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் பற்றிய கேள்வி எழுகிறது. தொல்லியல் ஆய்வுகள் வளர்ச்சி பெறாத காலகட்டத்தில் இந் நாட்டின் முதற் குடிகள் வட இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய சிங்கள மக்களின் மூதாதையினராகிய விஜயனும் அவனது கூட்டத்தினரும் என நம்பப்பட்டது. ஆனால் கடந்த இரு சகாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஆய்வுகள் இந் நாட்டிற்கு நாகரீகத்தினைக் கொண்டு வந்தவர்கள் வடநாட்டவரல்லர் என்பதை எடுத்துக்காட்டும் அதே நேரத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்தோரே என்பதனையும் நிரூபித்துள்ளன. தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இவர்களின் வழி வந்தவர்களே என்பதும் இதன் முடிபாகும். பௌத்தத்தின் வருகையே தமிழ் சிங்களக் கலாச்சாரங்களைத் தனித்தனி வழி செல்லவைத்தது. இவர்கள் விட்டுச் சென்ற அழிபாடுகள் கத்தரோடை, மன்னார், அநுராதபுர மாவட்டம், தென் கிழக்கே ரோகணைப் பிராந்தியம், கிழக்கே மட்டக்களப்பு ஆகிய இடங்களிற் காணப்படுவதால் சிங்கள மக்களைப்போல் தமிழ் மக்களும் ஆதிக்குடிகள் என்பதும் பெறப்படுவதால் இது சிங்கள மக்களுக்கு மட்டுமே உரிய நாடு என்பது விதண்டாவாதமாகும். கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இங்கு வந்த முஸ்லீம்கள் மேற்கிலங்கையில் தான் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதால் கிழக்கிலங்கையில் இவர்களின் செறிவான பரம்பல் ஐரோப்பியர் வருகையோடுதான் ஏற்பட்டது. இந்தியத் தமிழரும் கடந்த நூற்றாண்டில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் பொருட்டு இங்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். அவர்களே இலங்கையின் மத்திய பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். இதனால் வரலாற்று ரீதியாக நோக்கும்போது இந் நாட்டில் சிங்கள மக்களைப்போலத் தமிழ் மக்களும் ஆதிக் குடிகளாக விளங்கியது மட்டுமன்றி நாட்டின் பல பகுதிகளிலும் வியாபித்திருந்ததும் புலனாகின்றது.

ஈழத்தின் வரலாற்றுக் காலம் கி. மு. 3 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பமாகிறது. இக் காலத்திற்கும் கிறிஸ்தாப்தத்திற்கும் இடைப்பட்ட காலததில் 250 ஆண்டுகளில் 1/3 காலப்பகுதியில் அநுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு தமிழராட்சி இலங்கை முழுவதிலும் காணப்பட்டதை பாளி நூல்களே எடுத்துக் காட்டுகின்றன. இதே காலத்தில் தமிழரைக் குறிக்கும் 'தமிழ' என்ற இனக்குழுப் பெயர் கூட இலங்கையின் மிகப் பழைய வடிவமாகிய பிராமி வரி

வடிவத்தில் அநுராதபுரத்திலும் வவுனியா, கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மாவட்டத்திலுள்ள குடுவில் என்ற இடத்திலும் காணப்படுவதும் தமிழர் வடக்கு கிழக்குப் பகுதியின் ஆதிக் குடிகள் என்பதும் வெளிப்படை. வடக்குக் கிழக்குக் கரையோரப் பட்டினங்களிலும் சிறப்பாக இவர்கள் செல்வாக்கு மேலோங்கியிருந்தது. அனுராதபுர அரசின் வீழ்ச்சியின் பின்னர் கி. பி. 1000 — 1250 வரை நிலவிய பொலநறுவை அரசு காலத்திலும் முதல் எழுபது ஆண்டுகள் வடக்கு கிழக்குப் பகுதிகள் உட்பட சோழராகிய தமிழர் கையிலே தான் இலங்கை முழுவதும் காணப்பட்டன. முக்கியமாகக் கிழக்குப் பிராந்தியத்திலே சோழர் செல்வாக்கும் தமிழரின் ஆதிக்கமும் மேலோங்கி இருந்தது. இதன் பின்னர் தோன்றிய தமிழரசாகிய யாழ்ப்பாண அரசு காலத்தில் (கி. பி. 1250 — 1619) தற்கால வடபகுதி மட்டுமன்றி கிழக்கே திருகோணமலை வரை இதன் எல்லை சென்றிருந்தது. திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் தமிழ் வன்னியர் ஆட்சி நீடித்தது. இவர்கள் பெருமளவு சுதந்திரமாக விளங்கினர். பின்னர் இவர்கள் கண்டி இராச்சியத்தின் மேலாணையை ஏற்றும் இப்பகுதி தமிழ்ப் பகுதியாகவே விளங்கியது. இதனால் கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் கால் வைத்த போது மூன்று சுதந்திர இராச்சியங்கள் இங்கிருந்தன. அவையாவன யாழ்ப்பாணம், கோட்டை, கண்டி என்பனவாகும். தமிழ்ப் பகுதியில் யாழ்ப்பாணத் தமிழரசும் தமிழ் வன்னி அரசுகளும் இருந்தன.

இவ்வாறு வரலாற்று ரீதியாக நோக்கும் போதும் தமிழ் மக்களும் இந்நாட்டின் ஆதிக் குடிகள் மட்டுமன்றி கிறீஸ்தாப்தத்திற்கு முன்னரும் பின்னரும் சிற்சில காலப் பகுதிகளில் இலங்கை முழுவதையும் ஆட்சி செய்ததும், நாட்டின் பல பகுதிகளிலும் பரந்திருந்ததும், அநுராதபுர அரசின் வீழ்ச்சிக்குப் பின்னரே வடக்கு கிழக்கு மாகாணங்களில் செறிந்திருந்ததும் தெரிகிறது. காலகதியில் இவை இவர்களின் பாரம்பரிய பிரதேசமாயின. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழர் பிரச்சனைக்கு ஒரு தீர்பாக இக் கோட்பாடு வைக்கப்பட்டாலும் கூட இது நியாயமான கோட்பாடு என்பதனை இலங்கையின் வரலாறு எடுத்துக் காட்டுகின்றது எனலாம். துரதிஷ்டவசமாகச் சிங்கள மக்களிடையே வேரூன்றி இருந்த வரலாற்றுச் சம்பவங்களைக் கோவைப்படுத்தும் மரபு தமிழ் மக்களிடையே பண்டு தொட்டுக் காணப்படாததால் தமிழ் மக்கள் பற்றிய தொடர்ச்சியான வரலாற்றைத் தமிழ் நூல்கள் குறிக்கவில்லை எனலாம். எழுதப்பட்ட தமிழ் நூல்களும் காலத்தால் யாழ்ப்பாண அரசுக்குப் பிந்தியவையே பாளி, சிங்கள நூல்களைப் பொறுத்தமட்டில் முழு இலங்கை சிங்களவருக்குரியதே என்ற கோட்பாட்டில் எழுதப்பட்டதால் இலங்கைத் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தின் வரலாறு பற்றிய பல முக்கியமான தகவல்களை இவைகள் தட்டிக் கழித்து விடுவதற்கான வாய்ப்பும் நிச்சயம் இருந்தன எனலாம்.

வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள இஸ்லாமியச் சகோதரர்களும் தமிழ் மக்களோடு ஒருங்கிணைந்து வாழ்ந்து வந்ததை வரலாற்றுச் சான்றுகளும் குடிசன மதிப்பீடுகளும் எடுத்துக் காட்டுவதால் தமிழ் மக்கள் போன்று இஸ்லாமியரதும் பாரம்பரியப் பிரதேசமாகவும் இவை விளங்குகின்றன என லாம். இதனால் இவ்விரு மாகணங்களையும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என அழைப்பதும் பொருத்தமானதே.


## யதார்த்தம் என்றால் என்ன?

**உள்ளதை உள்ளபடி சொல்வதுதான் யதார்த்தம் அல்ல**
**உள்ளதை உள்ளபடி சொல்லும் போது**
**உண்மையை வெளிக் கொணர்வது தான் யதார்த்தம்.**

''நந்தி'' மணிவிழாவில் — பேராசிரியர். கா. சிவத்தம்பி.

# அலைகடலில் ஓர் அனுபவம்......

கடலோரக்



கதைகேளீர்

சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருக்கும் ஒரு மாலை வேளையில் பாஷையூர் என்ற கடற்றொழிலாளர்கள் செறிவாக வாழும் கிராமத்துக்குச் சென்றோம். அநேகமாக மீன்பிடிப் படகுகள் கடற்கரையிலே நிறுத்தப்பட்டிருந்தன. ஒரு சிலரை மட்டுமே கடற்கரையில் காண முடிந்தது.

கடற்றொழில் என்பது பலவிதமான அபாயங்களையும், கஷ்டங்களையும், உயிராபத்துக்களையும் உள்ளடக்கியது. இத்தொழிலைச் செய்பவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை, தொழில் பிரச்சினைகள் போன்றவைபற்றி மக்களிடையே பல்வேறு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. உண்மை நிலையை அறியும் அவாக்கொண்டு அன்னாடம் தொழில் செய்வோர் சிலரைக் கண்டு கலந்துரையாட விரும்பினோம்.

ஒரு சஞ்சிகைக்காக நாம் கலந்துரையாடுவதை அவர்கள் விரும்புவார்களா? பத்திரிகைத் துறை என்பதால் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்குத் தயக்கம் காட்டுவார்களா? அல்லது தங்கள் தொழில் விமர்சிக்கப்படப்போகிறது என எண்ணி இதை விரும்பமாட்டார்களோ? என்ற பல சந்தேகங்கள் எம் மனதில் குடிகொண்டிருந்தன.

இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதுபோல் எம் முதல் சந்திப்பு அமைந்தது, பாஷையூரிலே தொடர்ந்து மூன்று தசாப்தங்களாக கடற்றொழில் செய்துவரும் திரு. அந்தோனியப்பு சில்வஸ்ட்டர் (வயது 39) என்பவரை அவரது இல்லத்திலும் அவர் தொழில் செய்யும் இடத்திலும் சந்தித்து உரையாடினோம். ஒரு வாரமாகத் தொடர்ந்து கடலில் தொழில் செய்துவிட்டு அன்றுதான் களைப்புடன் ஊருக்குத் திரும்பியிருந்தார். எம்மை களைப்பின் மத்தியிலும் இன்முகத்துடன் வரவேற்று மனம்திறந்து உண்மைநிலைபற்றிய தன் கருத்துக்களை எமமுடன் பகிர்ந்துகொண்டார். ஆழ்கடலுக்கு அவர் தொழிலுக்குச் செல்லும்போதும் அவருடனே சென்று தொழிலின் உண்மை நிலைபற்றியும் அதிலுள்ள பிரச்சினைகள் பற்றியும் அனுபவரீதியாக நேரடியாக அறிந்து இச்செவ்வியை உங்களுடன் பகிர்கின்றோம். இச்செவ்வி கடற்தொழிலாளர்களின் பிரச்சினைகளை முழுமையாக வெளிக்கொணர்வதாகவோ அல்லது அவர்களின் ஒட்டுமொத்தமான கருத்தோ என்று கொள்ளல் யதார்த்தமன்று. பிரதேசத்திற்குப் பிரதேசம் கடற்றொழிலாளர்களின் சமூகப் பொருளாதார நிலை மாறுபட்டுள்ளது கருத்திற்கெடுத்துக்கொள்ள வேண்டியதொன்றாகும்.

— ஆசிரியர் குழு.

கே: யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரை இடத்திற்கிடம் மீன்பிடிமுறைகள் வேறுபடுகின்றன. உங்கள் கிராமத்தைப் பொறுத்தவரை நீங்கள் கையாளும் மீன்பிடி முறைகள் பற்றிக் கூறமுடியுமா?

ப: எங்கள் கிராமத்தைப் பொறுத்தவரை சிறகுவலை, ஆழ்கடல்வலை, கரைவலை, தங்கு கடல் போன்ற முறைகள் கையாளப்படுகின்றன. பெரும்பாலும் சிறகுவலை இங்கு மேற்கொள்ளப்படுகின்றது. மூன்றுபேர்வரை சென்று நடுக்கடலில் வலையை வீசிவிட்டுக் கரைக்கு வந்துவிடுவோம். மறுநாட் காலை எங்கள் உடமைகளையும், பிடிபட்ட மீன்களையும் கரைக்குக் கொண்டு வருவோம். இவ்வேளை எங்கள் முதலீடுகள் அனைத்தும் நடுக்கடலில் தனித்து இருக்கும் ஒரு நிலையும் காணப்படுகின்றது. ஆழ்கடல்வலை முறையில் நான்கு பேர்வரை சென்று வலையுடனே நடுக்கடலில் இருந்து மறுநாட் காலைதான் கரைக்குத் திரும்புவோம். ஆனால் இது எங்கள் பகுதியில் அவ்வளவாக மேற்கொள்ளப்படுவதில்லை. கரைவலை என்ற மீன்பிடியும் பிரபல்யமற்றது.

கே: பரந்து விரிந்து இருக்கின்ற கடலில் நீங்கள் எல்லாப் பகுதிகளிலும் தொழில் செய்யக்கூடியதாக உள்ளதா? உங்கள் தொழிலுக்குக் குறிப்பிட்ட பருவகாலங்கள் தேவையா?

ப. எங்களைப் பொறுத்தவரை குறிப்பிட்ட கடற்பிரதேசங்கள் மட்டுமே தொழில் செய்யக்கூடிய பிரதேசங்களாகும். நாங்கள் எல்லாப்பருவ காலங்களிலும் தொழில் செய்வோம். எமது அன்றாட செலவு அன்றாடம் பிடிக்கப்படும் மீன்களிலும் அதனால், கிடைக்கும் அன்றாட வருமானத்திலும் தங்கியுள்ளது. எனவே, ஒவ்வொரு நாட்களும் நாங்கள் தொழிலிற்குச் செல்லவேண்டும். நாம் தொழிலுக்குச் சென்றால் மட்டுமே வீட்டில் அடுப்பு எரியும்.

கே: நீங்கள் பாஷையூரை அண்டிய பிரதேசத்தைத் தவிர வேறு இடங்களுக்கும் சென்று தொழில் செய்வதுண்டா? அப்போது அப்பிரதேச கடற்றொழிலாளர்களுடன் முரண்பாடுகள் ஏற்படுவதுண்டா?

ப: பல படகுகளில் பூநகரி, பாலைதீவு, கவுதாரிமுனை, மண்டித்தரை, பள்ளிக்குடா போன்ற இடங்களுக்குச் செல்வோம். சில தினங்கள் அங்கேயே தங்கியிருந்து பிடித்த மீன்களை ஒரு படகு மூலம் பாஷையூருக்கு அனுப்புவோம். இங்கு யாராவது ஒருவர் அவற்றைச் சந்தைப்படுத்துவார். நாங்கள் திரும்பி வந்ததும் விற்ற பணத்தைப் பெற்றுக் கொள்வோம். இது 'தங்குகடல்' மீன்பிடி எனப்படும். மற்றும் நாங்கள் அப்பகுதிகளில் சென்று மீன் பிடிக்க எவரது அனுமதியும் தேவையில்லை. அதேவேளை அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்து மீன்பிடித்தால் நாங்கள் ஒன்றும் கேட்பதில்லை. ஒருவருக்கும் கடலில் சொந்தமாக எந்த இடமும் இல்லை. கடலன்னை யாவருக்கும் சொந்தமானவர்.

கே: நீங்கள் சந்தைப்படுத்த நியமிப்பவர் உங்களை ஏமாற்றமாட்டார்களா?

ப: எங்கள் தொழிலுக்கு நம்பிக்கை, நாணயம், புரிந்துணர்வு என்பனவே மூலதனம். இது இல்லாவிடின், சந்தைப்படுத்துவதில் மட்டுமல்ல மற்றும் பலவழிகளிலும் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். ஒருவர் மீன்களை சந்தைப்படுத்தும்போது தனக்குரிய கடமையை நேர்மையாகவே நிறைவேற்றுவார். ஏனெனில் பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவர் தொழிலுக்குச் செல்ல வேண்டியிருக்கும். அச்சந்தர்ப்பத்தில் அவர் தொழிலில் ஈடுபட்டு அனுப்பும் மீன்கள் நல்ல விலைக்கு விற்கப்படவேண்டுமென்றே விரும்புவார். இதனால் மற்றவர்களுக்கு நம்பிக்கையாக நடப்பார். மேலும், அநேகமாக எல்லோரும் உறவினர்களாக இருப்பதால், பிரச்சினை எதும் எழுவது குறைவு.

கே: விவசாயிக்கு குறிப்பிட்ட சொந்த நிலமுண்டு. அவர்கள் எவ்வளவோ பணத்தைக் கொட்டி குறிப்பிட்ட பருவகாலங்களில் மட்டும் பயிரிட்டுப் பலனைப்பெறுகிறார்கள். உங்களைப் பொறுத்த வரை சொந்தமாக குறிப்பிட்ட இடமில்லை. அதேவேளை முதலீடு ஏதுமின்றி (மீன்பிடி உபகரணம் தவிர) தொழில் செய்து எல்லாப் பருவகாலத்திலும் பலனைப்பெறுகிறீர்கள் என்ற கருத்துப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப: விவசாயிகளுக்கு சொந்த இடமுண்டு. அதில் எவரும் தொழில் செய்ய முடியாது. ஆனால், எங்கள் தொழில் அவ்வாறில்லை. எல்லாப் பருவகாலங்களிலும் நாங்கள் குறிப்பிட்ட ஒரு பிரதேசமின்றி எங்கும் அலைந்து சென்று மீன் பிடிக்க வேணடியிருக்கும். ஆனால், நாம் எதிர்பார்க்கும் பலனைப் பெறுவோம் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது.

கே: முதலாளி – தொழிலாளி உறவுமுறை பல்வேறுபட்ட தொழில்களிலும் காணப்படுகிறது. உங்கள் கடற்றொழிலில் உள்ள சம்மாட்டி தொழிலாளி உறவு முறை சிறிது வேறுபட்டது. அதுபற்றி மக்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. அதன் உண்மை நிலைபற்றி கூறமுடியுமா?

ப: சம்மாட்டி எனப்படுபவர் பெரும் பணம் படைத்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் பெருமளவு மீனபிடி உபகரணங்களை தம்மிடத்தே வைத்திருப்பார்கள். குறிப்பிட்ட தொழிலாளர்களை கூலிகொடுத்து வேலைக்கு வைத்திருப்பார்கள். இதனால், இத்தொழிலாளர்கள் தங்கள் சம்மாட்டியிடம் அனுமதிபெறாமல் வேறு எந்தத் தொழிலையும் செய்யமுடியாது. அதாவது, அவர்கள் உழைப்பு விலைக்கு வாங்கப்படுகின்றது. வருமானப்பங்கீடு மற்றைய தொழில்களிலுள்ள மாதிரியில்லாது முற்றாக வேறுபட்டது. உதாரணமாக எம் கிராமத்தைப் பொறுத்தவரை மாதவருமானம் 10,000 ரூபாயானால், அதில் 50%ஐ சம்மாட்டி தன் உடமைகளின் முதலீட்டிற்காக எடுத்துக்கொண்டு, மீதி 5000 ரூபாவை தொழிலில் பங்கெடுத்தவர்களுக்குச் சமபங்குகளாகப் பிரிப்பார். அதிலொரு பங்கையும் சம்மாட்டி எடுத்துக் கொள்வர். இப்பங்கை எடுப்பதற்காகவே சம்மாட்டி மாதத்திலொரு முறை தொழிலுக்குச் செல்வார். போனஸ் போன்றவை இப்போது வழங்கப்படுவதில்லை. அந்தக்காலம் மலையேறி விட்டது.

கே: சம்மாட்டிமார் வீட்டிலிருந்து கொண்டு தமது மீன்பிடி உபகரணங்களை மட்டுமே வழங்குகிறார்கள். ஆனால், தொழிலாளர்களோ மாதம் முழுவதும் வெயில், மழை போன்றவற்றைப் பாராது தம் மனித சக்தியை மூலதனமாகக் கொண்டு உழைக்கின்றனர். ஆனாலும் தொழிலாளர்கள் முழு பலனையும் பெறுவதில்லை. வருமானத்தில் ஒரு சிறுபகுதியையே பெறுகின்றனர். இதை ஒருவகைச் சுரண்டலாகவே நாம் கருதுகின்றோம். இவ்வாறான ஒரு நிலையை மாற்ற எவரும் முன்வரவில்லையா?

ப: நிச்சயமாக இல்லையென்றே கூறலாம். இதற்குப்பல காரணங்களுண்டு. கூட்டமைப்பாக முதலீடு செய்து தொழிலுக்குச் செல்வதானால், எம்மைப் பொறுத்தவரை ஒரு சிரமமான காரியம். உதாரணமாக ஐந்து பேர் சேர்ந்து ஒரு கூட்டுத் தொழில் முயற்சியை ஆரம்பித்தால் கிடைக்கும் வருமானத்தில் ஐவரும் சமபங்காக பங்கிட்டுக் கொள்வர். இதேவேளை ஐவரில் ஒருவர் சுகயீனம் காரணமாக ஒருநாள் கடலுக்குச் செல்லாவிடினும் அவருக்குச் சேரவேண்டிய பங்கைக் கொடுத்தேயாக வேண்டும். இதேமாதிரி அந்த ஐவரில் ஏனையவர்களும் பலகாரணங்களைக் காட்டித் தொழிலுக்குச் செல்லாமல் நிற்கலாம். அவர்கள் கூறும் காரணங்கள் உண்மையானவையாகவோ அல்லது உண்மைக்குப்புறம்பானவையாகவோ இருக்கலாம். இவ்வாறான நிலைமையால் தொழிலில் அசிரத்தை ஏற்பட வாய்ப்புண்டு. தொழிலுக்குப் போகாமலே பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் உருவாகும். இதன் காரணமாக பல்வேறுபட்ட பிணக்குகள் உருவாகலாம். இதேவேளை சம்மாட்டியிடம் வேலை செய்யும் போது அன்றாடம் தொழிலுக்குச் சென்றால் மட்டுமே பணம் கிடைக்குமென்ற நிலை. இதனால், தொழில் மீது பயபக்தி இருக்கும். பாஷையூரைப் பொறுத்தவரை பெரும்பாலானோர் தமது வாழ்க்கைத் தேவையைத் திருப்தியாகப் பூர்த்தி செய்யக்கூடியதாகவே வாழ்கிறார்கள். ஆகவே எவரும் இந்நிலையை மாற்ற முன்வருவதில்லை.

எங்கள் கிராமத்தைப் பொறுத்தவரை எல்லோரும் ஒருவருக்கொருவர் உறவினராகவே கருதுகிறார்கள். எனவே, முரணான நடவடிக்கை காரணமாக உறவில் விரிசல் ஏற்பட வாய்ப்புண்டு. உதாரணமாகச் சில இடங்களில் அண்ணன் சம்மாட்டியாக இருக்

கத் தம்பி அவரின் கீழ் தொழிலுக்குச் செல்வார். ஆனால், தம்பிக்கு வாழ்க்கைத்தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வருமானம் கிடைக்காது. அதை அவர் பொருட்படுத்துவதில்லை. கூடிய வருமானமுள்ள தொழிலுக்கு அவர் போகலாம். ஆனால், தான் அவ்வாறு செல்வதால் அண்ணனின் தொழில் பாதிக்கப்பட்டு விடுமோ என்று எண்ணி தன் குடும்பநலனையே அண்ணனின் தொழிலுக்காகத் தியாகம் செய்கிறார். இது இவ்விதமிருக்க அண்ணரோ எவ்வளவு பணத்தைக் குவித்து வைத்திருந்தாலும், தம்பி கஷ்டப்படுகிறார். அவருக்கு உதவவேண்டுமென்ற மனிதாபிமானமற்றவராகக் காணப்படுகிறார். சில இடங்களில் சம்மாட்டிமாரை எதிர்த்தால், அடுத்த வேளை உணவுக்கு எங்கு செல்வது என்ற நிலைகூட உருவாகலாம். இதனால் இவ்வாறான சம்மாட்டி அமைப்பு முறையில் பல சிக்கல்கள் இருப்பினும் அதனை மாற்ற எவரும் முன்வரவில்லை.

கே: உங்கள் பிரதேசத்தில் இன்றும் பழமையான மீன்பிடி முறைகளே கையாளப்பட்டு வருகின்றன. இதனால், வளரும் விஞ்ஞான யுகத்தில் உங்களால் போட்டி போட முடியாத நிலை காணப்படுகின்றது. இந்நிலையை, உங்கள் சமூகத்தின் கல்வி நிலையை உயர்த்துவதன் மூலமும், கற்றகல்வியை உங்கள் தொழிலில் பிரயோகிப்பதன் மூலமும் மாற்றமுடியுமென நாம் நம்புகின்றோம் ஆனால், உங்கள் கல்விநிலை மிகவும் பின் தங்கிய நிலையிலே உள்ளது. இதற்கான காரணங்கள் யாதென நம்புகின்றீர்கள்?

ப: எமது சிறுபராயத்தில் இப்பகுதிமக்களின் கல்விநிலை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. ஆனால், தற்போது கல்வி கற்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை உயர்வாகவுள்ளது. இது எம்மைப் பொறுத்தவரை ஒரு முன்னேற்றமாகவே கருதுகின்றோம். ஆரம்பத்தில் எமது கல்விநிலை பின் தங்கிய நிலையில் இருந்ததற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். அந்தக்காலத்தில் எங்களுக்கு வழிகாட்ட படித்த மனிதர்கள் எம்மிடத்தே குறைவு. எமக்கு ஏதும் ஆலோசனை தேவைப்பட்டால், ஊரில் உள்ள பெரிய மனிதர் எனப்படுவோரிடம் போய்க்கேட்பது வழக்கம் அதேவேளை, அவர்கள் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் நிலையும் இருந்தது. இதை சாதகமாக்கிக் கொண்ட ''அப்பெரிய மனிதர்கள்'' படிக்க விட்டால் தொழிலுக்கு ஆள் இல்லாமல் போய்விடும் என்ற நிலை உருவாகிவிடும் இதை அனுமதிக்கக் கூடாது என்ற உள்நோக்கத்தை வைத்துக்கொண்டு ''படிப்பித்து என்னத்தைக் காணப்போறாய்'' கடலுக்குக் கொண்டு சென்றால் எவ்வளவு உழைக்கலாம்'' என ஆலோசனை வழங்கிவிடுவார்கள். இவர்கள் சூழ்ச்சியை அறியாத அப்பாவி மக்கள் ''அப்பெரியமனிதர்கள்'' சொன்னபடி தம் பிள்ளைகளைத் தொழிலுக்குக் கொண்டு செல்வார்கள். தொழிலில் நான்கு பேராக ஈடுபடும் போது அதில் தகப்பனும் 3 பிள்ளைகளும் எனின், கிடைக்கும் வருமானத்தின் முழுப் பங்கும் ஒரே வீட்டிற்கே போய்ச் சேரும் என்பதாலும் தமது பிள்ளைகளைத் தொழிலில் ஈடுபடுத்த பெற்றோர் தயங்குவதில்லை. பிள்ளைகளும் பணத்தைக் கண்டவுடன் கல்வியின் முக்கியத்துவத்தையும் மறந்து படிப்பை நிறுத்தத் தயங்குவதில்லை. இங்கு ஒரு சம்பவத்தை நினைவு கூர விரும்புகின்றேன். ஒரு தந்தையார் தன் மகனை மேற்படிப்பிற்காக வெளிநாட்டிற்கு அனுப்பினார். அங்கிருந்து மகன் தன்னால் படிக்க முடியவில்லை என தந்தைக்கு கடிதம் எழுதினார். அதற்குத் தந்தை, ''கடல் இன்னும் வற்றவில்லையடா மகனே! நீ எப்பவும் திரும்பி வரலாம்'' என்று கடிதம் எழுதினார். ஆனால், மகனோ தன் மனத்தை மாற்றி கடினமுயற்சியால் உயர்கல்வியை வெற்றிகரமாக முடித்துவிட்டு நாடு திரும்பினார். அதனால் இன்று அவர் குடும்பம் சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருக்கிறது.

அதேவேளை, O/L, A/L படித்துவிட்டும், நாம் ஏன் அரசாங்கத்திடம் கையேந்தி நிற்க வேண்டும் என்று எண்ணி அதைத் தூக்கியெறிந்துவிட்டு கடற்றொழிலை மேற்கொள்ளும் பிள்ளைகளும் எம் சமூகத்தில் இருக்கிறார்கள்.

கே: உங்களிற் பலர் கடல்றொழிலை விடுத் வெளிநாட்டிற்குச் சென்று வேறு தொழில்

களைச் செய்கிறார்கள். ஏன் இவ்வாறான நிலை ஏற்பட்டது?

ப: இந்தநிலைமை எம்சமூகத்தில் மட்டும் ஏற்படவில்லை. நாட்டில் உள்ள பல்வேறு சமூகத்திலும் இந்நிலை ஏற்பட்டிருக்கிறது. எம்மைப் பொறுத்தவரை 1983 ம் ஆண்டிற்குப் பின்பு நாட்டில் நிலவும் பிரச்சினைகள் காரணமாக இத்தொழிலில் பாரிய நஷ்டங்கள் ஏற்பட்டன. பலவழிகளில் வேண்டப்படாத அநாவசியமான உயிர்ச்சேதங்கள், பொருட்சேதங்கள் ஏற்பட்டன. மீன்பிடி உபகரணங்கள் உட்பட எங்கள் உடமைகள் பல சேதமாக்கப்பட்டன. ஆழ்கடலில் கடற்படையினரின் கெடுபிடிகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும், கரையில் இராணுவத்தின் துன்புறுத்தலுக்கும் ஆளாகவேண்டியிருந்தது. இதனால் தொழிலைச் செய்ய முடியாத நிலையும் பாதுகாப்பற்ற நிலையும் காணப்பட்டது. இவ்வாறான நிலைமையால் பலர் வெளிநாடு சென்று வேலைபார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இது முழுத்தமிழ்பேசும் சமுதாயத்திற்கு ஏற்பட்ட பிரச்சினையாகவே கருதுகிறேன்.

கே: உங்கள் கடற்றொழில் வாழ்க்கையிலே நிச்சயமாகப் பல அபாயகரமான சம்பவங்களை நீங்கள் எதிர்நோக்கியிருப்பீர்கள். அதில் உங்கள் மனதை விட்டகலாதது எது?

ப: எங்கள் தொழில் மற்றைய தொழில்களைவிட முற்றாக வேறுபட்டது. நாங்கள் எப்போதும் உயிரைப் பணயம் வைத்தே இத்தொழிலில் ஈடுபடுகின்றோம். குறிப்பாக வானிலையில் ஏற்படும் சடுதியான மாற்றத்தால் எம்மிற்பலர் பல வகையான உயிராபத்துகளை எதிர் நோக்கியுள்ளோம். 1982 களுக்குப் பின் வேறொரு விதமான ஆபத்தும் அதாவது கடற்படை, இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்கும் அடாவடித்தனங்களுக்கும் ஆளாக வேண்டியிருந்தது. கடலில் கடற்படையினரின் இம்சைக்குள்ளாகிறோம். நடுக்கடலில் ஹெலி கீழாகப்பறந்து எம்படகுகள் சோதனை செய்யப்படும். ஓர் அனுபவம் அது மிகவும் பயங்கரமான சூழ்நிலை. 1984 ம் ஆண்டு மார்கழி 31 ம் திகதி 5 மணியளவில் ஹெலிகீழாகப்பறந்து வந்தது. நாம் சோதனை செய்ய வருகின்றதென எண்ணியிருந்த வேளை எம்மை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. நாங்கள் கடலில் குதித்து ஓடினோம். ஹெலி போனபின் படகுக்கு சென்று பார்த்தபோது எம்மில் ஒருவர் காயமடைந்திருப்பதையறிந்து கரைக்கு விரைந்தபோது அவர் வழியில் இறந்துவிட்டார். அச்சம்பவம் இப்போதும் என் மனக் கண் முன் நிழலாடுகிறது.

கே: அரசாங்கத்தின் 'ஜனசக்தி' வறுமை ஒழிப்புத் திட்டம் கடற்றொழிலாளர்களுக்கு பலவகையான நன்மையளிக்கப் போகிறது என்ற கருத்து மக்களிடையே நிலவுகின்றது இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப. ஜனசக்தி என்ற வறுமை ஒழிப்புத் திட்டத்தைப் பற்றியும், அதனால் கிடைக்கும் நன்மைகள் பற்றியும், நடைமுறைப்படுத்தும் முறைகள் பற்றியும் அனேகமாக இங்குள்ளவர்களுக்குத் தெரியாது. அரசாங்கம் கூட 'ஜனசக்தி' என்று நாளும் பொழுதும் தன் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் கூறுகிறதேயொழிய இதுவரை அதுபற்றிய விரிவான விளக்கமெதுவும் மக்களுக்கு வெளியிடப்படவில்லை. இப்படிப்பட்ட ஒரு நிலைமையில் இத்திட்டம் எங்களுக்கு நன்மை பயக்கும் என்று எப்படிச் சொல்ல முடியும்?

நிவாரணம் தருகிறோம் என்று புள்ளிவிபரமெடுக்கப் பலர் இங்கு வந்துபோவார்கள். ஆனால், நிவாரணந்தான் வந்தபாடில்லை. கடந்த காலங்களில் வெளிநாடுகளிலிருந்து பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கென வழங்கப்பட்ட பெருமளவு பணம், மற்றும் உபகரணங்கள் எங்களுக்கு வழங்கப்பட்டனவா? அரசாங்கமே பாதிக்கப்பட்ட மக்களுக்கென்று எங்களைக் காட்டி வெளிநாடுகளிலிருந்து பெருமளவு நிவாரணபொருட்களை பணமாகவும் பொருளாகவும் பெற்றது. அவையெல்லாம் எங்களுக்குத் தரப்பட்டனவா? அப்படியிருக்கும் நிலையில் அரசாங்கம்தானே முன்வந்து புள்ளிவிபரமெடுத்து உங்களுக்கு உதவப்போகின்றோம் என்று கூறுகிறது. இது இவ்வாறிருக்க அரசாங்கத்திலும் அதன் 'ஜனசக்தி' வறுமை ஒழிப்புத் திட்டத்திலும் நாம் எவ்வாறு நம்பிக்கை வைக்கமுடியும்?

நிவாரணம் பற்றிய புள்ளிவிபரமெடுக்க வருபவர்கள் எங்கள் வீட்டின் அமைப்பு, வீட்டிலுள்ள ஆடம்பரப் பொருட்களைப் பார்த்துவிட்டு இவர்கள் வசதியாக இருக்கிறார்கள் என்று எண்ணி நிவாரண தராமல் விட்டுவிடுகிறார்கள் அவர்கள் தமது உண்மையான உள்நிலை பற்றிப் பார்ப்பதில்லை. இப் பொருட்களும் வீடும் நாம் கூடியவருமானம் பெற்றகாலத்தில் பெறப்பட்டவை. நாங்கள் நாள் வருமானத்தை நம்பியிருப்பவர்கள். 1983 இன் பின் எம்தொழிலில் ஏற்பட்ட பாரிய பாதிப்பை நீங்கள் அறிவீர்கள். அப்போது நாங்கள் பட்ட கஷ்டங்களை புள்ளிவிபரமெடுக்க வருவோர் அறிவதில்லை இராணுவ அடாவடித்தனங்களால் பாதிக்கப்பட்ட எம்முடைமைகளை நகைகளை விற்றும் கடன் வாங்கியும் புனரமைத்தோம். இதுவும் இவர்களுக்குத் தெரிவதில்லை. இந்த நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எம்மிடையே அற்றுவிட்டது.

# மறுமலர்ச்சி வேண்டி நிற்கும் நாவாந்துறைக் கிராமம்

கடற்றொழிலாளர்கள் கூடுதலாக வாழும் நாவாந்துறைக் கிராமமானது கடலட்டைத் தொழிலைப் பொறுத்தவரை மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. கடலட்டை ஏற்றுமதி அதிகளவு அன்னியச் செலாவணியைப் பெற்றுத்தரக்கூடிய தொன்றாகும். நண்பகல் வேளையிலே கடலட்டைத் தொழில்பற்றிய உண்மை நிலையை அறியும் பொருட்டு அங்கு சென்றோம். வெய்யிலையும் பொருட்படுத்தாது தத்தமது கடமையிலே ஈடுபடடுக்கொண்டிருந்த தொழிலாளர்களைக் கண்டோம். சந்தையிலே வியாபாரம் மும்மரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. கிராமத்தின் வெளித்தோற்றம் அதன் வறுமை நிலையை எமக்குப் பறைசாற்றியது.

நாவாந்துறையிலே கடந்த நாற்பதாண்டுகளாக கடலடடைத்தொழில் செய்து வரும் திரு. ச. பத்தலோமை (52 வயது) என்பவரைச் சந்தித்து உரையாடினோம். தனது கடந்தகால அனுபவங்களையும் தொழிலிலுள்ள பிரச்சினைகளையும் எம்முடன் மனம்திறந்து பகிர்ந்துகொண்டார். கடலட்டைத்தொழில் பற்றிய சிறு விளக்கத்தைத் தந்துவிட்டு நேர்முகத்தில் கலந்துகொண்டார்.

''பெருமளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடிய கடலட்டைத் தொழிலானது எம் கிராமத்தைப் பொறுத்தவரை மிகவும பிரபல்யம் வாய்ந்த தொழிலாகும். இத் தொழிலை அறிமுகப்படுத்தியதே நாவாந்துறை மக்கள் தான். ஏறக்குறைய அரை நூற்றூண்டிற்கு முன் பூநகரி கரையோரத்தில் மண்டக்கல்லாறுக்கருகில், இங்கிருந்த சீனன் ஒருவர் கடலட்டை உணவாக உட்கொள்ளக்கூடியதென்ற உண்மையை வெளிப்படுத்தி கடலட்டை செறிந்திருக்கும் இடத்தையும் காட்டினார். அவர் காட்டிய இடம் இப்பொழுதும் 'சீனன் பிட்டி' என அழைக்கப்படுகின்றது. நாவாந்துறை மக்கள் அச் சீனருடன் கடலட்டைத் தொழில் முறையைப் பயின்று தொடர்ந்தும் செய்துவருகின்றனர். அவர் சென்றபின்னரும் சிங்கப்பூர் வியாபாரிகளுடன் உள்ள தொடர்புகள் அந்நிய வியாபாரிகள் மூலம் நிலைப்படுத்தப்பட்டிருந்தது. அதன் மூலம் சிலகாலம் அந்நியச் செலாவணி பெறப்பட்டது. ஆனால், தற்போது இத் தொழில் பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்டு மந்த நிலையில் இருக்கிறதெனலாம்''.

கே. மீன்பிடி முறைகளைப்போலல்லாது கடலட்டை பிடிப்பது முற்றாக வேறுபட்டது. கடலட்டை பிடிக்கும் முறைகள் பற்றிக் கூற முடியுமா?

ப. எம்மைப் பொறுத்தவரை இரண்டு வகையான முறைகள் கையாளப்படுகின்றன. முதலாவது, கரையோரங்களில் குறைந்த நீருள்ள பகுதிகளில் நடந்துசென்று அட்டைகளைப் பொறுக்கி எடுத்தல். அடுத்தது, ஆழ் கடலில் சென்று சுழியோடிப் பொறுக்குதல். நீரோட்டத்தின் தன்மையைப் பொறுததே இம்முறை கையாளப்படவேண்டும். கடலின் அடிமட்டத்திலுள்ள அட்டைகளை மேலிருந்து அதாவது, ஆறு பாகம் ஆழமுள்ள நீரிலிருந்து (24 அடி), படகு, பாய்க்கப்பல் போன்றவற்றிலிருந்து அவதானித்துவிட்டு சப்பாத்து, கண்ணாடி அணிந்த சுழியோடி ஒருவர் சுழியோடிப் பொறுக்குவார். இதற்கு கடல் தெளிவாக இருக்க வேண்டும். அப்போதுதான் அட்டைகளை தெளிவாகப் பார்க்க முடியும். காற்று அதிகமாக இல்லாத வசந்த காலங்களில் அதாவது, தை, மாசி, பங்குனி, சித்திரை ஆகிய மாதங்களில் வெள்ளமில்லாது கடல் தெளிவாக இருக்கும். மற்றைய கடல் வாழ் உயிரினங்களைப்போலல்லாது கடலட்டை விரைவாக அசையாது. எனவே, இலகுவாகப் பிடிக்கலாம்.

**கே. கடலட்டைத் தொழிலானது மற்றைய மீன்பிடித் தொழில்களிலும் பார்க்க சிரமமானதாகும். பதப்படுத்தல், ஏற்றுமதி செய்தல் போன்றவற்றில் பல்வேறு கஷ்டங்களுள்ளன. எவ்வாறு இதை மேற்கொள்ளுகிறீர்கள்?**

ப. கடலட்டையைப் பொறுத்தவரை பதப்படுத்தல் என்பது மிக முக்கியமானதொன்றுகும். கரைக்குக் கொண்டுவரப்படும் அட்டை பெரிய சட்டிகள், றம் போன்றவற்றிலிட்டு உப்பு நீரில் அவிக்கப்படும். பின் அட்டையை வெட்டி குடலை அகற்றியபின் கொதி நீரிலிட்டு கிண்டி, உருட்டிப் பக்குவமாக எடுத்து ½ அடி ஆழமுள்ள கிடங்கு வெட்டி அதில் அவித்த அட்டைகளை அடுக்கி ஈரச் சாக்கால் மூடி நீரூற்றப்படும், 6 மணி நேரம் இவ்வாறு விட்டபின், சாக்கை அகற்றி (இவவேளை சுண்ணும்புக்கோது அகற்றப்பட்டுவிடும்) 'தெல்லி'' எனப்படும் பெரிய கூடையிலிட்டு கடல் நீருள் அரைவாசி அமிழ்ந்த நிலையில் காலால் உழக்கி, றப்பர் போன்று வரும் அட்டைகளை எடுத்து முன்போல் மீண்டும் அவிக்கப்படும். குறித்த மஞ்சள் நிறம் வந்ததும் வலை அகப்பையால் அள்ளி வெய்யிலில் காயவிடப்படும். எனினும், அட்டையிலிருந்து முற்றுக நீர் வெளியேருது. இது அட்டையின் தரத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். இதன்பின் மூன்ரும் முறையாக முன்போல் அவிக்கப்படும். காய்ந்த பின் அட்டை சுருங்கும். இதன் பின் சந்தைப் படுத்தலாம். இவ்வாறு பதப்படுத்திய அட்டை இருமாதங்களுக்குப் பிசுக்கடையாதிருக்கும். சந்தைப்படுத்தும்போது அட்டையின் தரம், குறிப்பிட்ட நிறையில் அட்டைகள்ன் எண்ணிக்கையைப் பொறுத்து வகைப்படுத்தப் படும். 1 கிலோ கிறும் (Kg) பதப்படுத்திய அட்டையில், 20 அட்டைகள், காணப்பட்டால, 600/- பெறுமதியான SFOவகை யென்றும்; 35 அட்டைகள் காணப்பட்டால், 450/- பெறுமதியான FO வகையென்றும்; 50 அட்டைகள் காணப்பட்டால், 400/- பெறுதியான O வகையென்றும் அதன் பெறுமதி வகைப்படுத்தப்படும். இவ்வாறு பதப்படுத்திய அட்டை மீன்பிடிச் சங்கங்கள் மூலம் சிலகாலமும், பின் நவாலியில் உள்ள இரு வியாபாரிகள் மூலமும் கொங்கொங், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப் படுகின்றது.

**கே. உங்கள் கடலட்டைத் தொழிலைப் பொறுத்தவரை மீன்பிடிச் சங்கங்களின் பங்கு, பணி பற்றிய உண்மையான நிலையை 'ஜீவ சக்தி' வாசகர்களுக்குக் கூற முடியுமா?**

ப. கடலட்டைத் தொழிலானது பெருமளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடியதொன்றுகும். ''சென் நீக்கலஸ் கடலட்டைச் சங்கம்'' என்ற ஸ்தாபனம் எம் கடலட்டைகளை ஏற்றுமதி செய்வதில் பெரும்பங்கு வகித்தன. இந்த ஸ்தாபனம் எம் மூதாதையரால் உருவாக்கப்பட்டது. இது தொழிலாளர்களாலேயே நிர்வகிக்கப் பட்டது. இது ஆரம்பிக்கப்பட முன்பு சில அன்னிய வியாபாரிகள் எம் மக்களை ஏமாற்றி பெருமளவு பணத்தை பெற்றுக்கொண்டனர். தொழிலுக்குப் போவதற்கு வசதி குறைவாகவுள்ள எம் கடற்றெழிலாளர்கள் அவ் வியாபாரிகளிடம் போய் உதவி கேட்கும் நிலை இருந்தது. இதைப் பயன்படுததிய அவ் வியாபாரி

கள் அரிசி, சீனி போன்ற உணவுப் பொருட்களை மட்டும் வழங்குவார்கள். இவற்றைப் பெற்றுக்கொண்ட எம் தொழிலாளர்கள் ஆழ் கடலில் 6 தொடக்கம் 8 மாதம் வரை தொழில் செய்து கடலட்டைகளை இவ் வியாபாரிகளுக்கு அனுப்பிக்கொண்டிருப்பார்கள். தொழில் முடிந்ததும் விற்ற பணத்தைக் கேட்பார்கள். வியாபாரிகள் பெருமளவு பணத்தைச் சுருட்டிக்கொண்டு சிறு பகுதியை மட்டுமே வழங்குவார்கள். எம் தொழிலாளர்களின் போதிய அறிவின்மை இதற்கு காரணமாகியது. உண்மையில் பல லட்சம் பெறுமதியான கடலட்டையைக் கொடுத்துவிட்டு சில ஆயிரத்தை மட்டுமே பெற்றுக்கொண்டனர். அதாவது, அடிமைகள்போல் எம் தொழிலாளர்கள் அந்நிய வியாபாரிகளால் நடாத்தப்பட்டனர். இவர்களின் சுரண்டல் நாடகத்தைத் தொடரவிடாது தொழிலாளர்களே தம் பணத்தை முதலீடுசெய்து இதற்கென சென். நீக்கலஸ் கடலட்டைச் சங்கத்தை ஸ்தாபித்தனர். தொழிலாளர்களால் நிர்வகிக்கப்பட்டதால், அவர்கள் கஷடங்களை, பிரச்சனைகளை உணர்ந்து இச்சங்கம் சிறப்பாகச் சேவையாற்றியது. ஏற்றுமதி வருமானத்தில் 3% இச் சங்கத்தால் கழிக்கப்படும். இப்பணம் தொழிலாளர்களுக்குக் கடனுகவும் அவர்கள் நலன் பேணவும் பயன்பட்டது.

1970-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சிறீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டுறவு முறையைப் புகுத்தியது. இதனுல், சென் நீக்கலஸ் போன்ற சிறு சங்கங்கள் எல்லாம் கலைக்கப்பட்டு, ''தாய்ச் சங்கம்'' (Primary) உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு பிரதேசத்திற்கு ஒரு தாய்ச்சங்கம் என்ற முறையில் தாய்ச்சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இது கூட்டுறவு ஆணையாளரால் நிர்வகிக்கப்பட்டது. நிர்வாகம் தொழிலாளர் கையிலிருந்து சில குறிப்பிட்டோரின் கைக்கு மாறியது. வருமானத்திலிருந்து கட்டாய கமிஷன் பெறப்பட்டது. இவையனைத்தும் தொழிலாளர்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை. இப்பணமும் சென் நீக்கிலஸ் சங்கத்திலிருநது பெற்ற பெருமளவு பணமும் நிர்வாக உத்தியோகஸ்தர்களால் கையாடப்பட்டன. இவர்களின் ஊழல் காரணமாக தாய்ச்சங்கம் செயலிழந்தது. இதனுல், எம் தொழிலில் பாரிய பாதிப்பேற்பட்டதெனலாம். இதன் பின் நாம் பிடிக்கும் கடலட்டைகளை தனித்தனி வியாபாரிகள் சிலரிடம் கொடுக்க வேண்டியிருநதது. இவர்கள் பொருளைப் பெற்றபின் முற்பணமாக கொஞ்சப் பணம் தந்துவிட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டபின் தான் மீதிப்பணத்தைத் தருவார்கள். அதிலும், சேதம், தரமற்றது என்று கூறி குறைந்த விலைக்கே வாங்குவார்கள். தாய்ச் சங்கத்தில் அங்கத்தவராயிருந்து பின் அது செயலிழக்க மூளைத்தெழுந்த ஊழல் பேர்வழிகள் தான் இந்த வியாபாரிகள். தாய்ச் சங்கத்திலிருந்தபோது தாம் பெற்ற அனுபவத்தைக்கொண்டும் கையாடிய பணத்தைக் கொண்டும் சங்கத்தின் ஏற்றுமதி வியாபாரத் தொடர்புகளை வைத்துக்கொண்டும் தனித்தனியாக தொழில் செய்யத் தொடங்கிவிட்டனர்.

''வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்'' என்ற இன்னுமொரு சங்கம் இருந்தது. கடலட்டை ஏற்றுமதி இச் சங்கம் மூலம் சிலகாலம் மேற்கொள்ளப்பட்டது. இச் சங்கமும் எம்மிடத்தே பெற்ற கமிஷன் பணத்தைத் தொழிலாளர் நலனுக்குச் செலவுசெய்யாது ஐஸ் தொழிற்சாலை, மீன் தூள் தொழிற்சாலை போன்றவை அமைக்கச் செலவுசெய்து தொழிலாளரைக் கைவிட்டது.

**கே. மீன்பிடிச் சங்கங்களின் செயற்பாடு குன்றியபின், தனியார் சிலரிடம் உங்கள் பொருட்களைத் விற்பனைக்காக கொடுக்கின் றீர்கள். அவர்கள் அதில் கொள்ளை லாபம் அடைகின்றுர்கள். இதைத்தவிர்த்து நீங்களே சுயமாக ஏற்றுமதி செய்ய முடியாதா? உங்கள் தொழிலைப் புனரமைப்பதிலுள்ள தடங்கல்கள் யாவை?**

ப. தனியாக ஏற்றுமதி செய்வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. நாம் கடலட்டையை பணம் கொடுத்து வாங்கினுலும் அதைப் பதப்படுத்தும்போது ஏதும் பிழை நிகழ்ந்தால், அதன் தரததில் பாரிய தாக்கத்தை ஏற்படுததும். இதனுல், சந்தைப்

படுத்த முடியாத நிலை ஏற்படும். தவிர அட்டையைக் கொள்வனவு செய்ய பெருமளவு பணமும் தேவைப்படும். பதப்படுத்திய அட்டையை கொழும்பிலுள்ள தரகர்களிடம் (ஏஜன்டிடம்) நேரடியாக கொடுத்தால், இத்தனி வியாபாரிகளின் தலையீடு காரணமாக அட்டையில் வேண்டுமென்றே குறை கண்டு பிடித்து குறைந்த விலைக்கு வாங்க எத்தனிப்பார்கள். இதனுல், எதிர்பார்த்த பலனைப் பெற முடியாது.

எங்கள் தொழில் புனரமைக்கப்படவேண்டியது அவசியமாகும். அதை நிறைவேற்ற எமமிடம் பெரிய மனிதர்கள் இல்லை. வேறு எவரும் எம் சார்பில் கதைக்க முன்வரவும் இல்லை. எமது சமாஜம் நடவடிக்கை எடுத்தால் புனரமைக்க வாய்ப்புண்டு. அரசாங்கத்தின் மீன்பிடி அமைச்சுடன் (Fisheries) நேரடியாகத் தொடர்புகொண்டு வெளிநாட்டுதவிகளைப் பெற்று தாய்ச் சங்கத்தை முதலில் மறுசீரமைககவேண்டும். அதன் மூலம் கடன் கொடுத்தும் மீன்பிடி உபகரணங்களை வழங்கியும் தொழிலை மேம்படுத்தலாம். மற்றும் தொழிற் பயிற்சி நிலையங்களை அமைத்து தொழிலின் நவீன முறைகளை அறிமுகப்படுத்தலாம். ஆனுல், எமது சமாஜத்தின் அசமந்தப்போக்குக் காரணமாக இது சரிவரவில்லை. மேலும், அண்மைக்கால நாட்டின் நிலைமையால், ரோலர் மீன்பிடிப் படகுகள் ஆழ் கடலுக்கு செல்லமுடியாது கிட்டிய கடலில் தொழில் செய்வதால் கடலட்டைகள் சேதமாக்கப்படுகின்றன. டைனமைற் போன்றவற்றுலும் கடலட்டைகள் நாசமாக்கப்படுகின்றன. மேற்படி காரணிகளை நிவர்த்தி செய்வதன்மூலம் எம் தொழில் புனரமைக்கப்படலாம்.

கே. எல்லா மீன்பிடிக் கிராமங்களிலும் சம்மாட்டி – தொழிலாளர் உறவுமுறை காணப்படுகின்றது. ஆனுல், அவ்வுறவு முறையில் இடத்திற்கிடம் பெருமளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. நாவாந்துறையைப் பபாறுத்தவரை இவ்வுறவு முறையின் அடிப்படை அமைப்புப்பற்றிக் கூறமுடியுமா?

ப. கடலட்டைத் தொழிலைப் பொறுத்தவரை சம்மாட்டிமுறை முன்பிருநதது· இப்போதில்லை. விடுவலை போன்ற மீன்பிடி முறையில் சில சம்மாட்டிமார்தான் இங்கு இருக்கிறுர்கள். அத்தொழிலுக்கு 15 பேர் வரை தேவைப்படுவர். ஆனுல், சம்மாட்டி 25 பேர்வரை காசுகொடுத்து ஏறக்குறைய 8 மாதம்வரை வேலைக்கு வைததிருப்பார். இங்கு அவர்களின் உடலுழைப்பு விலை கொடுத்து வாங்கப்படுகின்றது. இங்கு மேலதிகமாக 10 பேரை வைத்திருப்பார். ஏனெனில், எல்லோரும் ஒவ்வொரு நாளும் தொழிலுக்கு வருவார்களென்று கூறமுடியாது. சம்மாட்டியும் தொழிலுக்குச் செல்வார். தொழிலில் கிடைக்கும் வருமானத்தை சமமாகவோ அல்லது தனக்கு 50% கிடைக்கும்படியோ பிரிக்கமாட்டார். வருமானத்தை ஏறக்குறைய 50% சம பங்குகளாகப் பிரிப்பார். அதில், சில பங்குகளை தனது உடமைகளுக்காக எடுத்துவிட்டு மீதியை அவரவர் தொழிலில் காட்டும் திறமையைப் பொறுத்து திறமை அடிப்படையில் பிரித்துக் கொடுப்பர். இங்கு திறமைக்கும், முயற்சிக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது. தொழிலாளர் வருமானத்தின் 20% வரை கழித்துவைத்து வருட முடிவில் போணஸாக வழங்குவார்கள். சிலவேளை, சம்மாட்டி கடலுக்குச் செல்லாவிடினும், கரையிலிருந்துகொண்டு தொழிலாளர் பிடிக்கும் மீன்களை சந்தைப்படுத்துவார். மற்றைய இடங்களிலும்பார்க்க இங்கு சம்மாட்டி தொழிலில் கூடிய பங்களிப்பைச் செய்வார்.

கே. கடற்றெழிலைப் பொறுத்தவரை 'வானிலை' மிகவும் ஆதிக்கம் செலுத்தும் காரணியாகும். வானிலையில் ஏற்படும் சடுதியான மாற்றங்களை உங்கள் அனுபவத்தைக் கொண்டு அறிவீர்களா? அல்லது ஏதும் விசேட கருவிகள் வைத்திருக்கிறீர்களா?

ப. எம் கடந்தகால அனுபவத்தைக் கொண்டுதான் அறிவோம். நடுக் கடலில் காற்று வீசுவதை அவதானித்து புயல் வரபபோவதை ஊகித்துணர்ந்து ஏதாவதொரு கரைக்கு உடனடியாக வந்து சேர்ந்து விடுவோம். அமாவாசை, பறுவம் எப்போது வருகிறதென அவதானித்து அதன்படி காலநிலை எவ்வாறு அமையபபோகிறதெனக் கணித்து அதற்கமைய எம் நடவடிக்கைகளைத்

தொடர்வோம். எம் கணிப்பு பெரும்பாலும் சரியாகவே இருக்கும். கடலட்டைத் தொழிலைப் பொறுத்தவரை இம்முறை மிகவும் பயனுடையது. நாம் காலங்களை நம்பி அதன்படி எம் நடவடிக்கைகளை மாற்றியமைப்போம்.

**கே. உங்கள் கிராமத்தில் அட்டைத் தொழிலைத் தவிர வேறு என்னென்ன மீன்பிடி முறைகள் கையாளப்படுகின்றன?**

ப. சிறகுவலை, வலைபடுப்பு போன்ற சிறு மீன்பிடி முறைகளை மேற்கொள்வோம். ஏனெனில், பெரிய தொழிலில் பயன்படும் பெரிய வள்ளங்களை நிறுத்தத் துறைமுக வசதியில்லை. போக்குவரத்து வசதியும் மிகக் குறைவு. இதற்கு, எம்மிடம் போதிய பொருளாதார வசதியுமில்லை. நண்டு, றால், கணவாய், சங்கு என்பனவும் பிடிக்கப்படுகின்றன. அவற்றிற் சில அன்ரன், அன்றீஸ் போன்ற தனியார் ஸ்தாபனங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டன. எனினும், அதன் அபிவிருத்தி திருப்திகரமாக இல்லாமையால் அது சாத்தியப்படவில்லை.

**கே. நீங்கள் உங்கள் தொழிலில் காட்டுகிற ஆர்வத்தை உங்கள் பிள்ளைகளின் கல்வியிலே காட்டுவதில்லை. கல்வி நிலையை உயர்த்துவதன்மூலம் உங்கள் சமூக பொருளாதார நிலையை உயர்த்தமுடியும் என நாம் நம்புகிறோம். இதுபற்றி நீங்கள் சிந்திப்பதில்லையா?**

ப. எமது சமூகப்பின்னணியே எம் கல்வி நிலை பின்தங்கி இருப்பதற்கான பிரதான காரணியாகும். எம் மக்களைப் பொறுத்தவரை பெரும்பாலானோர் வறுமைக் கோட்டிற்குக் கீழான வாழ்க்கைத்தரத்திலுள்ளனர். அன்றாட வருமானத்தையே நம்பி வாழ்பவர்கள். தம் வருமானத்தைப் பெருக்குமுகமாக தம் பிள்ளைகளைச் சிறுவயதிலேயே தொழிலுக்குக் கூட்டிக்கொண்டு சென்றுவிடுவர். மற்றும், பெரும்பாலானோர் மதுபானம், கசிப்பு பாவனைக்கடிமையாகவுள்ளனர். தாம் பெற்ற வருமானத்தின் பெரும்பகுதியை மதுவருந்துவதிலே செலவளித்துவிடுவார்கள். இதனால், வீட்டிலுள்ளோர் அத்தியாவசியத் தேவைகளுக்கே திண்டாடவேண்டிய நிலை உள்ளது. இந்நிலையில், பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு போதிய வசதியில்லை. இங்குள்ள மதநிறுவனமும், சனசமூக நிலையங்கள் இவ்விடயத்தில் அதிகளவு கவனம் செலுத்துவதில்லை. சனசமூக நிலையங்கள் விளையாட்டுத்துறைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை கல்வித்துறைக்கு கொடுப்பதில்லை. மற்றும், பெரும்பாலான பிள்ளைகள் பாடசாலை செல்லாத நிலையில், படிக்கச் செல்லும் ஒரு சிலரும் ''மற்றைய பிள்ளைகளைப்போல் வாழ்வதைவிட்டு படித்து என்னத்தைக் காணப்போகின்றோம்'' என்றெண்ணி படிப்பில் கவனம் செலுத்தத் தவறிவிடுகின்றனர். இதனால், எம் சமூகத்தில் பிள்ளைகளின் கல்விநிலை திருப்திகரமானதாக இல்லை. இந்நிலை, எதிர்வரும் காலங்களில் மாற வேண்டுமென்பதே எம்முடைய அவாவாகும்.

**கே. நீங்கள் உயிரைப் பணயம் வைத்து வைத்து உடற்சக்தியை மூலதனமாகக் கொண்டு தொழில் செய்கிறீர்கள். உங்கள் தொழிலில் பல்வேறுபட்ட ஆபத்துக்கள் நிறைந்தது. உங்களுக்கும், உங்கள் சக தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட அனுபவங்களை 'ஜீவசக்தி' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

ப. இயற்கை அனர்த்தங்களாலும், கடந்த சில வருடங்களாக இராணுவ அடாவடித்தனங்களாலும் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் ஆபத்துக்களையும் எதிர்நோக்கினோம்.

விடுவலை என்ற மீன்பிடிமுறையிற் சில ஆபத்துக்கள் நிறைந்துள்ளது. இம் மீன்பிடியின்போது சில வள்ளங்களிலிருந்து பெரிய வலையைக் கடலில் நீரேட்டுவிட்டு கயிற்றால் வள்ளத்திலிருந்து வலையைப் பிடிப்போம். கடலினுள் ஒருவர் நின்று தடியால் மீன்களை வலையினுள் துரத்துவார். பின் கயிற்றையிழுத்து வலையிலுள்ள மீன்களை சேகரிப்போம். இதன்போது கூரிய மூக்கை கொண்ட முரல் நெடுமீன் போன்றவை கயிற்றை இழுக்கும்போது ஏற்படும் சத்தத்தால் கோபம் கொண்டு கடலில் நிற்பவரைக் குத்திக் கொன்றுவிடும். இவ்

வாறு எம்மில் ஒருவர் கழுத்தில் குத்தப்பட்டு இறந்துள்ளார்.

அடுத்தது, வள்ளத்தில் செல்லும்போது ''சுணைநீர்'' எனப்படும் அசுத்தநீர் எம்மீது பட்டுவிடும். அது பட்டால் நெருப்பைப் போன்று சுடும். இதன் பின் உடலில் சுணை ஏற்படும். மலம் போகாது தடைப்படும். இதனால், உடல் மெலிந்து சோர்வுற்றுக் காணப்படுவார். ஊசி மூலம் தற்காலிக சுகம் ஏற்படும். இதற்கான காரணத்தை எவரும் இதுவரை ஆராய்ச்சிசெய்து கண்டுபிடிக்கவில்லை. எனினும், குடாநாட்டிலிருந்துவரும் சிறு தொழிற்சாலை, ஆஸ்பத்திரிக் கழிவுகளே இதற்குக் காரணமென நம்பப்படுகிறது. பண்ணையில் பாதை போட்டபின் நீரோட்டம் தடைசெய்யப்பட்டது இதற்கான மற்றுமொரு காரணமெனலாம்.

**கே. இன்றைய உலகில் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக பெண்களும் எல்லா துறைகளிலும் முன்னணியில் இருக்கிறார்கள். ஆனால், உங்கள் கடற்றொழிலைப் பொறுத்தவரை பெண்களின் பங்களிப்பு மற்றைய துறைகளில் அவர்களின் பங்களிப்பைவிட குறைவாகவேயுள்ளது என்ற கருத்துப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

ப. எமது பெண்கள் எம் கடற்றொழிலைப் பொறுத்தவரை குறிப்பிட்ட பங்களிப்பைச் செய்கிறார்கள் எனலாம். மீன்பிடியைப் பொறுத்தவரை மீன்பிடி உபகரணங்களைப் பழுதுபார்த்தல், கருவாடு போடுதல், மீன்களைச் சந்தைப்படுத்தல் போன்ற வேலைகளைச் செய்கிறார்கள். மற்றும் கரையோரங்களில் நண்டு, மட்டி போன்றவற்றைப் பிடிக்கிறார்கள். தூண்டில் மூலம் மீன் பிடிக்கிறார்கள். அட்டைத் தொழிலைப் பொறுத்தவரை பதப்படுத்தலில் அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அட்டைத்தொழிலில் பதப்படுத்துவதற்கு சிலபேர் தேவைப்படுவர். அவர்களைக் கூலிக்குப் பிடிப்பதனால் எம் இலாபத்தில் சிறுபகுதியை இழக்கவேண்டும். எம் குடும்பத்திலுள்ள பெண்கள் இதற்குதவுதனால், முழு லாபத்தையும் பெறக்கூடியதாயுள்ளது. மற்றைய துறைகளிலும்பார்க்க கடற்றொழிலைப் பொறுத்தவரை பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

---

*செவ்வி கண்டோர்:* **திரு. யோசப்பாலாவுடன் லக்ஸ்மன் பாக்கியராஜ், கிரிதரன், கிளஸ்ரன், சிவகோணேசன்.**

---

## இக்கால கல்விமுறை பற்றி நோபல்பரிசு பெற்ற பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்:-

நமது தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகள் பயிற்றுவிக்கப் பெறும் முறை, சர்க்கஸில் இசைக்கேற்றபடி நடனம் ஆடக் கரடிகளைப் பயிற்றுவிக்கும் முறையை ஒத்துள்ளது. இளம் கரடிக்குட்டிகள் முதலில் சூடேற்றப்பெற்ற உலோகத்தகட்டின் மேல் நிறுத்தப்படும். சூடு தாங்காமல் அவை குதிக்கும் போது, பின்னணி இசை ஒலிக்கும். சில வாரங்கள் பயிற்சிக்குப் பின் வெறும் தகட்டைக் கண்டாலே இசைக்கேற்றபடி குட்டிகள் குதிக்க ஆரம்பிக்கும். இன்னும் சில வாரங்கள் சென்றபின் தகடும் நீக்கப் பெறும். இசைகேட்டவுடன் அச்சத்திலேயே கரடிக்குட்டிகள் குதிக்க ஆரம்பித்துவிடும். இத்தகைய தொடக்கக்கல்வி வன்முறையால் ஹிட்லர்களும்,முஸோலினிகளும் உருவாகின்றனர்.

# எமது வளங்களை பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்துவோம்.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசத்தின் பிரதான மூலவளங்களில் ஒன்று கடற்றொழில். இதன் வளர்ச்சி அந்நியசெலாவணியை ஈட்டித்தரவல்லதாக அமையமுடியும், என்பதுடன் எமது பிரதேச நலனைப் பொறுத்தவரை மிகவும் இன்றியமையாததொன்றாகவும் விளங்குகின்றது. பல்வேறு காரணங்களினால் இத் தொழில் இன்று பல முட்டுக்கட்டைகளை எதிர்நோக்குகின்றது. வெளிநாட்டின் உதவிமூலமான உயர்தொழில்நுட்பம் இத்தொழிற்றுறைக்கு கிடைக்கவில்லை. மேலும் இத்தொழிலை மேற்கொள்ளும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரமும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. முட்டுக்கட்டைகளை கண்டறிந்து அவற்றை களைந்து எமதுவளத்தில் அதிஉயர்பலனை பெற நாம் முயலவேண்டும்.

இத்தொழில் மூலம் எமது பிரதேசம் ஆகக்கூடிய பலன் பெறத்தக்க சாத்தியங்களை கண்டறியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் மிகவும் அவசியமானதொன்றாகும். அத்துடன் கடற்றொழிலாளர்களின் வாழ்க்கைதரத்தை உயர்த்தக்கூடிய திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்படல் இன்றைய தேவையாகும். இதற்கு எம்மத்தியில் உள்ள சமூகநலநிறுவனங்கள், பல்கலைக்கழகம் போன்ற அறிவியற் கூட்டங்கள் முன்னின்று உழைக்கவேண்டியது காலத்தின் தேவையாகும்.

எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ள இச்சிறு முயற்சி ஒரு ஆரம்பநிலையே அன்றி ஆய்வுரீதியில் மேற்கொள்ளப்பட்டதொன்றல்ல. எமது சஞ்சிகையின் இந்த வெளிக்கொணர்வு பலரை கடற்றொழில் முயற்சிபற்றிய ஆய்வுகளை புதிதாக மேற்கொள்ள அல்லது மேற்கொள்ளப்பட்டவற்றை மேலும் விஸ்தரிக்க ஒரு தூண்டுகோலாக அமையும் என்ற நம்பிக்கையில், எமது சக்திக்குட்பட்டவரை இம்முயற்சியை மேற்கொண்டுள்ளோம்.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் தனிப்பட்டவர்களின் அறிவியல் தராதரத்தை உயர்த்தும் குறுகிய நோக்கத்துடன் மாத்திரம் மேற்கொள்ளப்படாது, இத்தொழில் முயற்சியில் மறுமலர்ச்சியைக் கொண்டுவரவல்ல செயற்றிட்டங்களாய் அமைதல் வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

எமது சமுதாயத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு அவற்றின் அடிப்படையில் ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றைச் செயற்படுத்தி உழைக்க எம்மத்தியிலுள்ள புத்திஜிவிகள் முன்வருதல் வேண்டும்.

— ஆசிரியர் குழு.

# போதைப் பொருட்கள்

**நமது** சமூகத்தில் உள்ள இளைஞர்களி டையே இன்று பெருகிவரும் பழக்கவழக்கங் களுள் ஒன்ருக போதைப் பொருள் பாவனை இருக்கின்றது. பல நூற்ருண்டுகளாக இலங் கை முழுவதுமே அபின், கஞ்சா போன்றவற் றின் பாவனை இருந்து வந்துள்ளது. ஆனல் இவற்றை உபயோகிப்பவர்களின் எண் ணிக்கை எப்போதும் ஓரளவிற்கு குறை வானது என்றே கூறவேண்டும். கடந்த பல ஆண்டுகளாக தமிழ்ப்பிரதேசத்தில் உருவாகி யுள்ள குழப்பநிலை காரணமாக புதிய வகைப் போதைப் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளன. எமது இளைஞர்களில் பலர் வேலை வாய்ப்பிற்காகவும் வேறு பல காரணங்களிற் காகவும் வெளிநாடுகள் பலவற்றிற்கும் சென்று புதியவகை போதைப் பொருட்களின் அறிமுகத்தை பெற்ருர்கள், இவர்களிற் பலர் இன்று இதற்கு அடிமையாகி விட்டார்கள். இன்றும் பலர் சுலபமாக பணம் சம்பாதிக் கும் நோக்கத்துடன் இவற்றின் கடத்தலில் ஈடுபட்டு வருகிருர்கள். இப்பழக்கற்திற்கு அடிமையாகிவிட்ட பலர் நாட்டிற்கு திரும்பி வந்து இங்குள்ளவர்களுக்கும் இப் பழக் கத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இன்று இலங்கையில் குறிப்பாக வட பிர தேசத்தில் கொடிய புற்றுநோய்போன்று அசுர வேகத்தில் பரவிவரும் போதைப் பொருட்களில் மிக முதன்மையானதும் மிக வும் கொடியதுமான போதைப்பொருள் ஹெரேயின் (Heroin) ஆகும். இப் போதைப்பொருள் ஏனைய நாடுகள் பலவற் றில் கடந்த பத்தாண்டுகளில் பல பாரிய பிரச் சனைகளை ஏற்படுத்தி சீரழித்து வருகிறது. இன்று எமது பிரதேசத்தையும் வேகமாக ஆக்கிரமித்துவரும் இவற்றின் பாவனை முளை யிலேயே கிள்ளி எறியப்படல் வேண்டும்.

### போதைப் பொருட்கள் என்ருல் என்ன?

மனிதனுல் உட்கொள்ளப்படும்போது அவ னது உடலில், மனத்தில், நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தவல்ல இரசாயன பொருட்களே போதைப் பொருள்களாகும். கஞ்சா, ஹஷிஸ் (Hashish), அபின் (Opium), ஹெரோயின் (Heroin), மோர்பின் (Morphine), அம்பெற்றமின்கள் (Amphetamines), தூக்க மாத்திரைகள் (Tranquilzers), கொக் கெயின் (Cocaine), எல். எஸ். டி. (L. S D.), மதுபானம், புகையிலை போன்றவை போதைப் பொருட்களாகும். இவற்றில் சில சமுதாயத் தால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. சில மருத் துவ துறையில் நோயாளிகளுக்கு கொடுக்கப் படுகின்றன. இன்னும் சில எவ்வித நோக் கத்திற்காகவும் உபயோகிக்கப்படுவதில்லை.

மேற் குறிப்பிட்ட அனைத்து போதைப் பொருட்களுமே மனிதனுக்கு வேறுபடும் அளவுகளில் அடிமை நிலையை (Addiction) ஏற்படுத்த வல்லன. இங்கு அடிமை நிலை என்பதன் கருத்து, இப் பொருட்களை பாவிக் கும் மனிதன் நாளடைவில் அப்பொருளில் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் தங்கி நிற்க வேண்டிய (Dependaace) நிர்ப்பந்தத் திற்கு உள்ளாவதாகும். அதாவது இந்தப் பொருட்களை அவன் பாவிக்காமல் வாழமுடி யாத துர்நிலை ஏற்படும்.

இலங்கையில் பாவிக்கப்படும் போதைப் பொருட்களில் சில;

#### 1. அபின் (Opium)

அபின் என்பது பொப்பி (Poppy) எனும் தாவரத்தின் பழுக்காத வித்துறையிலிருந்து (unriped capsule) பெறப்படும். கட்டிபட்ட சாறு (juice) ஆகும். இத் தாவரம் இலங்கை யில் பயிரிடப்படுவதில்லை. ஆனல் ஆயுர்வேத வைத்தியர்களினுல் சிகிச்சையில் உபயோகிக் கப்பட்டு வருகிறது. போதையை ஏற்படுத்த இலங்கை மக்கள் பல காலமாக அபினை பாவித்து வருகிருர்கள். இது வாய்மூலமும் புகையாகவும் உடலினுள் உள்ளெடுக்கப் படலாம்.

#### 2. மோர்பின் (Morphine)

அபினின் பிரதான கூறு மோர்பின் ஆகும். இது அபினிலிருந்து இரசாயன முறையினுல்

பிரித்து எடுக்கப்படும். இந்த மோர்பின் என்ற பொருள் மருத்துவ துறையில் மிக முக்கிய இடத்தை பெற்றுள்ளது. மிகவும் மோசமான வேதனைக்கு (Pain) கொடுக்கப் படும் மருந்துகளில் இன்னும் இது முக்கிய இடத்தை வகிக்கிறது. மோர்பின் பொதுவாக ஊசி மூலம் உட்செலுத்தப்படும். இலங்கை யில் இதன் பாவனை மிகவும் குறைவாகும்.

**ஹெரோயின் (Heroin)**

இது பவுடர் (Powder) குடு (Kudu) போன்ற பெயர்களாலும் அழைக்கப்படும். மேலே குறிப்பிட்ட மோர்பினை இரசாயன தாக்கத்திற்கு உட்படுத்தும்போது ஹெரோயின் கிடைக்கிறது. இது மோர்பினை விட பத்து மடங்கு வீரியமானதும், அதிகளவு அடிமை நிலையை ஏற்படுத்த வல்லதுமாகும். ஹெரோயின் வெள்ளை அல்லது மண்நிற தூளாக பொலிதீன் அல்லது ஈயத்தாளில் (சிகரட் சுற்றப் பயன்படுத்துவது) சுற்றப் பட்டு விற்கப்படுகிறது. வழக்கமான ஈயத் தாளின் மேல் இத்தூளை இட்டு, அதன் கீழே சூடேற்றும் போது வரும் புகை உட் கொள்ளப்படும். சிலர் சிகரெற்றுடன் கலந்து புகைப்பார்கள். ஊசி மூலம் செலுத் தப்படலாம்.

**கஞ்சா (Gauja or Cauna)**

அது (Caanbis Satwa) எனும் தாவரத்தி லிருந்து பெறப்படுகிறது. இத்தாவரம் இலங் கையில் பல இடங்களில் சட்டவிரோதமாக பயிரிடப்படுகிறது. தாவரத்தின் இலை, தண்டு, பூவின் நுனி ஆகியவற்றிலிருந்து கஞ்சா பெறப்படுகிறது. கஞ்சா ஓர் பூண்டுக்கலவை அல்லது கடும் மண்ணிற பிசின் போன்ற பொருளாகும். இது புகையிலையுடன் (சிகரட், பீடி, சுருட்டு) கலந்து புகைக்கப் படலாம்.

**போதைப் பொருள்களால் ஏற்படும் பிரச்சினை கள் என்ன?**

- போதைநிலையில் விபத்து ஏற்படலாம்.
- மிதமிஞ்சியளவு (Overdose) உபயோகம், மனோவியாதி (Psycosis), வலிப்பு, அறி வற்றநிலை (Coma), மரணம் ஆகிய வற்றை ஏற்படுத்தலாம்.
- சில சுவாசத்தை நிறுத்த வல்லன.
- குழப்பமான மனநிலை, பயங்கர மாயக் காட்சிகள் உண்டாகலாம்.
- உளவியற் கோளாறுகள் பல ஏற்படலாம்
- தொடர்ச்சியாக பாவிப்பவர்களுக்கு நாள டைவில் அவற்றிலேயே தங்கியிருக்கும் நிலையும் அவற்றிற்கு அடிமையாகும் நிலையும் ஏற்படும்.
- ஊசிமூலம் செலுத்தும் போது கிருமி நீக்கப்படாத உபகரணங்கள் பாவிக்கப் படுவதால் புண், சீழ்க்கட்டி, குருதி நஞ் சேறுதல் (Septccaemia), செங்கண்மாரி, எய்ட்ஸ் (Aids) போன்றவற்றை ஏற்படுத் தலாம். அண்மைக்காலத்தில் உலகின் அதி பயங்கர கொல்லும் நோயான எய்ட்ஸ் பரவுவதற்குரிய காரணிகளில் நன்ருக இந்த போதைப் பொருள் ஊசி யேற்றலும் உள்ளது என்பது குறிப் பிடத்தக்கது.

**போதைப் பொருள் பாவிப்பவரில் ஏற்படும் அறிகுறிகள்:**

- அதிபரவசநிலை (Euphoria)
- உடல், மனம் தளர்ச்சியடைந்த நிலை (Relanced stale)
- இதய, நாடித்துடிப்புகள் அதிகரித்தல்.
- கண்கள் சிவப்படைதல்.
- நித்திரையின்மை.
- பசி அதிகரித்தல்.
- கண்கள், மூக்கு ஆகியவற்றிலிருந்து நீர் வடிதல்.
- நடத்தை ஒழுங்கற்று போதல்.
- பேச்சு தடுமாறல்.
- சங்காளம்.
- போலி கற்பனை, உளமாயம்.

நாளடைவில் ஒருவரின் நடத்தையில் பின்வரும் மாற்றங்களை அவதானிக்கலாம்.

- மகிழ்வும உற்சாகமும் உள்ள மனநிலை திடீரென சிடுசிடுப்பும் மந்தமுமான மனநிலைக்கு மாறுதல்.
- எதிர்பாராத முன்கோபம் அல்லது சண்டை பிடித்தல்.
- பசியின்மை.
- தனது தோற்றத்தில் கவலையீனமாக இருத்தல்.
- மாணவனுயின் படிப்பு, விளையாட்டு, வீட்டுவேலை போன்றவற்றில் நாட்டம் குறைதல்.
- பொய் சொல்லுதல்.
- அடிக்கடி அரைத்தூக்கம் அல்லது தூக்கமின்மை.
- வீட்டிலிருந்து பணம், பொருள் களவெடுத்தல்.
- உடலில் அல்லது உடைமைகளில் வழமைக்கு மாருன மணம் வீசுதல் அல்லது கறைகள், அடையாளம் காணப்படுதல்.
- வழமையாக காணப்படாத தூள்கள், மாத்திரைகள், தீ பட்ட ஈயத்தாள்' தீப்பெட்டிகள், ஊசிகள் வீட்டில் காணப்படுதல்.

**ஏன் ஒருவர் போதைப்பொருளை பாவிக்க ஆரம்பிக்கிருர்?**

- நண்பர்களின் தூண்டுதலினுல் அல்லது நெருக்குதலினுல்
- இந்த பொருள்களை பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வத்தினுல் (Curiously)
- பரிசோதனை முயற்சியாக.
- ஒரு ''கிக்'' (''Kick'') பெறுவதற்கு
- மனேரீதியான பிரச்சனைகளிலிருந்து தப்பித்து இன்னேர் உலகத்தில் சஞ்சரிப்பதற்கு.

**போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிப்பதற்கு என்ன செய்யவேண்டும்.**

எந்தவொரு இன்பம் தரும் பழக்கத்தையும் மனிதன் பழகிவிட்டால் அதை கைவிடுவது மிகவும் கடினமானது என கூறியுள்ளார் உளவியலாளரான சிக்மண்ட் ப்ராயிட் (Sigmund Freud). அந்த இன்பம் தரும் பழக்கம் மனிதனை எவ்வகையிலும் பாதிக்காவிடில் பாதகமில்லை. ஆனுல் போதைப்பொருட்கள் மனிதனின் உடலையும் உள்ளத்தையும் பாதித்து மனிதனை மரணவாசலுக்கு கொண்டு செல்கிறது. எனவே இறுதியில் துன்பத்தை நிச்சயமாக தரும் போதைப்பொருட்களை எவருமே பாவிக்கக்கூடாது. இதனுல் குடும்பம், சமூகம், நாடு போன்ற அனைத்துமே பாதிக்கப்படுகின்றன. உலக நாடுகள் பலவற்றில சுதந்திர போராட்ட உணர்வை மழுங்கடிக்க இப்பொருள்கள் எதிர்ப்பாளர்களால் புதைக்கப்படுவது வழமை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை தடுப்பதற்கு யாழ்ப்பாண லியோக்கழகமானது பல திட்டங்களை தீட்டியுள்ளது. முதற்கட்டமாக மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றேரர்கள் மத்தியில் போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கும் நோக்குடனும் அதன தாக்கங்களை பற்றிய அறிவை வளர்க்குமுகமாகவும் ஓர் போதைப்பொருள் சுவரொட்டி போட்டியினை பாடசாலைகள் மத்தியில் யாழ். நற்சமூக நடு நிலையத்துடன் இணைந்து நடாத்தி முடித்துள்ளது. அத்துடன் மக்களுக்கு போதைப்பொருளின் தாக்கத்தை விளக்குமுகமாக ஸ்டிக்கர் (Stickker) ஒன்றினையும் வெளியிட்டுள்ளது.

இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்தில் இளைஞர்களுக்கென ஓய்வு நேரங்களில் பொழுதை பிரயோசனமான முறையில் கழிக்க ஏதுவான அம்சங்கள் எதுவும் இல்லை. எனவே இவர்கள் போதைப்பொருளின் மேல் நாட்டம் கொள்வது கூடவாக இருக்கும். ஆகவே சமயம், சமூகசேவை, விளையாட்டு, நாடகம், இலக்கியம் மற்றும் பொழுதுபோக்குகள் போனறவற்றில கூடுதலாக ஈடுபடுத்துவதன் மூலம் இளைஞர்களை பயனுள்ள முறையில் வாழ்க்கையை அர்த்தமுடையதாக்க செய்யலாம்.

எமது கழகம் யாழ்ப்பாணத்தில் உள்ள மற்ற கழகங்களுடன் இணைந்து பாரியளவில் போதைப்பொருட்களான பிரசார நடவடிக்கைகளை நடாத்த உள்ளது.

மனிதகுலத்தையே அமுக்கும் இப்போதைப் பொருளுக்கு எதிராக தற்பொழுது பிரசார நடவடிக்கையானது மிகமுக்கியமாக உள்ளது. இதனை சமூக சேவை கழகங்களோ அன்றி தனிப்பட்டவர்களோ செய்து முடித்து விட முடியாது. எனவே மக்களாக ஒன்றிணைந்து எடுக்கும் நடவடிக்கை போதைப் பொருள் எனும் அரக்கனை ஒழித்து எமது வருங்கால சந்ததியினரை நற்பிரஜைகளாக்க வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

**போதைப் பொருள் தொடர்பான சட்டங்கள் என்ன?**

இலங்கையில் போதைப்பொருள் தொடர்பான 193ஆம் ஆண்டுச் சட்டம் 1984 இல் திருத்தப்பட்டு மிகவும் கடுமையாக்கப்பட்டுள்ளது. உலக நாடுகள் பலவற்றிலும் இதே போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஏற்கனவே பலநாடுகளில் இக்குற்றங்கள் தொடர்பாக பலருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. பலர் வேறு கடுமையான தண்டனைகளுடன் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் தயாரித்தல், கடத்துதல், வைத்திருத்தல் போன்றவற்றிற்கு தற்போது கடுமையான தண்டனைகளிலிருந்து மரண தண்டனை அல்லது ஆயுள்கால சிறைத் தண்டனை வரை வழங்கப்படுகிறது.

பின்வரும் அளவுகளில் போதைப் பொருளை ஒருவர் வைத்திருந்தால் அவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2 கி | அல்லது | அதற்கு | மேற்பட்ட | ஹெரோயின் |
| 3 கி | ,, | ,, | ,, | மோர்பின் |
| 2 கி | ,, | , | ,, | கொக்கேயின் |
| 500 கி | | ,, | ,, | அபின் |

---

குறிப்பு: இக் கட்டுரையின் பிரதான சாரம் வடபகுதி லியோ – நற்சமூக நிலையம் இணைந்து போதைப் பொருள் நடாத்தும் எதிர்ப்பு நடவடிக்கைக்காக Dr. சுகுமார் அவர்களினுல் தரப்பட்ட பிரச்சாரப் பிரசுரத்தில் இருந்து தரப்பட்டது.

---

# சட்டமறுப்பு

ரயில் ஓடிக்கொண்டிருந்தது.

இரு நண்பர்கள் அப்போதுதான் நடந்து கொண்டிருந்த சட்டமறுப்பு இயக்கம் பற்றி பேசிக்கொண்டிருந்தனர்.

திடீரென ஒருவன் சொன்னுன்;

'மச்சான் நானும் இப்போ சட்டமறுப்பில் தான் இருக்கிறேன்'.

'என்ன சொல்கிருய்?......'

ரெயிலுக்கு டிக்கட் எடுக்கேல்ல மச்சான்!......'

செம்பியன் செல்வன் — குறுங்கதை நூறிலிருந்து

# "எமது வார்த்தைகளைவிட எமது மௌனத்திற்கு வலிமை ஏற்படும் காலம் வெகு விரைவில் உதயமாகும்"

(மரணத்தை தழுவுவதற்குச் சற்று முன்னர் அமெரிக்க தொழிலாளர் தலைவர் ஒகஸ்ட்ஸ் ஸ்பய்ஸ் இறுதியாக மேற்கண்டவாறு கூறினர்).

உழைப்பு என்பதே, சகல செல்வ வளங்களுக்கும், சாதனைக்கும், அறிவியல் பண்பாட்டு கலை மேம்பாடுகளுக்கும் அடிப்படை ஆதாரமாகத் திகழ்கின்றது.

உழைப்பை உடமையாகக் கொண்ட உழைப்பாளி, முதலாளி வர்க்கம் ஆதிக்கம் செய்யும் நாடுகளில் அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்ட அடிமையாகவும், மாறாக தொழிலாளி வர்க்க சர்வாதிகார ஆட்சி நிகழும் சோஷலிச நாடுகளில் அனைத்துரிமைகளும் கொண்ட ஆட்சியாளனாகவும் வாழ்கின்றான்.

19 ம் நூற்றாண்டின் நடுப்பகுதி, கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட காலம். தொழிலாளி வர்க்கத்திற்கு மார்க்சும், எங்கெல்லாம் ''கம்யூனிஸ்ட் அறிக்கை'' என்னும் புரட்சிப் பதாகையைத் தந்த காலம்.

விடியல் முதல் அஸ்தமனம் வரை ஓய்வு ஒழிவின்றி தொழிற்சாலை இயந்திரங்களுடன் போராடித் தமது 'ஜீவசக்தியான'' உழைப்பைத்தந்து, சக்கையாகப் பிழியப்பட்ட ஐரோபிய, அமெரிக்க நாட்டுத் தொழிலாளர்கள் தமக்கென்று சங்கம் அமைத்து,

- எட்டு மணிநேரம் வேலை
- எட்டு மணிநேரம் பொழுதுபோக்கு
- எட்டு மணிநேரம் ஓய்வு

என்றும் கோஷம் எழுப்பி உரிமைக்காக ஊர்வலங்களும், வேலை நிறுத்தங்களும் நடத்தினார்கள்.

1886 மே முதல் நாள் முதல் அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் முதல் சிக்காகோ வரையுள்ள நகரத்து தொழிலாளர்கள் எழுச்சி கொண்டனர். சிகாகோ நகரில் நடந்த தொழிலாளர் பேரணியில் முதலாளித்துவததின் ஏவலாளர்களான போலீசார் நடத்திய துபபாக்கிச்சூட்டில் ஏராளமான தொழிலாளர்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டனர். தொழிலாளத் தலைவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து உலகப்பாட்டாளிகள் அடிப்படையுரிமைகளை வென்றெடுப்பதற்காக வீறு கொண்டு தோளுயர்த்தி உரிமைப் போராட்டத்தில் குதித்தனர்.

விளைவு, இன்று உலகில் மூன்றில் ஒரு பகுதியில் தொழிலாளர்கள் ஆட்சியமைத்து ஆக்கபூர்வமான மனித ஆற்றலுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர். உலகில் இதர பகுதிகளிலும் ''முதலாளித்துவ சமூக அமைப்பைத் தொடர்ந்து சோஷலிச சமூக அமைப்பு உருவாவதென்பது இயங்கியல் நியதி'' என்ற தத்துவ வித்தகர் கார்ல் மார்க்ஸின் தீர்க்கதரிசனத்தை நிதர்சனமாக்க வென்றெடுக்க தொழிலாள வர்க்கம் போராடி வருகின்றது.

— ஆசிரியர்குழு

# தொழிலாளர் தினம் ஓர் கண்ணோட்டம்

முதாலாளித்துவம் ஜனித்து முன்னூறு ஆண்டுகள் கடந்த போதிலும், ஈவிரக்கமற்ற கொடூரமான சுரண்டலுக்கு ஆளான தொழிலாளி வர்க்கம் அன்றாட சீவியத்தை நடத்த தினமும் 12–16 மணி நேரம் உழைத்து வந்தது. அடிமை முறையையும் நிலபபிரபுத்துவ அமைப்பையும் முதலாளித் துவத்துடன் ஒப்பிடுகையில் அது மிக முற் போக்கானதாக இருந்ததெனினும், முதலா ளித்துவததின் கீழும் துன்பப்பட்டு நாளின் 24 மணித்தியாலங்களில் 12-16 மணிநேரம் தமது வாழ்க்கைக்காக தொழிலாளி பாடுபட் டான். அவ்வாறு அவன் தனது குடும்ப வரு மானத்தை பெருக்கிக் கொள்ள உழைக்க வில்லை. பெரும் முதலாளிகளின் கஜானுக் கள் நிறைந்து வழிய வேண்டுமென்பதற் காகவே அவன் கஷ்டப்பட்டான்.

முதலாளித்துவம் முதன் முதலாக உண்டாகிய பிரித்தானியாவில் தானும், அதன் பின்னர் மிகத் தீவிரமாக அது வளர்ச்சியுற பிரான்ஸ், ஜெர்மனியில் தானும் மேலும் சொல்லப் போனால் அமெரிக்காவி லேனும் கூடிய சம்பளமும் குறைந்த வேலை நேரமுமான தொழிலாள வர்க்கத்தின் அடிப் படை தொழில் உரிமைகளை வென்றெடுக்க நூற்றாண்டு காலமாக, கடுமையான சில வேளைகளில் ஆபத்தான, போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தொழிலாளி வர்க்கம் ஸ்தாபன ரீதியாக அணிதிரள வேண்டியதும் அதன்படி தொழிற்சங்கங்கள் கட்டியெழுப் பப்பட வேண்டுமென்பதும் இந்த சூழ்நிலை தான் உருவானது.

முன்னூறு ஆண்டுகளாக முதலாளித்துவம் ஆட்சி புரிந்தாலும் எட்டுமணிநேர வேலை நாளை பெற்றெடுக்க போராடாமல் முடிய வில்லை. பின்னடைவுகள் ஏற்பட்டதெனி னும் அளவற்ற அடக்குமுறைக்கு இலக்கான போதிலும், இன்னுயிரை இழக்க — சிறை களில் வாட நேர்ந்த போதிலும் இவைகளி னால் தொழிலாளி வர்க்கப் போராட்டங்கள் புத்துயிர் பெற்றதேயொழிய சிதைவுறவில்லை

1886 மே 1 ந் திகதி அமெரிக்காவின் சிக் காகோ நகரில் எட்டு மணி நேர வேலை நாளைக் கோரி நடைபெற்ற பொது வேலை நிறுத்தம் தொழிலாளி வர்க்கச் சரித்திரத் தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது இவ் வேலை நிறுத்தம் அமெரிக்கத் தொழிலாளர் களினது மாத்திரமல்ல முழு உலகினதும் தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட் டமானது.

இன்று இம் மே போராட்டத்தை நினைவு கூராத நாடே இல்லை. முதலாளித்துவம் தொட்டு சோஷலிச நாடுகளிலும் வளர்ச்சி யுற்றது. தொட்டு வளர்முக நாடுகளிலும் நவீன தொழில் வளர்ச்சி தொட்டு பின் தங் கிய விவசாய நாடுகளிலும், பணக்காரர் தொட்டு ஏழை நாடுகளிலும், விடுதலை அடைந்ததும், அடையாததுமான எல்லா நாடுகளிலுமே இன்று மேதினம் நினைவு கூரப்படுகின்றது. முழு உலகிலுமுள்ள மொழி, மதம், நிறம் மற்றும் அரசியல் கருத்துக்களையுடைய பாடுபடும் மக்கள் மே தினத்தை நினைவு கூருகின்றனர். தொழிலா ளர்கள் மாத்திரமல்ல விவசாயிகள் வாலிபர் கள், மாதர்கள், மாணவர்கள், புத்துஜீவி கள் ஸ்தாபன ரீதியாகத் திரண்டு ஐக்கிய மாக நினைவுகூரும் நாள் மேதினமாகும். அன்று மேதினத்தை கம்யூனிஸ்ட்டுகள் உட் பட இடதுசாரிச் சக்திகளும் அவர்களின் தலைமையில் இயங்கும் தொழிற்சங்கங்களும் மாத்திரமே நினைவு கூறின. இன்று மே தினத்தை நினைவு கூராத தொழிற் சங்கமே இல்லையெனலாம். இன்று மேதினம் சர்வ தேசிய தினமாக மாத்திரமல்ல தேசிய தின மாகவும் கருதப்படுகின்றது. முதாலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தின் மூலமாக முனையெடுத்த மே தினம் இன்று முதலாளித்துவ வர்க்க அரசி யல் கட்சிகளாலும் கொண்டாடப்படுகின்றன

உழைக்கும் மக்களிடையில் மேதினம் எந் தளவுக்கு தாக்கம் ஏற்படுத்தியுள்ளதென் பதை உணர இததினத்தை முதலாளித்துவ

வர்க்கமும் கொண்டாட ஆரம்பித்துள்ளதிலி ருந்து வெளிச்சமாகின்றது. இதனுல் வெளி பாடு பெறுவது, முதலாளித்துவ வர்க்கத்தின் சாகஸமும், மானங்கெட்ட தன்மையுமேயா கும். எழுச்சியுறும் தொழிலாளி வர்க்கத்தின் முன்னே தமது வர்க்க சுபாவத்தை மூடி மறைத்திடவும் தொழிலாளி வர்க்கத்தை திசை திருப்பிடவும் முதலாளித்துவ வர்க்கம் மேற்கொண்டுள்ள கபட செய்கையே இது.

தொழிலாளி வர்க்கம் இன்று அநுபவிக்கும் ஒவ்வொரு உரிமையும் வரப்பிரசாதமும் போராடிப் பெற்றவையாகும். முதலாளி வர் கத்திஞல் தாஞக வழங்கப்பட்ட உரிமையோ வரப்பிரசாதமோ எதுவுமில்லே. எட்டு மணி நேர வேலே நாள் அவ்வாறு போராடிப் பெற்ற வெற்றியாகும். அந்த வெற்றியை நினைவு கூரும் நூற்றுண்டு விழா 1986 மே 1 ந் திகதி உலகப் பாட்டாளி வர்க்கத்தின ரால் கொண்டாடப் பட்டது.

பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகா ரத்தை தாம் கைப்பற்ற எடுத்த முதல் முயற்சியின் கௌரவம் பிரான்ஸின் பாரிஸ் நகரத் தொழிலாளருக்கே உரித்தாகும். ''1871 பாரிஸ் கம்யூன்'' என அழைக்கப் படும். தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்று எழுச்சி முறியடிக்கப்பட்டதுடன், முழு ஐரோப்பாவிலும் படுபயங்கர அடக்குமுறை நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதிலிருந்து தொழிலாளி வர்க்கம் தத்து வார்த்த விளப்பமும், அனுபவப் படிப்பினே யும், வர்க்க ரீதியாக பட்டை தீட்டப்பட்ட போர்க்குணமும் பெற்று சிலிர்த்துக் கொண் டது. பிற்காலத்தில் தொழிலாளி வர்க்கத் தின் வெற்றிகளுக்கு இதுவே ஆதாரமாகியது

1871 பாரிஸ் கம்யூனே பாட்டாளி வர்க் கத்தின் முதலாவது அரசியல் பள்ளி என்று வரலாற்றுப் பின்னணியிலிருந்து பாட்டாளி வர்க்க சரித்திரத்தை ஆராய்பவர்கள் குறிப் பிடுவதுண்டு. தோல்வி கண்டதால் பின்ன டைவுக்கும், அச்சத்திற்கும் இலக்கான தொழிலாளி வர்க்கத்தின் ஒரு சில பகுதி களே சரியான திசையில் வழிநடத்திச் செல்ல கார்ல் மார்க்ஸ் பிரடரிக் ஏங்கல்ஸ் போன் ருேர் மேற் கொண்ட பிரயத்தனம் தீர்க்க மான தாக்கங்களே ஏற்படுத்தின. எதிர் காலம் பாட்டாளி வர்க்கத்திற்கே உரித்தா னது என்று மார்க்ஸும் ஏங்கல்ஸும் செய்த நல்லெண்ணக் கணிப்பீடு மிகச் சரியானது. பிற்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகள் ஐரோப் பிய முதலாளித்துவத்தின் அபிலாஷைகளே யும், பிரயத்தனங்களேயும் முறியடித்துக் கொண்டு பாட்டாளி வர்க்க இயக்கம் மிக வேகமாக முன்னேறியது.

பலவித மாற்றங்கள் இருந்த போதிலும் பாட்டாளி வர்க்கத்தில் சர்வதேசிய உறவு சம் பந்தமான எழுச்சி மாத்திரமல்ல ஸ்தாபன ரீதியான அடித்தளமும் கட்டப்பட்டு வந்தது. மூலதனம் சர்வதேசிய வடிவம் எடுக்கும் பொழுது நிச்சயமாக உழைப்பும் சர்வதேசி வடிவம் அடையுமென்பது தர்க்க ரீதியான கூற்ருகும். எனவே முதலாளித்துவம் சர்வ தேசியம் ஆவதைப் போன்றே பாட்டாளி வர் கமும் இயல்பாகவே சர்வதேசியமாகின்றது. இன்று உலகு பூராவிலுமுள்ள பாட்டாளி வர்க்க மக்கள் உலகு தொழிற் சங்கச்சம்மே ளனத்தில் ஸ்தாபன ரீதியாக சர்வதேசிய உறவை அமைத்துள்ளது. இவ் வரலாற்றுப் போக்கின் செயற்பாட்டிலேயாகும்.

பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஸ்தாப னம் கம்யூனிஸ்ட் கட்சி ஆவதைப் போன்று சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் இயக்கம் சர்வதேசிய கம்யூனிஸ் இயக்கமாகும் பாட்டாளி வர்க்கம், கம்யூனிஸ்ட்லீகிலிருந்து பாரிஸ் கம்யூனூடாக முதலாவது, இரண் டாவது சர்வதேசியத்துடன் மூன்ருவது சர்வ தேசிய (கம்யூனிஸ்ட்)த்தின் பாதையில் சென்று 8கோடி அங்கத்தவர்களேக் கொண்ட நூற்றுக்கு அதிகமான கம்யூனிஸ்ட் கட்சி களேயும் சேர்த்து சர்வதேசிய கம்யூனிஸ இயக்கம் இன்று அணிதிரண்டுள்ளது. அத்து டன் உலகில் மூன்றில் ஒரு பகுதியின் அர சியல் அதிகாரமும் கம்யூனிஸ்டுகளின் கையி லுள்ளது. இன்று பாட்டாளி வர்க்க அரசி யல் இயக்கம் அல்லது சர்வதேசிய கம்யூ னிஸ்ட் இயக்கம் உலகில் முன்னேறிய பிர சித்திபெற்ற நிர்ணயமான அரசியல் சக்தி யாகும்.

உலக முதலாளித்துவத்தின் தோளோடு தோள் மோதும் வலிமை கொண்டதாக உலக சோஷலிஸ அமைப்பை நிர்மாணித்திருப்பது இப் பட்டாளி வர்க்க அரசியல் இயக்கமாகும்.

பாட்டாளி வர்க்கம் தொழிற்சங்க ரீதியாக அல்லது, தான் அணி திரண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் ரீதியாக உலகில் எங்கு கூடினாலும், அங்கே சர்வதேசிய தோழமை வெளிப்பாடு பெறும் மகாநாடு இடம் பெறுவது, கடந்த நூற்றிநாற்பது ஆண்டுகளாக கட்டி எழுப்பப்பட்ட வளர்ச்சி பெற்ற சர்வதேசிய உணர்வுகளினதும், உறவுகளினதும் பிரதி பலனேயாகும்.

உலக கம்யூனிஸ இயக்கத்தின் இரண்டாவது சர்வ தேசியத்தின் முதலாவது மகாநாடு 1889 ல் பாரிஸ் நகரில் இடம் பெற்றது. அவ்வமயம் அதன் நிகழ்ச்சி நிரலில் முதல் அம்சமானது 1886 ல் நடைபெற்ற மே போராட்டமாகும். அதிலே தான் 1890 மே 1ந் திகதி முதல் இத்தினத்தை சர்வதேசிய தொழிலாளி வர்க்க தினமாக நினைவு கூர தீர்மானிக்கப்பட்டது. அதன் பேரிலேயே ஒவ்வொரு மே முதலாந் திகதியும் சர்வதேசிய தொழிலாளி வர்க்க தினமாகக் நினைவு கூரப்படுகின்றது.

இந்த வரலாற்றுத் தீர்மானம் பின்வருமாறு:

''ஒப்புக் கொள்ளப்பட்டதன் பிரகாரம், தீர்மானிக்கப்படுகின்ற குறிப்பிட்ட தினத்தில், அனைத்து நாடுகளிலும் நகரங்களிலும் எழுச்சி இயக்கத்தின் மூலமாக வேலை நாளை எட்டு மணி நேர நாளாக சட்ட ரீதியாக குறைக்க வேண்டுமென தொழிலாளர் ஆட்சியாளர்களை வலியுறுத்த வேண்டும்.

''1888 டிசம்பரில் சாந்தலுயிஸில் நடைபெற்ற மகாநாட்டில் அமெரிக்கத் தொழிலாளரின் தொழிற்சங்கச் சம்மேளனம் 1890 மே 1 ந் திகதியில் இவ்வாறான எழுச்சி இயக்கத்தை நடத்தத் தீர்மானித்துள்ளது. எனவே இவ் இயக்கத்தை சர்வதேசிய மட்டத்தில் நடத்த இத்தினம் பொருத்தமானதென தீர்மானிக்கப்படுகின்றது.

''பல்வேறு நாடுகளினதும் தொழிலாளர்கள் அவ்வவ் நாடுகளில் நிலவும் சூழ்நிலைகள், கட்டுப்பாடுகளுக்கமைய இந் நடவடிக்கையில் பங்குபற்றுவார்கள்''.

இத் தீர்மானத்தின் பிரகாரம் சர்வதேசிய தொழிலாளர் தினம் 1890 மே 1 ந் திகதி ஆரம்பமாகியது. இத்தினம் இன்று ''மே தினமாக'' நடைமுறையாகி வருகின்றது. ஆரம்ப கட்டத்தில் இத் திட்டம் அமுல் படுத்தப் படுகையில் மே 1 ந் திகதி வேலை செய்யும் நாளாக இருக்கும் நாடுகளில், அத் தொழிலாளர்கள் இத் தினத்தில் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

ஜெர்மனியில் சமூக ஜனநாயகக் கட்சியின் வேண்டுதலின் பேரில் மேதினம் வேலை ஒய்ந்த மாலை வேளையில் நினைவு கூரப்பட்டது பிரித்தானியாவில் இத் தினம் மே மாத முதலாவது ஞாயிறில் நினைவு கூரப்பட்டது. சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் சிருஷ்டியாளரான பிரடரிக் ஏங்கல்ஸ் லண்டன் நகரில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் கலந்து கொண்டுள்ளார். அதில் மூன்று இலட்சம் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். உண்மையான சர்வதேசிய அம்சம் வெளிப்படும் வகையில் பிரித்தானிய மேதினக் கூட்டத்தின் பேச்சாளர்களாக ஜெர்மன், பிரான்ஸ், ரஷ்யன் தலைவர்கள் பங்கு பற்றினர். ''லண்டனின் நாம் பெற்ற முதலாவது மகத்தான வெற்றி'' யென்று பிரடரிக் ஏங்கல்ஸ் குறிப்பிட்டார். பிரான்ஸ், ஆஸ்திரியா, ஹங்கேரியா ஆகிய நாடுகளில் அன்றையதினம் வேலை நிறுத்தம் செய்து தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தினர். முழு ஐரோப்பாவிலும் மேதின ஊர்வலம் கூட்டம், வேலை நிறுத்தங்கள் நடத்தப்பட்டன 1891 ல் பிரான்ஸில், நடைபெற்ற மேதின ஊர்வலத்தின் போது பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் பத்து பேர் இறந்தனர்.

1893 ல் நடைபெற்ற 2 வது சர்வதேசியத்தின் 3வது மகாநாட்டில் மேதினம் எட்டு மணி நேர வேலை நாளுக்காக மாத்திரமன்றி சமூக மாற்றங்களுக்கான எழுச்சி தினமாகவும் நினைவு கூரப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

1870ல் இரண்டாவது பாதியில் தொழிலாளி வர்க்க இயக்கம் புதிய கட்டத்தில் பிரவேசித்தது. அதுகால வரைக்கும் தொழிலாளர் தாம் சகிக்க முடியாத நிலைமைகளுக்கு எதிராக மாத்திரமே வேலை நிறுத்தங்களை மேற் கொண்டனர். அத்துடன் காலப்போக்கில் வேலை நிறுத்தங்கள் சாதாரண நிகழ்வுகளாக மாறின. இவைகள் தொடர்ந்து நடைபெறுவதும், பல்வேறு துறைகளில் பரவுவதுமான விசேஷ அம்சத்தைப் பெற்றன.

1875ல் அமெரிக்காவின் போல்வரில் எட்டு வாரங்களாக நடைபெற்ற புடவைத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்தில் 15 ஆயிரம்பேர் கலந்து கொண்டனர். அதே ஆண்டில் அமெரிக்காவின் பென்ஸில்வேனியாவின் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம் 7 மாதங்களாக நடைபெற்றது. இக்காலப் பகுதியில் இலட்சக் கணக்கானோர் கலந்து கொண்ட வேலை நிறுத்தங்கள் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன் தோறும் பரவின.

அமெரிக்காவில் வெடித்த வேலை நிறுத்தங்களின் போது முதலாளிகளின் கொடிய அடியாள் ஏவல் நடவடிக்கைகளுக்கும், பயங்கர அடாதுடித்தனங்களுக்கும், ஆயுதப்படைகளின் அடக்குமுறைகளுக்கும் தொழிலாளர்கள் இலக்காகினர். 1875 ல் பென்சில் வேனியாவில் நடைபெற்ற சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம், அடியாட்களினுல் சில தொழிலாளர்கள் கொல்லப்பட்டு அடக்கப்பட்டது. இவ் வேலை நிறுத்தத்தை வழி நடத்திய 19 தலைவர்களுக்கும் எதிராகபொய் வழக்கு சோடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அமெரிக்கத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் அழிக்க முடியாத நிகழ்வு 1886 மே போராட்டமாகும். இப்போராட்ட தினம் சர்வதேச தொழிலாளர் தினமாக அல்லது மேதின மாத தற்போது நினைவு கூரப்படுகின்றது.

1886 ல் இப்போராட்டம் அமெரிக்காவின் சென் பிரானஸிஸ்கோ வரையில் பரவி அவ் வருடம் பூராவும் வேலை நிறுத்தம், ஊர்வலங்கள் தொடர்ந்து நடைபெற்ற போராட்ட ஆண்டாகியது. இதற்கு தூண்டுதலாகவிருந்த முக்கிய கோரிக்கை எட்டு மணி நேர வேலை நாளாகும். இப்போராட்ட அலைகளின் மத்திய நிலையம் சிக்காகோ நகரமானது. 1886 மே 1 ந் திகதி சிக்காகோ நகர வீதிகள் வேலை நிறுத்தத் தொழிலாளர்கள் 40 ஆயிரம் பேரால் நிறைந்து வழிந்தது. அக்கால கட்டத்தில் நடைபெற்ற 40 ஆயிரம் பேர் கொண்ட ஊர்வலம் தொழிலாளி வர்க்கத்தை கவர்ந்திழுக்கும். பேராச்சரியத்திற்குரிய காட்சியாகும். ஊர்வலம் உற்சாகமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன் மிகவும் அமைதியாகவும் நடைபெற்றது. சிக்காகோ நகர வேலை நிறுத்தக்காரர்கள் ஊர்வலங்களை மே யில் 2—3 நாட்கள் தொடர்ந்து நடத்தினர். சிக்காகோ நகர் மெக்கோமிக் (Maccormick) தொழிற்சாலையில் வேலை நிறுத்தத்தை சீர்குலைக்கு முகமாக அதன் உடமையாளர்கள் எடுத்த முயற்சியின்போது கருங்காலிகளுக்கும் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. மே 3 ந் திகதி இவ்வாறு ஏற்பட்ட மோதலை காரணமாக வைத்து பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஆறு தொழிலாளர்கள் கொலையுண்டதுடன் 50 பேரளவில் காயப்பட்டனர்.

மே 4ந் திகதி இத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மாபெரும் கூட்டம் நடத்தப்பட்டது. இக் கூட்டம் சிக்காகோ நகரின் மத்தியிலுள்ள சதுக்கத்தில் நடைபெற்றது. இதில் சிக்காகோ நகரின் வேலைநிறுத்தத்தலைவர்கள் உரையாற்றினுர்கள். உடமையாளர்களுக்கு எதிரான போராட்டம் பொலிஸாருக்கு எதிராக திசைதிரும்பியது. அரசு தொடர்ந்தும் கொடூரமான நடவடிக்கை இறங்க இடமுண்டு என்பதை உணர்த்திய தலைவர்கள் போராட்டத்தை உறுதியாகவும், அமைதியாகவும், அணி பிசகாமலும் முன்னெடுத்துச் செல்லுமாறு தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுத்தனர்.

கூட்டம் முடிவதற்கு சற்று முன்னர், பொலிசார் அங்கு பிரவேசித்தனர். அவ் வமயம் இன்ந் தெரியாத நபரொவருர்

எறிந்த குண்டினுல் 5 பேர் காயமடைந்த னர். ஒருவர் கொல்லப்பட்டார். மரணத்திற் குள்ளானவர் பொலிஸ் அதிகாரி ஒருவர். அச்சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸார் கேள்வி கேட்பாரின்றி தொழிலாளர் மீது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கத் துவங்கினர். பின்னர் பொலிஸார் அடக்குமுறைக் கைங் கர்யத்தை முழு அமெரிக்காவிலும் கட்டவிழ்த்து விட்டனர். வேலை நிறுத்தக் காரரை கண்ட இடத்தில் அடித்து உதைக் கவும், தொழிற்சங்கக் காரியாலயங்களை உடைத்து நொறுக்கவும் தொடங்கினர். அதிலிருந்து இப்போராட்டம் அரசுக்கும், தொழிலாளருக்கும் இடையிலான ஒன்ருக மாற்றமெடுத்தது.

குண்டு வீசப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து சிக்காகோ நகரத் தொழிலாளர் தலைவர்கள் 8 பேரை கொலைக் குற்றஞ்சாட்டி நீதி மன்றம் ஏறினுர்கள்.

அவர்களின் பெயர்கள் பின் வருமாறு,

1. எல்பட் ஆர். பார்ஸன்ஸ்
2. ஒகஸ்ட்ஸ் ஸ்பய்ஸ்
3. சாமுவேல் ஜே. பீல்டன்
4. இயுஜின் ஸ்வாப்
5. எடொல்ப் பிஸர்
6. ஜோஜ் எங்கல்
7. லுயிஸ் லிங்
8. ஒஸ்கர் நிபே

சாமுவேல் பீல்டன் தவிர்ந்த மற்றும் அனைவரும் குண்டு வீசும்போது கூட்டத்தில் இருக்கவில்லை என்பதை தெரிந்தும் எல்லா ருக்கும் எதிராக கொலைக்குற்றம் சாட்டப் பட்டது. விசாரணையின்போது தொழிலாளர் எதிராளிகள் ஜுரிகளாக தெரிவு செய்தது தண்டனை வழங்குவதற்காக பூர்வாங்க நடவடிக்கையாகியது. முக்கிய சாட்சிகளுக்கு இலஞ்சம் கொடுக்கப்பட்டதும் பின்னர் தெரியவந்தது.

எல்பட் பார்ஸன்ஸ் கைது செய்யமுடியாது தப்பினுலும், பின்னர் நேரடியாக நீதி மன்றத்தில் ஆஜராஞர். பிரதிவாதிகள் வழக்கு விசாரணையின்போது சுய கௌர வத்தை விட்டுக் கொடுக்காமலும், துணிச்ச லுடனும் தோன்றினுர்கள். அவர்கள் தாம் நிரபராதிகள் என்று வாதாடியதுடன் அரசையும், பொலிஸாரையும் கடுமையாக குற்றஞ் சாட்டினுர்கள்.

ஒஸ்கர் நிபே 15 வருட சிறைத் தண்டனை பெற்றதுடன், ஏனைய எழுவரும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டனர். தூக்கிலிடும் தினம் நெருங்கும் வரையிலும் நீதிமன்றத் தின் தீர்ப்பை எதிர்த்து பிரமாண்டமான எதிர்ப்பியக்கம் நாடு பூராவும் நடத்தப்பட் பட்டது. இதே போன்று எதிர்ப்பு தெரிவிக் கும் மகஜர்கள் அந்நிய நாடுகளிலிருந்து பெருவாரியாக வந்து குவிந்தன. தண்ட னையை தளர்த்துமாறு கோரி சமூகத்தின் பல்வேறு தரத்தினரும் குரல் எழுப்பினர். இத் தாக்கத்தின் பயனுக சாமுவேல் பீல்டன், இயுஜின் ஸ்வாப் ஆகியோரின் மரண தண்டனையை ஆயுள்காலச் சிறைத் தண்டனையாக குறைத்திட இலினொய்ஸ் ஆளுநருக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

1887 நவம்பர் 10ந் திகதி, அதாவது கொலைத்தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்தினம் லுயிஸ் லீன் தற்கொலை செய்து கொண்டார்.

1887 நவம்பர் 10ந் திகதி எல்பட் பாஸன்ஸ், ஒகஸ்ட்ஸ்பங்ஸ், ஜோர்ஜ் எங்கல் எடல்ப் பிஸர் ஆகிய நான்கு தொழிலாளர் தலைவர்கள் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்ட னர். அவர்கள் தொழிலாளர் வர்க்க விமோசனத்தின் வீரர்களாக துணிச்சலுடன் மரணத்தை தழுவிக் கொண்டனர். மரணத்தை தழுவுவதற்கு சற்று முன்னர் ஒகஸ்ட் ஸ்பய்ஸ் இறுதியாக பின்வருமாறு கூறினுர்.

''எமது வார்த்தைகளை விட எமது மௌனத்திற்கு வலிமை ஏற்படும் காலம் வெகு விரைவில் உதயமாகும்''

1893ல் அதாவது ஏழாண்டுகளுக்குப் பிறகு, சிறைத்தண்டனையை அநுபவித்துக் கொண்டிருந்த ஏனைய மூவரையும், அதாவது சாமுவேல் பீல்டன், இயூஜின் ஸ்வாப், ஒஸ்கர் நிபே ஆகியோர் விடுதலை

செய்யப்பட்டனர். இக்காலத்தில் இலினொய்ஸ் பிரதேச புதிய ஆளுநராக ஜோன் பி. எல்க் ஹெஸ்சி என்னும் நபர் நியமனமானார். பின்னர் அவர் வெளியிட்ட தகவற்களில் குறிப்பிட்ட வழக்கின் விசாரணைகள் பக்கச் சார்பாக நடத்தப்பட்டுள்ளதென்றும், தூக்கிலிடப்பட்டவர்கள் உட்பட எட்டு பேருக்கும் எதிராக குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லையென்றும், பக்கச் சார்பான ஜூரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனரென்றும், நீதியாக வழக்கு விசாரிக்கப்படவில்லையென்றும், சாட்சிகளுக்கு இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதென்றும் கூறப்பட்டிருந்தன.

எனவே, எட்டு மணி நேர வேலை நாள் கோரி 1886 மே மாதம் அமெரிக்காவின் சிக்காகோ நகரில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் 6 பேர் கொல்லப்பட்டதுடன், 4 பேர் தூக்கிலிடப்பட்டு மரணதண்டனை பெற்றனர்; ஒருவர் தூக்கிலிடப்படு முன்னர் தற்கொலை செய்து கொண்டார்; மூவர் ஏழாண்டு சிறைத்தண்டனை அநுபவித்தனர். நூற்றுக் கணக்கில் சூட்டுக்காயங்களுக்கு ஆளானதுடன் ஆயிரக்கணக்கில் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்கானவர்களின் தொகை அளவில்லை. இன்று எட்டு மணி நேர வேலை நாளை அநுபவித்து வரும் உலகு பூராவுமுள்ள தொழிலாளி வர்க்க மக்கள் தமது இன்னுயிர்களை தியாகம் செய்த அந்த வீர அமெரிக்கத் தொழிலாளர் தலைவர்களை நினைவு கூருவதையும், அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதையும் தமது வர்க்கக் கடமையாகக் கருதி ஒவ்வொரு வருடமும் மே முதலாந்திகதி ஊர்வலம் நடத்துகின்றனர்.

1886 மே போராட்டம் கொலைகாரத்தனமாக முடிவுற்றாலும் அமெரிக்கத் தொழிலாளர்களின் போராட்ட அலைகள் ஓயாது தொடர்ந்து வீசின. 1887 ல் அமெரிக்காவின் கிழக்குப் பிரதேசத்தில் புகையிரத வேலை நிறுத்தம் வெடித்தது. அதை நசுக்க இராணுவத்தை அரசு பாவிக்க நேர்ந்தது. ஆகவே அதில் அதிகமானோர் கொலையுண்டனர்.

1880 களில் அமெரிக்காவில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களில் நூற்றுக்கு ஐம்பது வீதம் மாத்திரமே தோல்வி கண்டனர். 1890 களில் நூற்றுக்கு எழுபத்து ஐந்து வீதம் தோல்வி கண்டன. சில வேலை நிறுத்தங்களில் முழு வெற்றிகாண முடிந்ததெனினும், வேறு சிலவற்றில் சமரஸம் காண நேரிட்டது. 1886 ல் அமெரிக்காவில் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட தொகையினர் 350,000 பேர். அதில் 185,000 பேர்மட்டிலான தொழிலாளர்கள் எட்டு மணி நேர வேலை நாள் கோரிக்கையை வென்றனர். சிலரின் 12-14 மணி நேர வேலை நேரம் 9–10 மணித்தியாலங்களாக குறைக்கப்பட்டது.

அகில ரீதியில், 1886ன் மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டம் சர்வதேசிய தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் வெற்றி ஸ்தம்பமாகக் கருதப்படுகிறது. ஏனெனில், எட்டு மணிநேர வேலை நாள் கோரிக்கையை முழு உலகும் வென்றெடுக்க ஆரம்பம் இம் மே போராட்டமேயாகும். இதன் தாக்கம் சர்வதேசிய வடிவமெடுத்தது. அதுமாத்திரமல்ல, பாட்டாளி வர்க்கத் தோழமையை தொழிலாளி வர்க்கத்திக்குப் படிப்பித்ததும் 1688 ம் மே போராட்டமேயாகும்.

---

## நீராகாரம்

தினமும் நிறையத் தண்ணீர் அருந்துங்கள். ஆறு கிளாஸ் வரை அருந்துங்கள். ‘பச்சைத் தண்ணீர்’ கூடாது; அது தொற்று நோய்களைப் பரப்பும். எனவே, கொதித்து ஆறிய நீரே நல்லது. எலுமிச்சஞ்சாறு, தோடஞ்சாறு பாஷன் பழச்சாறு போன்ற பழரசங்கள் அருந்துவதும் நல்லது.

தினமும் ஒரு பைந் பாலாவது குடியுங்கள்.

போதிய நீராகாரம் எடுப்பது உங்கள் உடலைக் குளிர்ச்சயாகவும், மலர்ச்சியாகவும் வைத்திருக்கும். அத்துடன் மலச்சிக்கல் ஏற்படாமல் இருக்கவும் உதவும். சலக்கடுப்புப் போன்ற நோய்கள் ஏற்படுவதையும் தடுக்கும்.

நன்றி: — டொக்டர். எம். கே. முருகானந்தனின் ‘‘தாயாகப் போகும் உங்களுக்கு’’

# ஒரு கடலைப்போல் மீண்டும் எழுவேன்

எனது நிழல்களில் கூட
சிந்தனையின் சூடு பறந்து விடலாமாம்......
அதை அழிப்பதற்காகப்
பொலிஸ் என்னைப் பின்தொடர்கிறது......

நான் ஆகாயத்தை
கள்ளங் கபடில்லாமல் நோக்கும்பொழுதும்
அவர்கள்
என் கண்களை அளந்து பார்க்கிறார்கள்.

என் புரட்சிப்பாடலின் பல்லவியை
என் பாதச்சுவடுகளிலே
பிடித்து விடவேண்டுமாம்
அதற்காக
என் கால் தூசியையும்
ஆராய்ச்சி செய்ய எடுத்து அனுப்புகிறார்கள்.

உங்களுக்கும் எனக்கும்
உணவளிக்கும்
மனித ஞான விளக்குகளையே
அவர்கள் அழித்துவிட முயல்கிறார்கள்.

நான் பார்ப்பதற்கே
அருவருக்கும் அழுக்குகளை
அகற்றுவதற்கு பதிலாக
என் விழிகளையே
தோண்ட முயல்கிறார்கள்.

நான் முத்தமிடும் குழந்தைகளின்
கன்னத்தில்படிந்த ஈரத்தைத்துடைப்பதற்காக
அவர்கள் கத்தியால் கன்னங்களைச்
சுரண்டுகிறார்கள்.

என்னுடைய குரல் குற்றமுடையது......
எனது சிந்தனை அராஜகமானது......

ஏனெனில்
அவர்களுடைய பாடலுக்கு
நான் கைத்தாளம் போடவில்லை.
அவர்களை எனது தோளில் சுமந்து
செல்லவில்லை
என்னைச் சதிகாரன் என்றழைப்பதற்கு
சட்டப்புத்தகம் அவர்களுக்கு
ஆதாரமாய் இருக்கிறது.
எல்லா மதங்களும்
பொதுவான மூடத்தனத்தை
மறைத்து வைத்திருப்பது போல
அவர்கள் தங்கள் வர்க்க நலன்களை
எல்லாச் சட்டங்களின்
புனித ஒப்புதலின் கீழ்
புதைத்து விடுகிறார்கள்.
ஆனால் அவர்களுடைய
மதத்திற்கோ சட்டத்திற்கோ இசைவாக
ஒரு ராகம் கூட
என் தொண்டைக் குழியிலிருந்து வராது.

என் தேசத்தை விடுதலை செய்வதற்காக.
என் ஒவ்வொரு துளி ரத்தத்தையும்
விதையாக விதைக்கிறேன்
நானொரு கைதியாக இருக்கலாம்
ஆனால் அடிமையல்ல!
நான் தாக்கப்பட்டு
நொருங்கிச் சிதறிய போதும்
ஒரு கடலலை போல்
மீண்டும் மீண்டும்
பறப்பேன்!

புரட்சிக் கவிஞர் சோபண்டராஜீ
ஹைதராபாத் சிறையிலிருந்தபோது
எழுதியது

நன்றி:- மனஓசை

## உடல் உறவு

நீங்கள் அறியத் துடிக்கும்' ஆனால் வெளிப்படையாகக் கேட்கத் தயங்கும் முக்கிய விடயம் உடல் உறவு பற்றியதாயிருக்கலாம்.

பொதுவாக உடல் உறவு தவிர்க்கப்பட வேண்டியதல்ல. ஆயினும் கடைசி ஆறு வாரங்களில், உங்கள் பால் உறுப்புக்களில் நோய்க்கிருமிகள் தொற்றுவதைத் தடுக்க உடல் உறவு தவிர்க்கப்படுவது நல்லது.

அடிக்கடி கர்ப்பச்சிதைவு ஏற்படும் பெண்களும், அல்லது கர்ப்பச்சிதைவு ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுள்ள பெண்களும், கர்ப்பம் தரித்த ஆரம்ப பன்னிரண்டு வாரங்களுக்கு உடல் உறவைத் தவிர்ப்பது நன்மை பயக்கக்கூடும்.

நன்றி: — டொக்டர். எம். கே. முருகானந்தனின் ''தாயாகப்போகும் உங்களுக்கு''

# ஒளி பிறந்திட

— செ. வாமதேவன்

மூச்செடுக்கும்படி
மூளையிடம் சொல்லிப்பாருங்கள்
இங்கு நாற்றமெடுப்பது சாக்கடையல்ல
சுயநலப் புரையேறிவிட்ட
சமுதாயம் என்று புரியவரும்.
அறிவுக்குத் திறப்புச் செய்கின்ற விழிகளே!
நாங்கள் கேட்பது
எங்கள் அவலத்திற்கொரு பூட்டு,
நாங்கள்
இருளின் தத்துப்பிள்ளைகள்.
கண்ணைப் படைத்த பிரமன் அதற்கொரு
கதவுவைக்க மறந்துவிட்டான்
தப்புச் செய்தவன் தலைமறைந்தபோது
தண்டனை எங்களைக் கைதுசெய்துவிட்டது.
விமோசனங் கிடைத்திருக்கும்
விதி எங்களுக்கொரு நீதிமன்றம் கட்டியிருந்தால்
வாழச்சொல்லி எங்களுக்கும்
வரமொன்று கிடைத்திருக்கும்.
காட்சிக்குழந்தைகளைப் பிரசவிக்க முடியாமல்
கண்களுக்குமட்டும் கருத்தடை.
எங்கள் விழிப்புக்கள் தினமும்
மூடிய கல்லறையுள் முடங்கிப்போகின்றனவே.
இருளிலே ஒருநாள் இயங்கிப்பாருங்கள்,
பகலிலே எங்களது பரிதாபம் புரியும்.
தலையெழுத்திலே பழியைப்போட்டு
நீங்கள் தப்பிக்கொள்ளவேண்டாம்.
ஏனென்றால்......
நகரம் நரகமாவது தன்னெழுத்துக் குழப்பித்தான்
சுவீகாரப் பார்வைகளே!
எங்கள் காதுத் தொட்டில்கள்
உங்களுக்காகவே காத்துக்கிடக்கின்றன.
நீங்கள் எங்களை ஒதுக்கமாட்டீர்கள்
ஏனென்றால்......
கண்ணில்லை யென்பதற்காகக்
காதலை நீங்கள் ஒதுக்கவில்லையே.
அறிவுக்குத் திறப்புச் செய்கின்ற விழிகளே
நாங்கள் கேட்பது
எங்கள் அவலத்திற்கொரு பூட்டு.

# உயிரினவியல் நிர்ணயமும் பெண்களின் நிலையும்

**பால்** சமமின்மையை நியாயப்படுத்துவதற்காக பொதுவான மட்டத்திலும் விஞ்ஞான மட்டத்திலும் உயிரினவியலின் அடிப்படையில் பல நியாய வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. இநத நூற்றாண்டின் ஆரம்பங்களில் பால் சமமின்மையை மட்டுமன்றி இனபேதமையும் நியாயப்படுத்த உயிரினவியலடிப்படையிலான சில நியாய வாதங்கள் முன் வைக்கப்பட்டன. ஆயினும், அவை ஈற்றில் விஞ்ஞான ரீதியற்றனவாகவும் அரசியல் ரீதியில் பிரதிகூலமானவையாகவும் எடுத்துக் காட்டப்பட்டன. ஆண, பெண் பாலரிடையான வேறுபாடுகளை நாம் எல்லோரும் காண்கின்றோம். இருப்பினும் இத்துணை வேறுபாடுகள சமுதாயத்தில் நிலவும் ஆண் மேலாதிக்கத்திற்கும் அதிகார உறவுமுறைக்குமுரிய நியாய வாதங்களாகக் கொளளப்படல் கூடுமோ என்பது ஆய்வுக்குரிய விடயமாகும். இநதவேறுபாடுகள் பரமபரையலகுகளாகக் காவப்பட்டு இயற்கைத் தேர்வினூடு மற்றைய சநததிகளிலும் பேணபபடுவதாக இவ்வாதம் மேலும் கூறுகிறது.

இவ்வாதங்கள் உடலமைப்பியல் அடிப்படையில் எடுக்கப்பட்டு நடத்தைக் கோலங்களை விளக்கவும் பயனபடுத்தபபடுகின்றன. ஆகவே, அடிப்படையிலான பால் வேறுபாட்டையும், நடத்தைக் கோலங்களிலும் சமூக அமைப்பிலும் அது கொண்டிருக்கும் செல்வாக்கினையும் ஆராய்வது அவசியமாகின்றது.

பால் **வேறுபாடு — (Sexual dimorptism)**

பால் வேறுபாடு ஆணை பலசாலியாகவும், உயரமானவனாகவும, பெரிய உருவம் பொருந்தியவனாகவும், அதிக தசைத் திணிவும், குறுகலான இடுப்பையும் கொண்டவராகக் காடடும் அதே வேளை பெண்ணை சிறிய, மெலிந்த, அகன்ற இடுப்பைக் கொண்ட மிகையான கொழுப்பிழையங்களை (குறிப்பாக மார்பகத்திலும், பிட்டபபாகததிலும்) கொண்டவர்களாகக் காட்டுகிறது. இவ்வமைப்பு பௌதீகக் ரீதியான நிர்ணயக்காரணிகளாக மட்டுமன்றி நுண்ணறிவு, உணர்வு ரீதியான செயற்பாடுகளையும் நிர்ணயிப்பன போலவும் கொள்ளபபடுகின்றன. எமது சமூக அமைப்பிலும் பண்பாட்டியல் பாரம்பரியத்திலும் ஆண்களுக்குக் கொடுக்கப்படும் ஸ்தானம் உடலமைப்பியல் எண்ணக்கருவில் அடிப்படையிலேயே வளர்க்கப்பட்டுள்ளது.

ஆண், பெண் பாலரிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றனவா? ஆம் நிச்சயமாக வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவையே துணைப்பாலியல்புகள் என வழங்கப்படுகின்றன. அதிலும் சில அளவுப் பரிமாணங்களும் வேறுபடுகின்றன. ஆனால், இவை அளவு வேறுபாடால் அன்றி பால்வேறுபாட்டினாலேயே எற்படுகின்றன. உதாரணமாக இடுப்பு, மணிக்கட்டு போன்ற இடங்களிலிருக்கும் அளவு வேறுபாடுகளைக் குறிபபிடலாம். விஞ்ஞான ரீதியாக அணுகுமிடத்து இவ் வேறுபாடுகள் பற்றிய ஒபபியல் ஆய்வுகள் எம்மையொத்த மனிதனல்லாத உயர் முள்ளந்தண்டு விலங்குகளுடன் (பிறைமேற்றுகள்) மேற்கொள்ளப்படுகின்றன இதனடிப்படையில் நோக்குமிடதது மனிதரிடையே காணப்படும் வேறுபாடு மிகச்சிறியதாகும். இப்பால் வேறுபாடுகள் அமைப்பியல் அடிப்படை (Organising Principle) யாக கொள்ளப்படும் உயிரிகளில் இவை கணிசமானதாகக் காணப்படுகிறது. உதாரணமாக கொரில்லா, ஹங்குட்டான், பபூஸ். இத்தகைய சிறிய வேறுபாடு மனிதனில் மட்டுமல்லாது கிபன் போன்ற பிறை மேற்றுகளிலும் காணப்படுகின்றன. சிம்பான்சியிலும பால்வேறு குறிப்பிடக்கூடியளவுக்கு இல்லை. அதிநுட்ப மானுடப் பெண்ணில காணப்படும் அகன்ற இடுப்பென்பு குழநதை தாங்குவதற்கான ஒரு இசைவாக்கமாகும்.

சமூக அமைப்பில் வேறுபாட்டியலின் பங்கை எடுத்துக்காட்டுவதற்கு இவ்வேறுபாட்டியல் மாறிகளாக, சில தெரிவுசெய்யப்பட்ட பிறைமேற்றுகளிலும், விலஙகுகளிலும் கூட்ட சேர்க்கை (Organisation of troops) தலை

மைத்துவம், மேலாதிக்க ஒழுங்கு பெண் நுகர்வு போன்றவற்றை எடுத்துக்காட்டுகிறார்கள். மேற்படி இயல்புகள் அவற்றின் உருவ அளவிலேயே நிர்ணயிக்கப்படுவதாக இவர்கள் கருதுகிறார்கள். இவ்வாறு பெரிய அளவை உடையதான கூட்ட தலைமைத்துவம் கூட்டப்பெயர்ச்சிகளை நிர்ணயிப்பனவாகவும் மற்றைய ஆண்களுக்கு மேலாதிக்கம் உடையவைகளாகவும், பெண் உறுப்பினர்களையும் குட்டிகளையும் பாதுகாப்பவையாகவும் இருக்கின்றன. அத்துடன் இவற்றின் பெண்ணுணர்வுப் புணர்ச்சியின் காரணமாக அங்கு பெரிய விலங்குகளைக் கொண்ட ஒரு சந்ததி உருவாதலும் சாத்தியமாவதாக இவர்கள் கருதுகிறார்கள்.

மானுட சமூக அமைப்பில் ஒப்பாய்வுக்கு (Comparative studies) இப்படிப்பட்ட தெரிசெய்யப்பட்ட விலங்குக் கூட்டங்கள் மட்டுமன்றி பரந்த அளவிலான பிறைமேற்றுக் கூட்டங்களில் சமூக அமைப்பினை ஆராய்தல் அவசியம். எடுத்துக் கொள்ளப்பட்ட எண்ணிக்கையே எமக்குத் திருப்தியளிப்பதாக இல்லை. அத்துடன் நடத்தைக் கோலமானது இனங்களுக்கிடையேயும் இனத்தினுள்ளேயும் குறிப்பிடக்கூடியவாறு வேறுபடுகின்றன. சமூக உயிரியலாளர்களால் முன்வைக்கப்படும் ஆண்மைத்தன்மை எந்தவொரு தனி இனத்திலுனும் முழுமையாக வெளிக்காட்டப்படவில்லை. மனிதனல்லாத பிறைமேற்றுக்கள் தனிமையில் ஒரு புணரியுடன், ஒரு ஆண் அல்லது ஆண்களின் கூட்டமாக வாழ்பவை ஆகவே சமூக பாலியல் தொடர்பான விடயங்களில் மேலோட்டமான ஒப்புநோக்கு பிழையான முடிவுகளுக்கே இட்டுச் செல்லும். சில பபூன போன்ற பிறைமேற்றுக்களில் வேறுபாடு அவற்றின் தலைமைத்துவ நடத்தைகளுடன் நேரடியாக தொடர்பைக் காட்டுகின்றன. இங்கு முதன்மையான ஆண் காப்புத்தொழிலையும் பிரதேச நிர்ணயத்தையும் செய்வதுடன் இவை பொல்லாத நடத்தையையும் காட்டுகின்றன ஆனல் கொரில்லா, சிம்பன்சி, ஹங்குட்டான் போன்ற பாரிய ஒப்புகளில் இந்த நிலை துலக்கமாக இல்லை. கொரிலாக்களில் பாரிய வேறுபாடுகளை காட்டுகிறது. இவற்றில் வெள்ளி பிற்பாகத்தைக் கொண்ட ஆண்கள் பெரியனவாகவும் தலைமைத்துவம் பெறுவனவாகவுமுள்ளன. ஆயினும் பெண்ணுணர்வு போன்ற செயற்பாடுகள் நிச்சயமற்று நிற்கின்றன. சிம்பன்சியில் இந்நிலை இன்னமும் மாறுதலானது. இங்கே வேறுபாடுகள் குறைவு அத்துடன் நடத்தைகளும் துலக்கமாக இல்லை. ஹங்குட்டான் பாரிய வேறுபாடுகளைக் காட்டுகிறபொழுதிலும் பெரிய அளவினையுடைய ஆண் இங்கு தலைமைத்துவமோ, மேலாதிக்கமோ பெறுவதில்லை. சிப்பன்களில் வேறுபாடு மிகக் குறைவு, அத்துடன் இவை கூட்டங்களாகப் பெயர்வது இல்லை. ஆகவே உருவத்தில் பெருத்திருத்தல் மேலாதிக்கத்துடனும், பொல்லாத்தன்மையுடனும் எப்பொழுதும் தொடர்புடையது எனக் கூறுவதிற்கில்லை. சாந்தத்தன்மை பொருந்திய மேலாதிக்கமுடைய ஆண்களும் காணப்படுகின்றன. தலபொயின் (Talapo-ins) போன்ற சேர்கோபித்தெசிங்ஸ்களில் (Circopithecines) வேறுபாடுகள் இருந்த பொழுதிலும் பெண் ஆணை மாற்றீடு செய்யக்கூடிய நிலை காணப்படுகிறது. கலிசபஸ் (Callicebus), ஆடிஸ் (Aotus) போன்றவற்றில் குட்டிப் பராமரிப்பு பெருமளவில் ஆண்களாலேயே வழங்கப்படுகின்றது.

லைலா லைபோவிற்ஸ் (Lila liebowitz) சில இனங்களில் காணப்படும் ஆண்களில் பெரிய உருவத்திற்கு அவற்றின் இரைதேடு பழக்கத்தினைக் குறிப்பிடுகிறார்கள் பெண்கள் குட்டிகளைப் பராமரிப்பதற்காக தமது இரைதேடலையும் குறுகிய நிலப்பரப்புக்குள் மேற்கொள்ளும் வேளை ஆண்கள் பரந்த நிலப்பரப்பில் இரையைத் தேடுகின்றன. ஆகவே, இவை பல எதிரிகளை சந்திக்க நேருகிறது இவற்றிற்கான இசைவாக்கமே இப்பெரிய உருவ அமைப்பு என அவர் கருதுகிறார். இவ்வுருவ அமைப்பு சம்பந்தமாக இன்னுமொரு கருதுகோள் யாதெனில் பெரிய உறுப்பினர்கள் தொடர்ந்து கர்ப்பந்தரிப்பதனல் குட்டியினதும் அவற்றின உயர் வாழ்விற்காக அவை தமது அளவுகளைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு சக்தி நிறைந்த உணவு வகைகளை நாடுகின்றன. ஆனல், ஆண் உறுப்பினர்கள தரம் குறைந்த உணவை அதிகளவில் உட்கொள்வதனல்,

இவற்றிற்கு பெரிய உணவுத்தொகுதி தேவைப்படுகின்றது என்பதாகும் கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் நோக்கும் பொழுது நடத்தைத் கோலங்களினதும் நிலையற்ற தன்மையும் பால் வேறுபாடு எப்பொழுதும் மேலாதிக்கத்துடனும் தலைமைத்வத்துடனும் பெண்ணுகர்வுடனும் பொல்லாத்தன்மையுடனும் தொடர்பற்றது என்பதுவும் புலனாகும். நடத்தைகளில இந்த நிச்சயமற்றதன்மை உயிரினவியல் நிர்ணயம் என்ற நோக்கிலும் உயிரினவியல் சாததியப்பாடு எப்படி அமைகிறது என்ற கேள்வியையே எம்முள் எழுபபுகிறது. உயிரினவியல் சாத்தியப்பாடு என்று நோக்குகையில் சமூக உயிரினவியலாளர்களால் முன்வைக்கப்பட்ட உயிரினவியல் நிர்ணயததிலும் பார்க்க அதிக நடத்தைக் கோலச் சாத்தியத்தை குறிப்பதாக அமைகிறது. மனிதன் சிறப்படைந்த ஓர் பிறைமேற் என்ற நோக்கில் இநத நிர்ணயததன்மையிலும் பார்க்க உயிரினவியல் சாத்தியப்பாடு கேள்வியே முதனமை பெறுகின்றது. சிறப்பெய்திய என்ற சொல் மிகையாகச் சிறப்பெய்தலைப்பறறி சாதாரணமாக இசைவாக்கமடையும் தன்மையாகவும் புதிய சூழ்நிலைகளைச் சமாளிக்கும் திறனையும் குறிக்கவே பாவிக்கப்படுகிறது. உயிரினவியல நிர்ணயம் எம்மை ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்த விளைகிறது ஆனால், உயிரினவியல் சாத்தியப்பாடோ எமது திறன்களின் அடிபபடையில் புதிய பரிணாமங்களை கண்டடையச் செய்கிறது.

ஆயினும், சில கருது கோள்களே முக்கியத்துவம் பெறுகின்றன. தெரிவு செய்யப்பட்ட தரவுகளே பாவிக்கபபடுகின்றன. இவையெல்லாம் விஞ்ஞான பாரம்பரியத்தில் ஆய்வுததன்மையிலும் பார்க்க அதன் பக்கச்சாரபு நிலையினையே எடுத்துக்காட்டுகின்றது. இதனால், எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம். உதாரணமாக பால் வேறுபாடும் நுண்ணறிவுத்திறனும், கடின வேலைகளைச் செய்யும் ஆற்றல் சார்பளவும் அதே பக்கச் சார்பில் பரிமாணங்களே. மண்டையோட்டின் அளவிற்கும் நுண்ணறிவிற்குமான தொடர்பைப் பற்றிய கருதுகோளை நோக்குகையில் எமக்கு இந்த சார்புநிலை புலப்படும். மனிதனது மூளை அளவானது உடற்பருமனுடன் ஒப்பிடும்போது மிகப்பெரியது. மனித இனங்களுக்கிடையேயும் பால் இனங்களுக்கிடையேயும மூளையின் அளவிற்கும் உடற்பருமனுக்குமிடையேயான விகிதம் ஏறக்குறைய சமனாகும். கடந்த நூற்றாண்டில் மண்டையோட்டு அளவியல் (Cranwmetry) விஞ்ஞான ரீதியில் மிகவும் பிரபல்யமடைந்திருந்தது. இம்முறையில் மண்டையோட்டின் அளவுகள் இனங்களுக்கிடையேயும், பால்களுக்கிடையேயும் வேறுபட்டிருப்பது காட்டப்பட்டது. இதன்படி வெள்ளை இனவகை ஆண்கள் மிகவும் பெரிய மண்டையோட்டையும் ஏனைய இனமும் பெண்ணும் ஆண்களுக்கு அடுத்த படிகளிலும் இருந்தார்கள். அமெரிக்காவைச் சேர்ந்த மோடனும் (Morton) பிரான்சைச் சேர்ந்த புரோகாவும் (Broca) இக்கருத்தை முன்வைத்தவர்களில் முக்கியமானவர்களாவர். ஈற்றில் மோடனின் தரவுகள் அவரை அறியாமல் அவரெடுத்த சில அணுகுமுறைகள் அக்காலத்தில் பிரபல்யமாகக் கொள்ளப்பட்ட இக்கருத்தை விஞ்ஞானபூர்வமானதாக்குவதற்கு பயன்பட்டதாக அறியப்பட்டது. ஆயினும் அவர் அடிப்படையாக மனித பருமனுக்கும் மூளையின் அளவிற்குமிடையிலான தொடர்பை கருத்திற் கொள்ளத் தவறிவிட்டார். விஞ்ஞான ரீதியான ஒப்பளவுக்கு அடிப்படையான அளவுகள் உபயோகமற்றவை அததுடன் உடற்பருமனுக்கும் மூளையினளவிற்குமான விகிதத்தில் இனங்களுக்கிடையிலும் பால்களுக்கிடையிலும் குறிப்பிடக்கூடியளவு வேறுபாடு இல்லை என்பது விஞ்ஞான ரீதியாக நிறுவப்பட்டுள்ளது. இன்னுமொரு முக்கிய அம்சம் இம் மண்டையோட்டு அளவில் காலனிததுவ ஆட்சியில் பொற்காலங்களிலேயே பிரபல்யம் பெறறு வந்தமையாகும.

மண்டையோட்டு அளவில் தனது போலிஸ் தானததை இழந்த பின்பு பல்வேறு வகைப்பட்ட நுண்ணறிவுத்திறன் சோதனைகள் பிரபல்யமடைந்தன. நுண்ணறிவானது பரம்பரையாக கடத்தப்படுவதும், ஒருவரில் இயல்பாகவே காணப்படும் ஓர் குணதிசய

மாகவும் கருதப்பட்டது. S.J. கோல்ட் (Gould) என்பவர் தனது 'The mismeasure of man' என்ற நூலில் நுண்ணறிவு சோதனைகளைப்பற்றிக் குறிப்பிடுகையில் ''எவ்வளவு தான் கணிதவியல் நுணுக்கத்துடன் செய்யப்பட்டாலும் மனிதர்களை ஓர் பரிணும நுண்ணறிவுத் திறனை வைத்து வகைப்படுத்சல் ஒரு வகையான இனமுற்சார்பு (Prejudice) குறிப்பாகவே அமையும்' எனக் கூறுகிருர். பல்வேறுபட்ட கலாச்சாரங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளினடிப்படையில் நோக்குகையில் கடின வேலைகள் எனப்படுபவை பால் அடிப்படையில் விரிக்கப்பட்டதல்ல என்பது புலனுகின்றது. ஆனுல், இவை சார்ந்த கருதுகோள்கள் இப்படியான மாறிகளை புறக்கணித்தே பெறப்பட்டுள்ளது. அத்துடன் பெண் விலங்கின் உடலுக்கும் குட்டியின் அளவிற்கும் நேரடியான தொடர்புண்டு. இடுப்பெண்பில் காணப்படும் அளவு வேறுபாடுகள் குட்டியின் அளவிலும் தங்கியுள்ளது. சிறிய குட்டிகளை ஈனும் விலங்குகளில் ஆண்பெண் இடுப்பென்பிற்கிடையிலான வேறுபாடு குறைவாகவும் பெரிய குட்டிகளை ஈனும் விலங்குகளில் கூடுதலாகவும் காணப்படுகின்றது. இது பிறைமேற்றுகளிலிருந்து பெறப்பட்ட தரவுகளிலிருந்து எடுக்கப்பட்ட முடிவாகும்.

## சமூக உயிரியலும் பெண்களின் நிலையும்

சமூக உயிரினவியலாளர்களால் முன்வைக்கப்பட்ட சில கருதுகோள்கள் முக்கியமாக மேலைத்தேயங்களில் கைகொள்ளப்பட்டுள்ளதும் சில கலாசசார வழக்கங்களை விஞ்ஞான பூர்வமானதாக எடுத்துக்காட்டவிளைகின்றன. சமூக உயிரியலில் கருதுகோள்கள் பிரபல்யமானவை. இவை டெஸ்மன்ட் மொறிஸ் (Desmond Morris), டைகர், பொக்ஸ் (Tiger & Fox), ஆட்ரே (Ardrey) போன்ற குணவியலபு ஆய்வாளர்களால் பிரபல்யப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

நடத்தைக்கோலங்கள் பரம்பரை அலகுகளால் தீர்மானிக்கப்பட்டு அவற்றில் தப்பிப் பிழைக்கும் (Survival) ஆற்றலால் அவை சந்ததிகளில் பேணப்பட்டு வருவதாக இக்கருதுகோள்கள் கூறுகின்றன. இவை முக்கியமாக எறும்புகள், தேனிக்கள் போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து மனித நடத்தைகளின் அவதானிப்புக்களிலிருந்தும் பெறப்பட்டவை. சமூக உயிரியலாளர்களில் முசகியமாக குறிப்பிடக்கூடியவர் E.O வில்சன் (E.O. Wilsan) ஆவர். அவர் தனது 1975ல் வெளியிடப்பட்ட 'சமூக உயிரியல்' என்ற நூலில் எறும்பு, தேனிக்கள், வாபஸ் போன்றவற்றின் நடத்தை பற்றிய ஆய்வுகளைத் தந்துள்ளார், இவற்றின் நடத்தையை மனித நடத்தையுடன் ஒப்புநோக்கி எழுதியமை இவரது புகழுக்கு முக்கிய காரணம். இவர் பொல்லாத்தன்மை (Aggression), தேசியவாதம் போன்ற மனித செயற்பாடுகளுக்கு பரம்பரைக் காரணிகள் உண்டு எனக்கருதுகிருர். இப்படிப்பட்ட நடத்தைகளுக்கு எறும்பு போன்ற பிராணிகளிலும் பரம்பரைக் காரணிகள் உண்டு எனக் காட்டியுள்ளார். இயற்கைத்தேர்வினூடாக தப்பிப் பிழைத்தாலும் மனிதரிலும் இப்படிப்பட்ட இயல்புகள் பரம்பரையலகுகளில் காணப்படுவதாக வில்சன் கருதுகிருர். எறும்பில் Ahruism திற்கான பரம்பரையலகு விபரிப்பது அவருக்கு சிக்கலாக இருந்தபொழுதிலும் தப்பிப்பிழைத்தலுக்கான தேவை அடிப்படையில் அதனையும் விளக்குகிருர்.

இப்படியான கருதுகோள்கள் சமுதாயத்தில் இருந்த கருத்துக்கள், வழக்கங்கள் போன்றவற்றை பலப்படுத்தியதால் மிகவும் பிரபல்யமடைந்தன. இதனடிப்படையில் பெண்மைத் தன்மை, வெளிநாட்டவரை வெறுத்தல் எல்லாமே நியாயப்படுத்தப்படுகின்றன. இப்படிப்பட்ட குணுதிசயங்களின் வஞ்சையான வெளிப்பாடு ஏற்படுத்தும் மனிதத்தன்மை அறநெறி பற்றிய பிரச்சனைகளிலிருந்து அந்தச் சமூகம் எளிதாக தப்பிக்கொள்கிறது. அப்படியிருப்பினும் உயிரினவியலாளர்கள் இன்னமும் நடத்தைகளில் ஒபாய்வுகளையும் நியாயப்படுததல்களையும் நடததிககொண்டேயிருக்கிருர்கள். எமது ஆய்வுமுறைகளைப் பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இருவேறாக விளங்கியவர்கள் பொல்லாத் தன்மையும் பிரதேச நடத்தையையும் காட்டினால் அவை இரண்டும் ஒரே காரணத்தால் எழுந்தவை என எப்படி கருதக்கூடும்?

இப்பிரச்சினைகளை கூர்ப்புக் கொள்கைகளிலும் எழுகிறது. அது உருவவியல் ஒப்பாய்வாய்விலும் சரி நடத்தையியல் ஒப்பாய்வாயிலும் சரி கூர்ப்பு ஆய்வாளர்கள் தங்கள் ஒப்பாய்வில் அமைப்பொத்த அங்கங்களை அதாவது ஒரு குறித்த விலங்கினத்திலிருந்த பரிணாமவளர்ச்சியில் வெவ்வேறாக விகாரமடைந்த அங்கங்களையும் செயலொத்த அங்கங்களையும் அதாவது, ஒரே செயற்பாட்டை செய்யும் அங்கங்களையும் உதாரணம் — பறவைகளின் சிறகுகளையும் பூச்சிகளின் சிறகுகளையும் ஒப்பாய்கிறார்கள்.

பறவைகளின் சிறகுகளும் வெளவாலின் செட்டைகளும் நாலு அவயவிலங்குகளின் முன்னவயங்களின் பரிணாம வளர்ச்சியால் வந்தவை. ஆனால், பூச்சிகளின் இறக்கையானது இப்படிப்பட்ட ஒரு பொதுவான மூதாதையரிலிருநது பெறப்படாவிடினும் பறத்தலில் உதவுகின்றன அமைப்பொப்பு கூர்ப்பியலில் ஓர் அடிப்படையான கொள்கை இது வெவ்வேறு விலங்கினங்களிடையே காணப்படும் அங்கங்களில் பொதுவான பரம்பரைத் தன்மை பற்றிய முடிவுகளை எடுக்க உதவுகிறது இவ்வாறே விலங்கினது நடத்தையும், மனித நடத்தையும் இரண்டும் ஒரு குறித்த மூதாதையரிலிருந்து வியாபித்திருந்ததாகவே ஒப்புநோக்கலாம். எந்தவொரு ஆராய்ச்சியும் இதுவரை நடத்தைகள் ஒரு பொதுவான மூதாதையரிலிருந்து வந்ததெனக் கூறவில்லை. ஆகவே, சமூக உயிரியலாளர்கள் முன்வைக்கும் அவதானங்கள் சிலவேளைகளில் முக்கியமானதாக இருந்தாலும் இவற்றினடிப்படையில் எடுக்கப்பட்டிருந்தும் முடிவுகள் விஞ்ஞானபூர்வமற்றவை. ஒத்திருக்கும் நடத்தைகளுக்குக்கூட பரம்பரை நிர்ணயம் இருப்பதாகக் கூறிவிடமுடியது. லோகஸ்டின் (Lewontin) கூறினார்'' மனித இனங்கள் சமையல் செய்வது அவற்றிற்கு சமையல் செய்வதற்கான பரம்பரையலகு இருப்பதனால் அல்ல. ஆனால் பௌதிகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பரம்பரையலகுகள் இருப்பதனாலேயாகும்.'' சமூக உயிரியலாளர்கள் தரவுகளைப் பெறும் விதத்திலும் அவர்கள் தரவுகளை நோக்கும் விதத்திலும் அவர்களது சார்புத்தன்மை நன்கே தெரிகிறது. உதாரணமாக பாலியல் தொடர்புகளுக்கு அவர்களது விளக்கத்தை நோக்குவோம். ஆண்கள் லட்சக்கணக்கான விந்துகளை உற்பத்தி செய்வதால் அவர்கள் பல பிள்ளைகளை உருவாக்கும் சாத்தியக் கூறு இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு பல பெண்களை நாடும் இயல்பும் பாரம்பரியத்திலே இருக்கிறது. ஆனால் பெண்களோ மிகக் குறைந்தளவு புணரிகளையே உற்பத்தி செய்கிறார்கள். அதனால், அவர்கள் ஒரு பாலியல் துணையுடனேயே வாழ்வில் இணைய விரும்புகிறார்கள். இதுவும் பரம்பரை அலகுகளின் நிர்ணயமே எனக் கூறுகிறார்கள். இதனால், பெண்கள் தங்களையும் தம் குழந்தைகளையும் பாதுகாக்கக்கூடிய செல்வம் படைத்த கல்வியில் உயர்ந்த ஆண்களைத் தேடுவதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஒரு மில்லி லீற்றரில் 10 கோடி விந்துகள் காணப்படுகின்றன. இதன் நோக்கம் கருக்கட்டலுக்கான சாத்தியக் கூறுகளை அதிகரிப்பதேயாகும். அத்துடன் பெண் புணரிகள் (முட்டை) அளவில் பெருத்து சேமிப்புணவைக் கொண்டிருக்கின்றன. இப்பெரிய பெண் புணரியானது சிறிது தூரமே அசைகிறது. ஆனால் விந்துகள் பெண் இனப்பெருக்கத் தொகுதியில் நீண்ட தூரம் அசைகின்றது. அத்துடன் பெண் புணரியானது 28 நாட்களுக்கு ஒரு தடவையே வெளிவிடப்படுகிறது. தக்க தருணத்தில் விந்து பெண்புணரியை அடையும் பட்சத்திலேயே கருக்கட்டல் நிகழ்கிறது. இதுதான் பல விந்துகள் உற்பத்தியாவதன நோக்கமானதும் நோட்குகையில் உயிரினவியலாளரது கருத்து எத்துணை வேறுபாடுடையது என்பது புலனாகும்.

தொழில் ரீதியில் ஏற்படும் பாகுபாடுகளுக்கு கூட இவர்கள் இத்தகைய உயிரியல் பாரம்பரியவியல் விளக்கத்தைக் கொடுக்

கிறார்கள். வில்சன் இதனைக் கூறுகையில் வேட்டுவச் சமுதாயங்களில் ஆண்கள் வேட்டையாடுகிறார்கள். பெண்கள் வீட்டிலிருக்கிறார்கள். இதே தன்மையாக சார்பு நிலைகள் விவசாய கைத்தொழில் சமூகங்களிலும் காணப்படுகின்றது. இவை எல்லாம் பாரம்பரியவியல் அடிப்படையிலேயே ஏற்படுவதாக தோன்றுகிறது. என்னுடைய கருத்தில் இந்த பாரம்பரிய நிர்ணயனம் எதிர்கால சந்ததியில் பரிமாணத்தில் அதிகரித்து தொழில் துறையில் பாரிய இடைவெளிகளை ஏற்படுத்தும் கல்வியில் சமநிலை இருந்தாலும் எந்த துறைகளுக்கும் செல்லக்கூடிய வாய்ப்பு இருந்தாலும் ஆண்கள் தொடர்ந்து அரசியலில், வர்த்தக, விஞ்ஞான துறைகளில் முதன்மை பெறுகிறார்கள்.

மேற்கூறிய கருத்து சரித்திரத்திற்கு முற்பட்டவை. தொழிற்பாகுபாட்டை பாரம்பரியவியலில் விளைவாகக் காட்ட முனைவதனை அவதானிக்கலாம். ஆயினும், இக்கருத்து சில தரவுகளின் அடிப்படையிலேயே எடுக்கப் படுகின்றது. இங்கு பல்வேறுபட்ட கலாச்சார அமைப்புக்களில் தொழிற்பாகுபாடு ஆராயப்படவில்லை. அத்துடன் கலாசார நடத்தையில் கூட கருத்திலெடுக்கப் படவில்லை. ஈவ்லின் ரீட் ஆண் பெண் நிலை பற்றி பல்வேறுபட்ட கலாச்சாரங்கள், பல்வேறுபட்ட சமூக நடத்தைகள், பல்வேறுபட்ட சமூக அமைப்புகள் போன்றவற்றை ஆராய்கிறார். இதில் ஆண்களைத் தலைமையாகக் கொண்ட சமுதாயங்களும் பெண்களைத் தலைமையாகக் கொண்ட சமுதாயங்களும், பெண்களை கணவனாகக் கொள்ளும் சமுதாயங்கள் உள்ளடங்கி இருக்கின்றன. இரண்டாவதாக விவசாயத்திற்கும் பெண்களுக்கும் கிட்டிய தொடர்புண்டு. சமுதாயங்களில் வளர்ச்சி பெண்களை சேகரிப்பாளர்களாகவும் சமமானவையாகவும் கொண்ட விவசாய வளர்ச்சியைக் காட்டுகின்றது. இம் முடிவுகள் பல்வேறுபட்ட சமுதாயங்களில் சமய கலாச்சார பாரம்பரியங்களின் ஆய்வுகளிலிருந்து தரப்பட்டவை. விவசாய வளர்ச்சியின் பிற்பட்ட காலங்களில், மேலதிக உற்பத்தியுடனும், அசையும் சொத்துகளின் தோற்றத்துடனும் சரித்திரத்தில் பெண்களின் சமூக வீழ்ச்சி ஆரம்பமாகிறது.

Dr. ராஜினி திராணகம எழுதிய "BIOLOGICAL DETERMINISM AND WOMEN'S POSITION" என்ற ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்.

## சிரிக்க மட்டும்

❀ டொக்ரரிடம் முதலில் என் ஞாபக மறதிபற்றி சொன்னேன் அவர் முதலில் என்னிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டார்.

❀ ஒரு பெண்ணின் துணிகளைக் களையும்படி சொல்லி பின்னர் அதற்கான 'பில்' லை அவள் கணவனுக்கு அனுப்பக்கூடிய ஒரே மனிதர், டொக்ரர் ஒருவர்தான்.

❀ நான் ஒரு டொக்டராக வரவிரும்புகிறேன், என் கையெழுத்து அதற்குப் பொருத்தமாயிருப்பதால்.

❀ என் மகனை ஒரு டொக்ரராக்க என்னிடம் இருந்ததை எல்லாம் தியாகம் செய்தேன். இப்ப அவன் சொல்லுகிறான், நான் புகைத்தலை விட்டுவிட வேணடுமாம.

❀ என் நரம்புகளை அமைதிப்படுத்த நான் குடிக்கிறேன் என்றேன் டொக்ரரிடம். அவர் கேட்டார்; "என் நரம்புகள் சத்தமிடுகின்றனவா"?

❀ டொக்ரரை எட்ட வைக்க தினம் ஒரு அப்பிள் போதுமென்றால் நேர்ஸை தூர வைக்க எத்தனை அப்பிள் தேவை?

❀ "டொக்ரர் என் இடது கால் நோகுது நடக்க முடியவில்லை......"
"வலது காலால் முயற்சித்துப் பார்......"

❀ "இளைஞனே! உன் மனைவியின் அன்பான கவனிப்பினால்தான் நீ சுகமடைந்தாய்."
"நன்றி டொக்ரர், நான் அவள் பெயருக்கே 'செக்' எழுதிவிடுகிறேன்."

❀ "டொக்ரர் நான் தற்கொலை செய்து கொள்வதுபோல் அடிக்கடி உணர்கிறேன்."
"அதை என்னிடம் விட்டுவிடு"

❀ "ஹலோ டொக்ரர் எனக்கு நித்திரை வருகுதில்லை. ...ஏதாவது செய்ய முடியுமா?"
"போனைப் பிடித்துக் கொள்ளுங்க...ஒரு தாலாட்டுப் பாடுகிறேன்."

தொகுப்பு: எஸ். பி. கே.

ராகுல சாங்கிருத்தியனின்

# வால்கா விலிருந்து கங்கை வரை

## என்ற நூலிலிருந்து ...

"கடந்த மகாயுத்தம் (1914–1918) உலகத்திலேயே ஒரு பெரிய நெருப்பை கொளுத்திவிட்டது. சாம்ராஜ்யக் கொள்கையினாலும், ஏராளமாக குவிந்திருக்கும் முதலுக்கும், உற்பத்திபொருளுக்கும் பாதுகாப்பான சந்தையைப் பிடித்து வைத்துக் கொள்ளவேண்டும் அல்லது பறித்துக் கொள்ளவேண்டும் என்ற ஆவலினாலுமே அந்த யுத்தம் தோன்றிற்று. ஜெர்மனி புதிய குடியேற்றங்களை வேண்டிற்று, ஆனால் பூவுலகமோ ஏற்கனவே பிரிக்கப்பட்டு முடிந்துவிட்டது. ஆகவே, அவைகளைப் போராடித்தான் பறித்துக்கொள்ளவேண்டும். குடியேற்றநாடுகளின் சொந்தக்காரர்களான இங்கிலாந்தோடும், பிரான்ஸோடும், ஜெர்மனி யுத்தம் தொடங்கிற்று. யுத்தத்தில் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டுவிட்டதென்றாலும், சாம்ராஜ்யக் கொள்கையின் வேரையே அசைத்தெடுக்கும் ஒரு புதிய விரோத சக்தி உற்பத்தியாகிவிட்டது—பொருள்களை இலாபத்திற்காக உற்பத்தி செய்யக்கூடாது. மனித சமுதாயத்தைச் சுகமாகவும், கௌரவமாகவும் வாழ்விக்கச் செய்வதற்காக உற்பத்தி செய்யப்படவேண்டும் என்ற பொதுவுடைமைக்கொள்கை தோன்றிவிட்டது. இயந்திரங்கள் நாளந்தோறும் வளர்ச்சியடையும் தொழிற்சாலைகளும் பெருகும். அதன் மூலம் பொருளுற்பத்தியும் அதிகரிக்கும். அதற்குத் தக்கபடி அதிகமான சந்தைகளும் வேண்டும். மேலும் பொருளை வாங்குவதற்குப் போதுமான பணமும் இருக்க வேண்டும். பணம் எவ்வளவு குறைவாக இருக்கிறதோ, அவ்வளவு குறைவாகவே பொருளும் வாங்கப்படும். அதிகப் பொருள்கள் கடைகளிலோ, அல்லது கிடங்குகளிலோ தேங்கக் கிடக்கும். அதனால் விலைவாசி மந்தம் ஏற்படும். உற்பத்தியைக் குறைக்க வேண்டும். தொழிற்சாலைகள் மூடப்படும். தொழிலாளர்கள் வேலையற்றவர்களாவார்கள். வாங்கும்சக்தி இன்னும் குறையும். மறுபடியும் இந்த விஷச்சக்கரம்தான். அதற்காகத்தான் இந்தப் புதிய பொதுவுடைமைக் கொள்கை, லாபத்தின் ஆசையை விட்டுவிடுங்கள்? தங்கள் நாட்டை மட்டுமோ அல்லது அகில உலகத்தையுமோ ஒரே குடும்பமாகக் கருதி அதன் தேவைக்கேற்ப உற்பத்தி செய்யுங்கள்; ஒவ்வொரு மனிதனிடமும் அவன் சக்திக்கேற்ப வேலை வாங்குங்கள், அவனுடைய தேவைக்கேற்ப அவசியமான பொருள்களைக் கொடுங்கள், எல்லோருடைய தேவையையும் பூர்த்தி செய்யக்கூடிய அளவு உற்பத்திகள் பெருகாதவரை உழைப்பிற்கேற்பக் கூலி கொடுங்கள் என்று உபதேசிக்கின்றது. நிலமும், தொழிற்சாலைகளும் தனிமனிதனுக்குச் சொந்தமாய் இருக்காமல், தேசத்தின் பொதுச் சொத்தாக ஆகும் பொழுதுதான் இது நிறைவேறும்..."

"...சுரண்டுகிறவர்களுக்குப் பிடிக்காததெல்லாம், அன்னியம்—நடக்க முடியாதது என்று ஆகிவிடுகிறது. முதலாளிகளைக் கோடீஸ்வரர்களாக ஆக்கிவிட்ட சீனி மில்கள், அன்னிய நாட்டுப் பொருளல்ல! துணிமில், சணல்மில், காகிதமில், சிமெண்டுத் தொழிற்சாலை, இரும்புத் தொழிற்சாலை, சைக்கிள், மோட்டார், பேனா, செப்புவரை செய்யும் அநேக இயந்திரங்கள், இவைகளெல்லாம் லட்சக்கணக்காக லாபத்தைக் கொடுப்பதால் அன்னிய நாட்டுப் பொருளாக இல்லை! ரேடியோ, டெலிவிஷன், பிலிம் போன்றவை, முதலாளிகளின் சட்டைப்பையைச் சப்தமில்லாமல் நிரப்பி விடுவதால், அவைகளின் அன்னியத்தன்மை போய்விடுகிறது! சுரண்டுவதற்குச் சாதகமாகவுள்ள அன்னியநாட்டு இயந்திரங்களெல்லாம் சுதேசியாகி விடுகிறது! ஆனால், சுரண்டலை ஒழிக்கும் கருவியான பொது உடைமைக் கொள்கை மட்டும், நிரந்தரமாக அன்னிய நாட்டுச் சரக்காகவே இருக்கிறது..."

# With the Best Compliments From

## A Finance Company Staying Ahead While We Take Care of You

WHEN YOU'RE MAKING YOUR OWN PERSONAL DECISION, YOU CAN ALSO MAKE A PROFESSIONAL CHOICE.

# SHABRA

Our Services aim to Protect and Promote the growth of your assets.
INVEST WITH US

* TERM DEPOSITS.

| Period | Monthly | Maturity |
|---|---|---|
| 3 Months | — | 15% |
| 6 ,, | 15% | 17% |
| 12 ,, | 18% | 20% |
| 24 ,, | 21% | 23% |
| 36 ,, | 22% | 24% |

* CERTIFICATE OF DEPOSITS.
* INVESTMENT SAVINGS DEPOSITS.

For Further Details Please Contact:-

**SHABRA UNICO FINANCE LIMITED.**

61, New Bullers Road,
Colombo - 4.
T. P. Nos:- 589310 & 500576.

207, Power House Road,
Jaffna
T. P. Nos:- 22073 & 24805.

" மானிட வாழ்வின் விழுமியமே இந்த
மண்ணின் வளத்திற்கு ' ஜீவசக்தி '
தானிருள் சூழினும் தண்ணொளியே தரும்
வெண்ணிலவின் ஒளிபோ லொளிரும்

கூழைக் குடித்துக் குவலய பாரத்தை
நாளும் சுமந்துழைத் தோடாகி
ஏழையராகிச் சுருண்டு கிடப்பவர்
ஏற்றத்தை நாட்டுதல் ' ஜீவசக்தி ' "

**T. M. B. & CO.**
121, 5th Cross Street,
Colombo - 11

